Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 36 | சுடர்: 28 | கதிர்: 288 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 25, செவ்வாய் 10.09.2013


ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்
X 5

## நவிக்கு ஆதரவாக ஜெனிவாவில் நேற்று திரண்டன உலக நாடுகள்

### அமெ., ஐரோப்பிய ஒன்றியம், ஆஸி., ஜேர்மனி இணைந்து தாக்குதல்

ஜெனிவா , செப். 10
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவ நீதம்பிள்ளையை சந்தித்த மக்கள் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகி றார்கள் என எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஜெனிவாவில் இலங்கை உலகநாடுகளின் பலத்த கண்டனத்துக்குள்ளாகியது.
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நேற்றைய அமர்வில் இக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இப்பேர வையின் உறுப்பினர்களில் அநேகர் இலங்கையின் போக்கைக் காரசாரமாக விமர்சித்தனர்.



மனித உரிமைகள் சம் 25

## தெளிவான தகவல் தாருங்கள்

ஜெனிவா,செப் 10
மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூகத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால் இன்றேல் அச்சுறுத்தல் விடப்பட்டிருந்தால் அவை தொடர்பில் தெளிவான தகவலை வழங்குமாறு இலங்கை கோரியுள்ளது.



ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடமே இலங்கை நேற்றுத் திங்கட்கிழமை இவ்வாறு கோரி யுள்ளது.
ஐ.நாவின் இலங்கைக்கான தூதுவரும் இலங்கை 25

உத்தரபிரதேசத்தில் பெரும் கலவரம் 10

மூன்று நாள்களே சிரிய நடவடிக்கை 11

வாகை சூடியது ஊரெழு றோயல் 26

ஆஸி. இலகு வெற்றி வீழ்ந்தது இங்கிலாந்து 27

# பொறுப்புக்கூறலில் இருந்து தப்பவே முடியாது இலங்கை

## சாட்சிகள் அச்சுறுத்தப்படுவதைக் கண்டித்து ஜெனிவாவில் நவநீதம்பிள்ளை கடும் சீற்றம்

ஜெனிவா, செப்ரெம்பர் 10
மனித உரிமை மீறல் விவகாரம் தொடர்பில் இலங்கையை நேற்றுக் கடுமையாகக் கண்டித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை அரசு சட்டம் - ஒழுங்கை பேணுவதில் பொறுப்புக் கூறியே ஆகவேண்டும் என்றும் இடித்துரைத்தார்.
இலங்கையில் மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்படுவதற்கும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், தன்னைச் சந்தித்த சமூகப் பிரதிநிதிகள் அரச படைகளால் அச்சுறுத்தப்படுவதற்கும் நவநீதம்பிள்ளை கண்டனம் தெரிவித்தார்.
ஜெனிவாவில் நேற்று ஆரம்பமான ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 24 ஆவது கூட்டத்தொடரில் ஆரம்ப உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 24ஆவது கூட்டத் தொடர் ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தலைமையகத்தில் ஜெனிவா நேரப்படி நேற்று முற்பகல் 10.12 மணியளவில் ஆரம்பமாகியது.
ஹுஜஐநா மனிதஉரிமை 25



## கூட்டமைப்பினர் மீது நேற்று வேலணையில் தாக்குதல்

யாழ்ப்பாணம்,செப் 10
தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் வேலணை அம்பிகை நகரில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளனர்.
வடமாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளரான விந்தன் கனகரத்தினத்துக்கு ஆதரவாக நேற்று வேலணை அம்பிகை நகர் பகுதியில் ஆதரவாளர்கள் சிலர் பரப்புரையில் ஈடுபட்டிருந்தனர்.
இந்த வேளையில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ என்பவற்றில் வந்திறங்கிய மூன்று பேர் அடங்கிய குழுவினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.
"எனது ஆதரவாளர்களைத் தாக்கிய குழுவினர் தேர்தல் பிரசுரங்களைப் பறித்துக் கிழித் ததுடன் மோசமான வார்த்தைப் பிரயோகங்களையும் 25

## தபால் மூல வாக்களிப்பு நேற்று சுமுகம்

யாழ்ப்பாணம்,செப் 10
வடமாகாண சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றுத் திங்கள்கிழமை வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் குழப்பமின்றி நடைபெற்றது.
அத்துடன் பெரும்பாலானவர்கள் நேற்றைய தினமே வாக்களித்துள்ளனர் என வடக்கு உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.
வடமாகாண சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமாகியது. இம்முறை 14 ஆயிரத்து 421 பேர் வடக்கில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.
நேற்று ஆரம்பமா கிய தபால் மூல வாக் களிப்பில் அரச ஊழியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். சகல திணைக் களங்களிலும் சுமுகமாக வாக்களிப்பு இடம்பெற்றுள்ளது.
தபால் மூலவாக் களிப்புக்கு விண்ணப் பித்தவர்களில் 70 சதவீ 25

## தபால் வாக்களிப்பில் பிரசாரம் வெளியேற்றப்பட்டார் வேட்பாளர்

### நேற்று கோண்டாவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம்,செப்.10
தபால் மூல வாக்களிப்பு இடம் பெற்றுக்கொண்டிருந்த போது பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் தேர்தல் திணைக்களத்தினரால் வெளியேற்றப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுக் கோண்டாவிலில் இடம்பெற்றது.
வடமாகாண சபைக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமானது.
கோண்டாவில் பஸ் டிப்போவிலும் தபால் மூல வாக்களிப்பு நேற்றுக் காலை ஆரம்பமாகி இடம்பெற்றது. 25

## கூட்டமைப்பு வேட்பாளர் கைதாகி விடுதலை

மாங்குளம்,செப் 10
கனகராயன்குளம் பகுதியில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியாமாவட்ட வேட்பாளர் ஒருவர் பொலிஸாரால் கைது 25

## தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறினார் சம்பிக்க

கொழும்பு,செப் 10
13 ஆவது திருத்தச்சட்டம் உட்பட அரசமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து ஜாதிக ஹெல உறுமய வெளியேறியுள்ளது. இதனை அக்கட்சியின் பொதுச்செயலாளர் சம்பிக்க ரணவக்க நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.
மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர், 13 ஆவது திருத்தச் சட்டத் தில் இருக்கும் ஐந்து அதிகாரங்களை நீக்குமாறு அரசிடம் ஹெல உறுமய வலியுறுத்தியிருந்தது. இதுதொடர்பில் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாததன் காரணமாகவே ஹெல உறுமய இந்த முடிவை எடுத்துள்ளது.
தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறினாலும் பிரிவினைவாத அதிகாரங்களுக்கு எதிராக தமது கட்சி தொடர்ந்தும் போராடும் என்று சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (து-சி)

## தேர்தல் விதிகளை மீறினார் பூநகரிக் கோட்ட அதிகாரி

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,செப் 10
வடமாகாண சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று நடைபெற்றபோது பூநகரிப் பாடசாலை ஒன்றில் வாக்களிப்பு நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்த கோட்டக்கல்வி அதிகாரி ஒருவர் தேர்தல் விதிமுறைகளை மீறி நடந்தார் எனக் 25

உங்கள் தெரிவு
முதன்மை வேட்பாளர்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
X 10
(ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்)
க.வி.விக்னேஸ்வரன்



இடம்பெயர்ந்தவர்கள் தமது இல்லங்களை கையேற்பது எப்போது?



சுய நிர்ணய உரிமையை வென்றெடுக்க

# நவியின் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இராஜதந்திரிகளுக்கு பீரிஸ் விளக்கம்



கொழும்பு,செப் 10

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீம்பிள்ளை இலங்கை அரசு மீது சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு நேற்றுக் கொழும்பில் விளக்கமளித்துள்ளார்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்த அமைச்சர் பீரிஸ், அரசின் சார்பில் இந்தத் தெளிவுப்படுத்தும் கூட்டத்தை நடத்தினார்.

நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் முன்னேற்றங்கள் தொடர்பான ஆய்வு அறிக்கையை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இந்தச் சந்திப்பின் போது இராஜதந்திரிகளுக்கு வழங்கியதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு , வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட் சிகளின் வேட்பாளர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை எனவும் அரிதாகச் சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளதாகவும் அவை பெரும் வன்முறைச் சம்பவங்கள் அல்ல எனவும் பீரிஸ் இங்கு கூறினார்.

விருப்பு வாக்குகளைப் பெறுவதற்கான ஆளும் கட்சியின் வேட்பாளர்களுக்கு இடையில் ஏற்படும் பொதுவான சம்பவங்கள் தொடர்பாகவே முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எதிர்க் கட்சிகள் தீவிரமான பிரசாரங்களில் ஈடுபடாததால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தேர்தலில் அரசின் அணுகுமுறையானது வெளிப்படையாகவும் தெளிவானதுமாக உள்ளது. கடந்த முறை நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல் போல் இன்றி, இம்முறை தேர்தல் ஆணையாளர் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை தேர்தலை கண்காணிக்க அழைத்துள்ளார். இந்தியாவில் இருந்து 5 பேரும், பாகிஸ்தானில் இருந்து 5 பேரும், பங்களாதேஷில் இருந்து 3 பேரும், நேபாளம், மாலைதீவுகளில் இருந்து தலா இரண்டு பேரும், ஆப்கானிஸ்தான் மற்றும் பூட்டான் நாடுகளில் இருந்து தலா ஒருவரும் தேர்தல் கண்காணிப்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். தெற்காசிய நாடுகளைக் கொண்ட இந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் குழுவின் தலைவராக இந்தியாவின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் என். கோபாலாசாமி நியமிக்கப்பட்டுள்ளார். என்றும் அங்கு கூறினார் பீரிஸ். (து)

## மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சுனிலா காலமானார்



கொழும்பு,செப் 10

பிரபல மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சுனிலா அபேயசேகரா தமது அறுபத்தொராவது வயதில் நேற்றுக் காலமானார்.

சிறுபான்மையினரின் உரிமைகள், பெண் உரிமைகள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக நீண்ட காலமாகக் குரல் கொடுத்து வந்தவர் அவர். சிறிது காலமாக அவர் புற்றுநோய் வாய்ப்பட்டிருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் அர்ப்பணிப்புடன் உழைத்தவர். எண்பதுகளில் உள்நாட்டுப் பிரச்சினை தீவிரமடைந்த காலத்தில், "இன்போம்" மனித உரிமைகள் இயக்கத்தை ஆரம்பித்து, இலங்கைப் பிரச்சினையின் உண்மையான தன்மைகளை உலக நாடுகளுக்கு எடுத்துரைத்தவர். இவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விருதைப்பெற்ற சிறப்புப் பெற்ற இலங்கையர் ஆவார்.

ஊடகவியல், தாய்மார்- மகள்மார் இயக்கங்களை ஆரம்பித்து அவர்களின் உரிமைகளுக்காகவும் உயர்ச்சிக்காகவும் கடுமையாகத் தொண்டாற்றிய பெண்மணி ஆவார். (அ)

## ரயிலில் வரும் தபால்

யாழ்ப்பாணம்,செப் 10

யாழ்.குடாநாட்டுக்கான வெளியூர் தபால் விநியோகம் அடுத்த வாரத்தில் இருந்து மிக விரைவாக இருக்கும் என்று பிரதம தபாலக அதிகாரி ஒருவர் கூறினார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி கிளிநொச்சி வரை ரயில்சேவை விஸ்தரிக்கப்படுவதை அடுத்துத் தபால் பொதிகளும் கிளிநொச்சிக்கு ரயிலில் எடுத்து வரப்படவுள்ளன.

கிளிநொச்சி ரயில் நிலை யத்தை வந்தடையும் தபால் ரயில் மூலம் தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டு அவை உட னடியாகவே வாகனம் மூலம் யாழ். பிரதம தபாலகத்துக்குக் கொண்டுவரப்படும்.

இந்தத் தபால்கள் உடனடியாகத் தரம்பிரிக்கப்பட்டு அன்றைய தினமே உரியவர்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

முன்னர் வடக்குக்கான தபால் கள் வவுனியாவுக்கே ரயில் மூலம் எடுத்துவரப்பட்டுப் பின்னர் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட. இவை மறுநாளே உரியவர்களுக்கு விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-17)

## நாட்டை பிரிக்கும் முயற்சியே கூட்டமைப்பின் விஞ்ஞாபனம்

### சாடுகிறார் அமைச்சர் ரட்ணசிறி

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இனவாத அறிக்கையாகும். மீண்டும் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தி நாட்டைப் பிரிக்கும் முயற்சியாகவே அந்த விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் அமைந்துள்ளன என்று கூறியுள்ளார் நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க. அந்த அறிக்கை தொடர்பில் சகலரும் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

களுத்துறையில் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சர் ரட்ணசிறி கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்த நாடு சகலருக்கும் உரித்துடையது. நாட்டை இன ரீதியாகப் பிரிக்கமுடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அந்த அறிக்கையில் தனி நாடு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கை இணைப்பது தொடர்பில் பேசப்பட்டுள்ளது. தன்னாட்சி தொடர்பில் பேசப்பட்டுள்ளது. அதிலிருந்து அவர்கள் என்ன கூறவிரும்புகின்றனர் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பைச் சேர்ந்த மற்றொருவர் ஆயுதத்தைக் கையில் எடுக்கவேண்டுமென்று கூறுகின்றார். இவ்வாறான நிலையில் நமக்குக்காண்பிக்கும் சமிக்ஞை சரியில்லை இவை தொடர்பில் நாமெல்லாம் விழிப்பாக இருக்க வேண்டும் என்றார். (து)

## தேர்தலில் ஆயுதப் பயன்பாடு அதிகரிப்பு எனக் குற்றச்சாட்டு

கொழும்பு,செப் 10

தேர்தலில் ஆயுதப் பயன்பாடு அதிகரித்துள்ளதாக கபே தெரிவித்துள்ளது. மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத் தில் அதிகளவில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

யாழ்ப்பாணம், நுவரெலியா, மாத்தளை, குருணாகல் போன்ற மாவட்டங்களிலும் ஆயுத வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தபால் மூல வாக்களிப்பு அறிவிக்கப்பட்டது முதல் சில பிரதேசங்களில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கண்டியில் நேற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளரின் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று கபே மேலும் கூறியுள்ளது.

இதேவேளை, மாத்தளையில் நேற்று ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (து)

## அமெரிக்கா - இலங்கை தளபதிகள் நேற்று சந்திப்பு



வெலிங்ரன்,செப் 10

இலங்கை இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்க அமெரிக்க இராணுவ பிரதானி ஜெனரல் ரெமோன் டி. ஒடியிரோனோவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இருதரப்பு முக்கியத்துவம் மற்றும் பரஸ்பர கருத்துபரிமாறல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நியூஸிலாந்தில் நடைபெறுகின்ற 8 ஆவது பசுபிக் இராணுவ பிரதானிகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இராணுவத் ஏபதி நியூஸிலாந்துக்குச் சென்றுள்ளார்.

இதன்போதே இருவருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (து)

## புராண படன நிறைவு இன்று

நீர்வேலி தெற்கு முருகையன் கோயிலில் இடம்பெற்று வந்த புராணபடன நிறைவும் விசேட பூசை வழிபாடுகளும் இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெறும். காலை 9 மணிக்கு விசேட பூசை அபிஷேகம் இடம்பெற்று புராணபடன நிறைவு நடை பெறும். (த-17)

## திருமலை மாணவர்கள் கொலை; சந்தேகநபர்கள் தொடர்ந்து மறியல்



திருமலை,செப். 10

2006ஆம் ஆண்டு திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள 12 அதிரடிப் படையினரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை நீதிவான் அஷ்ஹர் முன்னிலையில் குறித்த சந்தேகநபர்கள் நேற்றுத் திங்கட்கிழமை முன்னி லைப்படுத்தப்பட்டனர். இதன் போதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மாணவர்கள் கொலை தொடர்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் உட்பட 12 விசேட அதிரடிப் படையினர் சந்தேகத்தின் பேரில் கடந்த ஜுலை 5ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

## தேர்தல் பரப்புரையில் ஆளுநர்; உடன் தடுத்து நிறுத்துங்கள்

### சரவணபவன் எம்.பி. ஆணையாளருக்குக் கடிதம்

கொழும்பு, செப்.10

அரச தரப்பு தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து வடமாகாண ஆளுநரைத் தடுத்து நிறுத்துமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அக்கடிதத்தின் பிரதியொன்று வடமாகாண உதவி தேர்தல் ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

சரவணபவன் தேர்தல் ஆணையாளர் மஹிந்ததேசப்பிரியவுக்கு அனுப்பிய கடிதத்தின் உள்ளடக்கம் வருமாறு:-

வடமாகாண சபை ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி செப்ரெம்பர் 8 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கலந்து கொண்டிருந்தார் என்பது பற்றிய செய்தியை 'உதயன்' பத்திரிகை ஒளிப்படத்துடன் வெளியிட்டிருப்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். இது மிக உயர் பதவியொன்றை வகிக் கும் அதிகாரிக்கு உகந்த செயற் பாடாக இல்லாதது மட்டுமல்ல தனது பதவியை தவறாகவும் பயன்படுத்தியுள்ளார். இது சட்டத் துக்குமாறானதுமட்டுமன்றி ஒழுக்கக் கேடானதும் கூட.

ஆளுநரின் இவ்வாறான நடத்தைகளை நாம் மிகுந்த வேதனையுடன் கவனித்து வந்துள்ளோம். அதுமட்டுமல்ல மாகாண சபையில் பணிபுரியும் பொது சேவையாளர்களுக்கு இடர்கடன்களை வழங்கும் அளவுக்குச் சென்று அவர்களை சிறுமைப்படுத்தியுள்ளார். இது அவர்களின் தனிப்பட்ட விடயம் மட்டுமின்றி அவர்களின் உரிமையும் கூட. ஒரு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது தேர்தலில் அரசு தரப்புக்கட்சிகளுக்கு ஆதரவளிக்கும்படி கேட்டிருக்கிறார் இது பொது சேவைத் துறைக்கு ஓர் அபகீர்த்தியாகும்.

-இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## ஐ.தே.க. வேட்பாளரின் அலுவலகம் மீது சூடு

### கண்டியில் நேற்று அதிகாலை சம்பவம்

கொழும்பு,செப் 10

கண்டி மாவட்டத்திலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் லலித் ரணராஜவுக்குச் சொந்தமாக யடிவாவல பிரதேசத்திலுள்ள கட்சி அலுவலகத்தின் மீது நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

'கப்' வாகனம் ஒன்றில் வந்தவர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் 'கபே' அமைப்பு தெரிவித்துள்ளது. துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தைக் கேட்டு அலுவலகத்தில் இருந்தவர்கள் அலறியடித்துச் சென்றுள்ளதாக கபே' குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மாத்தளை யட்டவக்க பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் 'கபே' அமைப்பு தெரிவித்துள்ளது. (கு)

## போலி நகைகளை அடைவு வைத்து தனியார் வங்கியை ஏமாற்றிய நபர்

யாழ்ப்பாணம், செப்.10
யாழ்.நகர தனியார் வங்கி ஒன்றில் ஒருவர் போலி நகைகளை அடைவு வைத்து பணத்தைப் பெற்றுச் சென்றுள்ளார் என்று வங்கியின் முகாமையாளர் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
அடைவு வைக்கப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையில் அந்த நகைகளைப் பரிசோதனை செய்த போதே அவை போலியானவை என்று தெரியவந்துள்ளதாக பொலிஸில் முகாமையாளர் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.
யாழ்.நகரில் பழைய தபாற் கந்தோர் வீதியில் உள்ள தனியார் வங்கி ஒன்றிலேயே இவ்வாறு போலி நகைகள் அடைவு வைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மூன்றரைப் பவுணுக்கும் மேற்பட்ட நிறையுடைய நகைகளே போலி என்று தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இது போன்ற சம்பவம் ஒன்று கொடிகாமத்திலும் இடம் பெற்றது.
இதேவேளை இதே வங்கியில் கடந்த வருடமும் இது போன்ற சம்பவங்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-4)

## உண்மை விதை வெங்காய அறுவடை விழா வெள்ளியன்று

தென்மராட்சி.செப். 10
சாவகச்சேரி கல்வயல் விளைவேலி பகுதியில் பயிரிடப்பட்ட உண்மை விதை வெங்காயத்தின் அறுவடை விழா எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விளைவேலி துர்க்கை அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.
இந்தப் பகுதியில் முதன் முறையாக பயிரிடப்பட்ட உண்மை விதை வெங்காயம் சிறந்த விளைச்சலைக் கொடுத்துள்ளது. பிரதேசத்தில் உண்மை விதை வெங்காயம் பயிரிடவுள்ளோர் உட்பட விவசாயிகளை கலந்து கொள்ளுமாறு கல்வயல் கமக்கார அமைப்பின் செயலாளர் வீ.கே.வேதநாயகம் அறிவித்துள்ளார். (வ-9)

# முன்னாள் போராளிகள் 107 பேர் வவுனியாவில் நேற்று விடுதலை

வவுனியா, செப்.10
முன்னாள் போராளிகள் 107 பேர் வவுனியாவில் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிகழ்வு வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் கலந்துகொண்ட புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எஸ்.விதானகே உரையாற்றுகையில்:
இதுவரை 11,651 முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஏதாவது பிரச்சினை இருப்பின் மாவட்ட, பிரதேச மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மீள் புரிசீலனை காரியாலயத்தில் தெரியப்படுத்தலாம்.
முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த பலரும் முன்வரவேண்டும். அதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். சிலர் அவர்களை சமூகத்தில் மதிக்காது செயற்படுகின்றனர்.



அவர்களும் சமூகத்தின் பிரஜைகளே என்பதை மறந்து விடக் கூடாது. அவர்களுக்கு திறமைகளை கற்றுக் கொடுத்துள்ளோம். இனிவரும் காலங்களில் அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த தயாராகுவோம் என்றார்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மனிதவள அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக புனர்வாழ்வு ஆணையாளர் கே.ஜே.விஜயதிலக, வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துலஹரிச்சந்திர, வவுனியா மாவட்ட இளைஞர் கழக உதவிப் பணிப்பாளர் சிசிர செனவிரத்தின, வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் சத்தியமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-402)

## சாவகச்சேரியில் நகைகள் திருட்டு

தென்மராட்சி.செப். 10
வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளையில் உள்நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்த தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு சாவகச்சேரி உப்புக்கேணியில் இடம் பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## வவுனியாவிலிருந்து பிற இடங்கள் செல்லும் தனியார் பஸ்கள் பணிப் புறக்கணிப்பு

### பஸ் சாரதிகளின் மோதலையடுத்து சம்பவம்

வவுனியா, செப்.10
நேற்றையதினம் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மூல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் காலையில் இடம் பெறுகின்ற தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.
இதுதொடர்பாகதெரியவருவதாவது நேற்றுக்காலை வவுனியா தனியார் பஸ் சாரதி ஒருவருக்கும் தென்பகுதி செல்லும் தனியார் பஸ் சாரதி ஒருவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதையடுத்து வவுனியா தனியார் பஸ் சாரதியை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். இதையடுத்து வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் தனியார் பஸ்கள் தமது சேவையைத் தொடராமல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன. நேற்று வாரத்தின் ஆரம்ப நாள் என்பதால் விடுமுறையில் நின்ற அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் தமது கடமைகளுக்குச் செல்ல முடியாது நீண்ட நேரம் காத்திருந்து அரச பஸ்களில் சென்றதைக் காண முடிந்தது.
மோதலில் ஈடுபட்ட தனியார் போக்குவரத்துச் சாரதிகள் மீது வவுனியாப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (க-421)

## செட்டிக்குளத்தில் நாளை கூட்டமைப்பின் கூட்டம்

வவுனியா, செப். 10
வடமாகாண சபைத் தேர்தலையொட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செட்டிக்குளம் முதலியார்குளம் விளையாட்டு மைதானத்தில் செட்டிக்குளம் பிரதேச சபைத் தவிசாளர் கபிரியல் அந்தோனி ஜயா தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தன், கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, க.சுரேஸ் பிரேமச்சந்திரன், அ.செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி, தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் உட்பட கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.
வவுனியா மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் 9 வேட்பாளர்கள் அறிமுகமும் இடம்பெறும். (வ-402)

## செயலமர்வு

வேலணை, செப்.10
கல்வி அபிவிருத்திக்கான முன்னேற்ற விடுவித்தல் செயற்றிட்டத்தின் கீழ் ஈ.கே.எஸ்.பி.யின் அனுசரணையுடன் தீவககல்வி வலயத்தில் உள்ள பாடசாலை அதிபர்கள் மற்றும் தர உள்ளீட்டுக்குப் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வொன்று நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறும். இந்த செயலமர்வில் குறித்த உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளுமாறு தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண் குயின் ரஸ் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-7)

## குப்பைகளால் சூழ்ந்துள்ள பிரதான வீதியிலுள்ள தண்ணீர்த் தாங்கி



கொழும்புத்துறை,செப். 10
யாழ்.பிரதான வீதியில் உள்ள தண்ணீர்த் தாங்கிக்கு அருகில் வீசப்படும் கழிவுப்பொருள்களால் அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
குறித்த இடத்தில் போடப்படும் குப்பைகள், அசேதனக் கழிவுகள் விலங்குகளால் இழுத்து வரப்பட்டு அந்த இடங்களில் பரவலாக காணப்படுகிறது. அதேவேளை யாழ்.மாநகர சபை சுகாதார உத்தியோகத்தரிடம் இது தொடர்பாகக் கேட்டபோது:
அந்தப் பகுதியில் சேரும் கழிவுகளை அன்றாடம் அந்த இடத்தில் சேகரித்து உடனுக்குடன் அப்புறப்படுத்தி வருவதாகவும் அதன் பின்னர் பொது மக்கள் அந்த இடத்தில் குப்பைகளை கொட்டுவதாகவும் தெரிவித்தார்.
வீடுகளுக்குச் சென்று குப்பைகளை சேகரிக்கும் நடைமுறை ஏற்படுத்தப்பட்ட போதிலும் பொது மக்கள் இவ்வாறு செயற்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-135)

## சாவகச்சேரி விவசாயிகளுக்கான உரமானியப் பதிவு

தென்மராட்சி.செப். 10
சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கான உரமாணியம் தொடர்பான பதிவுகள் நாளையும் நாளை மறுதினமும் செயலாளரின் இல்லத்தில் இடம்பெறும்.
அமைப்பின் அங்கத்தவர்கள் கமநல சேவைகள் நிலையத்தில் வரி செலுத்திய பற்றுச் சீட்டு மற்றும் சந்தாப்பணம் 80 ரூபாவும் கொண்டு வருமாறு அமைப்பின் செயலாளர் வீ.கே.வேதநாயகம் அறிவித்துள்ளார். (வ-9)

## டிராக்டருக்குள் சிக்கி காயமடைந்தவர் சாவு

தென்மராட்சி, செப்.10
இயக்கச்சிப் பகுதியில் டிராக்டருக்குள் அகப்பட்டு காயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
கடந்த சனிக்கிழமை டிராக்டரை நிலத்தில் நின்று கொண்டு இயக்கிய போது அது திடீரென முன்நகர்ந்ததால் அதன் சில்லு இடுப்புப் பகுதியில் ஏறிய போதிலும் அங்கு நின்றவர்களால் காப்பாற்றப்பட்டு உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.
அங்கிருந்து மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு சிகிச்சை பயனின்றி மரணமானதாக தெரிவிக்கப்பட்டது. இயக்கச்சி, கொற்றாண்டார் குளத்தைச் சேர்ந்த கனகரத்தினம் சிவராசா (வயது-64) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (வ-9)

## கொழும்புத்துறை கடைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

கொழும்புத்துறை, செப். 10
கொழும்புத்துறைப் பகுதியில் வர்த்தக நிலையங்களில் பொருள்களைத் திருடிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.
கடந்த சனிக்கிழமை இரவு பெய்த மழையைப் பயன்படுத்தி ஆனந்தன் வடலி வீதியில் உள்ள பலசரக்குக்கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பலபொருள்கள் களவாடிச் செல்லப்பட்டுள்ளன.
முன்பக்கக் கதவை உடைத்து உட்சென்ற திருடர்கள் கிற்காட், பால்மா, தேயிலை, சிகரெட் போன்ற நுகர்வுப் பொருள்களை களவாடிச் சென்றுள்ளனர். சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவு போயுள்ளதாக குறித்த கடை உரிமையாளர் தெரிவித்தார்.
இதேவேளை இவ்வாறான திருட்டுக்கள் அண்மைக்காலமாக அரியாலை, பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறைப் பகுதிகளில் அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (வ-135)

# பவ்ரலின் கண்காணிப்பு செயலகம் கிளிநொச்சியில் செயற்பாடுகள் ஆரம்பம்

கிளிநொச்சி, செப். 10
வடமாகாண சபைத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான பவ்ரல் அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட கண்காணிப்புச் செயலகம் கிளிநொச்சியில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலின்போது ஏற்படக்கூடிய தேர்தல் வன்முறைகள் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் கண்காணிப்பதற்கும் இந்த விடயங்கள் தொடர்பான முறைப்பாடு களை ஏற்றுக் கொள்வதற்கும் ஏற்ற வகையில் இந்தக் கண்காணிப்பு நிலையம் செயற்படவுள்ளது.

தேர்தல் விதிமுறைகளை கண்காணிப்பதற்கும் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்குமான கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் கிளிநொச்சி மாவட்டத்தில் இல 01, கனகபுரம் வீதி, அம்பாள்குளம் என்னும் முகவரியில் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் செயற்பட ஆரம்பித்துள்ளது.

குறித்த அலுவலகம் தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். குறித்த நேரத்தில் இவ்வாறான முறைப்பாடுகளைப் பதிவு செய்துகொள்ள முடியும். தொலைபேசியூடாக முறைப்பாடுகளைச் செய்வோர் 077 3913970 என்ற இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி 24 மணி நேரமும் முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் என குறித்த அலுவலகம் அறிவித்துள்ளது. (வ-6)

# இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகளை மீள அழைப்பது தொடர்பில் பேச்சு

இந்தியாவில் வாழ்ந்து வரும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கை தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைப்பது தொடர்பில் இலங்கை - இந்தியா இடையில் பேச்சு நடத்தப்பட உள்ளதாக மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜனக்க சுகததாச தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை - இந்திய கூட்டு ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தில் இது குறித்து பேச்சு நடத்தப்பட உள்ளது.

இந்தியாவில் உள்ள 110 முகாம்களில் 68 ஆயிரத்து 58 இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் மேலும் 34 ஆயிரத்து 471 பேர் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் 5 ஆயிரத்து 628 பேர் நாடு திரும்பியுள்ளதுடன் மேலும் 2 ஆயிரத்து 400 பேர் நாடு திரும்பவுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகத்தின் உதவியுடன் நாடு திரும்பும் அகதிகளுக்கு இலவச விமானப் பயணச்சீட்டு வழங்கப்படுவதுடன் 25 ஆயிரம் ரூபா உதவித் தொகையும் வழங்கப்படுகிறது-என்றார்.


## வடமாகாணசபைத் தேர்தல் - 2013
## யாழ் . மாவட்டம்



**சட்டத்தரணி**
**கேசவன் சயந்தன்**

அன்பான ஆசிரிய உறவுகளே!

ஆசிரிய சமூகத்தவராகிய
நாம் அனைவரும்
எமது பலாலி ஆசிரியர்கலாசாலை குடும்பத்தில் ஒருவனாக 1999 - 2000 கல்வியாண்டில் பயிற்சி பெற்று ஓர் விஞ்ஞான ஆசிரியராக ஆசிரியர் சேவையிலிருந்து பின்னர் தன் விடாமுயற்சியினால் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று இன்று சமூக அக்கறை மிக்கதொரு சட்டத்தரணியாக விளங்கும் திறமையும் பன்முக ஆற்றலும் ஆளுமையும் கொண்ட எமது உறவு கே.சயந்தன் அவர்களுக்கும் எமது விருப்புவாக்குகளில் ஒன்றை அளித்து அமோக வெற்றி பெறச் செய்து எங்கள் பிரதிநிதியாக மாகாணசபைக்கு அனுப்பி வைப்போம்




**ஆசிரிய நண்பன் ச.விஜயகுமார்**
**(விஞ்ஞானம் விசேட பயிற்சி 1999- 2000)**


### முதியவருக்கு பார்வை கிடைக்க உதவிய கைதடி முதியோர் இல்லம்

இரண்டு கண்களும் பார்வையற்றிருந்த 81 வயது முதியவருக்கு கைதடி முதியோர் இல்லத்தால் வைத்தியரின் உதவியுடன் மீண்டும் பார்வை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதரவற்ற நிலையில் இரண்டு கண்களும் பார்வையில்லாத நிலையில் கைதடி முதியோர் இல்லத்தில் நீண்ட காலம் இருந்த 81 வயதான வேலுப்பிள்ளை கனகசபை என்ற முதியவருக்கே மீண்டும் கண்பார்வை கிடைக்கப் பெற்றுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் மலரவனால் குறித்த முதியவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

கண்கள் பார்வையற்றிருந்தமையால் மிகவும் அவதிப்பட்ட முதியவர் தனது தேவைகளைப் பூர்த்தி செய்த இன்னொருவரின் உதவியை நாடி வந்த நிலையில் மீண்டும் பார்வை கிடைக்கப் பெற்றுள்ளதால் நன்மையடைந்துள்ளார். (வ-14-17)

## தவறிவிட்டது

ஆனையிறவுக்கும் கிளிநொச்சி கந்தசாமி கோயிலுக்கும் இடையில் சிறிய உடுப்பு பொதி, ஒரு தொகைப் பணம், கணக்குப் பதிவு ஆவணம் என்பன நேற்று (09.09. 2013) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 125 8025

## வாடகைக்கு

மருதனார்மடம் சந்தியில் அசைவ உணவகம் (சகல வசதிகளுடன்) வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 725 0444 (31584) (5.6)

## மரண அறிவித்தல்

### திருமதி சரசமலர் சாந்தலிங்கம் (தம்பு)



வேலணை 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரசமலர் சாந்தலிங்கம் (தம்பு) நேற்று (09.09.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகேசு- தர்மச்செல்வி தம்பதியரின் அன்பு மருமகளும் சாந்தலிங்கத்தின் (தம்பு) அன்பு மனைவியும் குமுதன் (கனடா), விஜிதா (ஜேர்மனி), வினோதா, ஜனகன் (பிரான்ஸ்), அருளினி ஆகியோரின் அன்புத் தாயும் துஷ்யந்தா (கனடா), ஜெகதீசன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (நாகாரெக்ஸ் வங்களாவடி), தமிழினி (பிரான்ஸ்), சுவேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் புஸ்பகலாராணி (ஆஸ்திரேலியா), வசந்தகுமாரி, பவானந்தராணி, மகேந்திரராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரம் பிள்ளை (சண்முகலிங்கம்), பரமேஸ்வரி, கிருஷ்ணபாலு (ஆஸ்திரேலியா), கணநாதன், ஆனந்தரூபன், வசந்தகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அவிஷவா, அக்ஷியா (கனடா), ஜசிந்தன், கவுசிகா, யதுஷர் (ஜேர்மனி), ஜீவனா, இலக்கியா, அக்ஷயா, கீர்த்தன், கினுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாந்தலிங்கம் (தம்பு) கணவர்

(31588-23-14-16)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் செல்லத்துரை
(மாதகல் மயில்வாகனப்புலவர் பரம்பரை)



மதகலைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை வறுத்தலை விளானை வதிவிடமாகவும், நீர்வேலி வடக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பாக்கியம் செல்லத்துரை கடந்த (06.09. 2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசங்கரப்பிள்ளை- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஞானசிகாமணியின் அன்புச் சகோதரியும், பாக்கிய நாதன் (பிரான்ஸ்), செல்வராணி(நீர்வேலி), ஜெயராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை, முத்துத் தம்பி மகாவித்தியாலயம்), செல்வேந் திரன்(லண்டன்), புஸ்பராணி(லண்டன்), பாக்கியராணி (பிரான்ஸ்), தனுசன் (ஆஸ்திரேலியா), அனுஷா ஆகியோரின் தாயும், புஸ்பவதி (பிரான்ஸ்), தியாகராஜா(நீர்வேலி), வரதராஜா (டோகா), ரஜனி(லண்டன்), ஜெயாதாஸ்(லண்டன்), யோகேஸ் வரன் (பிரான்ஸ்), Dr. சுசிலலோஜினி(மாத்தளை) ஆகியோரின் அன்பு மாமியும், விதுஷா, வினோத், லஜித், ரகுராம், ரம்மியா, லவண்ஜா, செல்சியா, சம்மியா, கீர்த்தனா, கவினியா, நிக்ஷன், நிலக்ஷன், தாயுன், வினோதன், நித்தியா ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும், அருணின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2013) புதன்கிழமை பி.ப.2.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலர் மகால், குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்: நா. தியாகராஜா (மருமகன்)
021 3219372

(14.15.17.சி.1995)

## பெயர் மாற்றம்

தம்பையா பாக்கியலட்சுமி ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை அன்னலட் சுமி என்று மாற்றுவதுடன் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்

அன்னலட்சுமி

## டிஜிற்றல் கமரா விற்பனைக்கு

நிக்கொன் D3100 டிஜிற்றல் கமராவும் மின்சாரத்தில் இயங்கும் OLYMPIYA . 2000 ஆங்கில தட்டச்சு இயந்திரமும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 6911 (31650) (5.6)

## வீடு வாடகைக்கு

இல.20, பிறவுண் வீதி, பிள்ளையார் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் பெரிய கோல், 3 அறைகள், ஒரு சமையலறை, இணைந்த குளியலறை மற்றும் தனி மலசலகூடம் போன்ற வசதியும் புதிதாக பெயின்ற் பூசிய வீடு வாடகைக்குண்டு. அட்வான்ஸ் 200,000/=, மாத வாடகை 8000/= உத்தியோகத்தர்கள், நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (31649)(5.6)

தொடர்பு: 077 071 2439,077 854 3174

## வீடு வாடகைக்குண்டு

யாழ். மாநகர சபை பகுதியில் சப்பல் வீதியில் ஆறு அறைகளுடன் கூடிய சகல அடிப்படைவசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. (வாகனத்தரிப்பிட வசதியுடன்)

தொடர்பு:- 077 3949608(சதீஸ்)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி அதிபர்
திருமதி லலிதாமலர் முகுந்தன்
அவர்களின் பாசமிகு
மாமியார் திருமதி
**இரத்தினசிகாமணி
வேலும்மயிலும்**
அவர்கள் 07.09.2013 அன்று இறைபதம் எய்தியதையிட்டு துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மிருசுவில் றோ.கா.த.க பாடசாலை
ஆசிரியர் வே.முகுந்தன்
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி **இரத்தினசிகாமணி
வேலும்மயிலும்**
அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசானவை,
யா/ மிருசுவில் றோ.கா.த.க. பாடசாலை

# ஈழம் எமக்குத் தீர்வாகாது

## சொல்கிறார் சிறீகாந்தா



யாழ்ப்பாணம்,செப். 10
ஈழம் எங்களுக்கு ஒரு போதும் தீர்வாகாது என்று தெரிவித்தார் ரெலோ இயக்க உறுப்பினரான என்.சிறிகாந்தா. எல்லா நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமஷ்டியே தீர்வாக முடியும் என்றும் அவர் கூறினார்.

அளவெட்டியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இந்தப் 'பொன்மொழி'களை உதிர்த்தார்.

இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கிய வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், தமிழ் மக்களின் இறுதித் தீர்வு குறித்துத் தெரிவித்த கருத்தை மறுத்தே சிறீகாந்தா இப்படிக் கூறினார். உரையாற்றிய என். சிறீகாந்தா, "ஈழம் எங்களுக்குத் தீர்வாகாது. அதை இலங்கை அரசமைப்பின் பிரகாரம் அடையவும் முடியாது.

எல்லா நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமஷ்டி முறையே தீர்வாகும்.

அதனையே எம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

எங்கள் மக்கள் திருடனை நம்பினாலும் நம்புவார்களே தவிர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஒரு போதும் நம்பமாட்டார்கள்-என்றார். (ஐ-5)

# 'பை'களிலா மின்சாரம்

## ஆளும் தரப்பு வேட்பாளர்களிடம் கேள்வி எழுப்பிய கனகராயன்குள மக்கள்

நாம் வடமாகாண சபையைக் கைப்பற்றி ஆட்சிக்கு வந்தால் உங்கள் கிராமத்துக்கு மின்சாரம் பெற்றுத் தருவோம் என்று வவுனியா வடக்கு கனகராயன்குளம் பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட ஆளும் தரப்பு வேட்பாளர்கள் சிலரைப் பார்த்து "பைகளிலாமின்சாரம் கொண்டுதிரிகிறீர்கள்" என்று கேள்வி எழுப்பினார் மூதாட்டி ஒருவர்.

> ஒவ்வொருவரும் ஆள் ஆளுக்கு மின்சாரம் தருவது என்றால் பைகளிலா அதைக் கொண்டு திரிகிறீர்கள்?" என்று கேட்ட மூதாட் டியின் கேள்விக்கு பதிலளிக்காமலே அங்கிருந்து நழுவி விட்டனராம்


கனகராயன்குளம் கிராமப் புறங்களில் மக்களின் வீடு வீடாகச் சென்று ஆளும் தரப்பு வேட்பாளர்கள் தேர்தல் பரப்புரை செய்து வருகின்றனர்.

இதன்போது வடமாகாண சபைத் தேர்தலில் நீங்கள் ஆளும் கட்சிக்கு வாக்களித்து, எங்களை வெற்றி பெறச்செய்தால் உங்களுக்கு மின்சாரம் பெற்றுத் தருவோம், வீதி புனரமைத்துத் தருவோம், வீட்டுத்திட்டம் வழங்குவோம், வேலை வாய்ப்புப் பெற்று தருவோம் என்று ஏராளமான வாக்குறுதிகளை அள்ளி வழங்கி வருகின்றனர்.

இவர்களது வாக்குறுதிகளால் மிரண்டுபோன மூதாட்டி ஒருவர் "இப்போது நீங்கள் தானே ஆட்சி செய்கிறீர்கள் ஏன் எமக்கு மின்சாரம் வழங்கவில்லை? ஒவ்வொருவரும் ஆள் ஆளுக்கு மின்சாரம் தருவது என்றால் பைகளிலா அதைக் கொண்டு திரிகிறீர்கள்?" என்று கேட்டுள்ளார்.

மூதாட்டியின் கேள்விக்கு பதிலளிக்காமலே அங்கிருந்து நழுவி விட்டனராம் வேட்பாளர் கள். (ஐ-422)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
தமிழரசுக் கட்சி வேட்பாளர்
இரத்தினலிங்கம் ஜெயசேகரன்
(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)
X 6
தமிழன் என்ற தேசிய இனத்தின் சுயகௌரவம் கிடைக்க
இல. 6 ஐத் தெரிவுசெய்து வெற்றிபெற வையுங்கள் - மானிப்பாய் வர்த்தக சங்கம்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் மக்கள் பலத்துடன்
வட. மாகானசபைத் தேர்தலில் வவுனியா மண்ணில் ...
எம்.எம்.ரதன் ஆசிரியர்
(தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி இளைஞர் அணி)
வவுனியா மாவட்டம்
X 8
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
எங்கள் வாக்கு
எம்.எம்.ரதன்
ஆசிரியருக்கே



வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்டம்
"மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்"
அரசியல் அதிகாரப் பகிர்வுக்காகவும்
சமூக சமத்துவத்துக்காகவும்
ஞானசக்தி ஸ்ரீதரன்
(முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்)
X 13





வடக்கு மாகாணசபைத் தேர்தல் - யாழ். மாவட்டம்
தேசியம்... சூழலியம்... சுய நிர்ணயம்
எமது தேசியச் சூழலை நல்லாட்சி செய்யும் அரசியல் அதிகாரம் எம்மிடமே இருக்க வேண்டும்!
நம்பிக்கைக்குரிய தெரிவு
பொ.ஐங்கரநேசன்
M.Sc,PGDJMC
இலங்கைத் தமிழரசுக் கட்சி X 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்
தமிழ் மண் காப்போம் தாயகம் மீட்போம்!!
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வோம்
எம்.கே.சிவாஜிலிங்கம்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.
9 X
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |





ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்
சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர், கல்வி,பண்பாட்டு,விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.
அவர்களை ஆதரிப்போம்
X 19
கல்வியின் ஊடாக அரசியல், சமூக பொருளாதார மேம்பாடு



வடமாகாண சபைத் தேர்தல் 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
கிளிநொச்சி மாவட்டத்தின்
ஒரேயொரு பிரதான பெண் வேட்பாளர்
எமது பெண்கள்
ஜனநாயக ரீதியாகவும்
ஆயுத ரீதியாகவும் களமாடியது
அபிவிருத்திக்காக அல்ல
தமிழினத்தின் அரசியல்
விடுதலைக்காக மட்டுமே!
பெண்களின் உரிமைக்கும் சமத்துவத்துக்கும்
ஓங்கி ஒலிக்கும் ஒரேபெண்குரல்
X 4
கே. வினுபானந்தகுமாரி (ஆசிரியை)
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)

# யாழ்ப்பாண விவசாயிகளின் நெருக்கடியை நீக்க மகாவலி கங்கையை வடக்குக்குத் திருப்புவோம்



மகாவலி கங்கையை வடக்குக்குத் திருப்பியாவது யாழ். மாவட்ட விவசாயிகளின் கஷ்டங்களை தீர்த்து வைப்போம். மக்களே இது உங்களுக்கான தருணம். இவ்வாறு தெரிவித்தார் பொருளாதார அபிவி ருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

புத்தூர் கலைமதி கிரா மத்தில் சனிக்கிழமைநடை பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குக்கு நாம் வழங்கியிருக்கும் தேர்தல் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்த முதல் வெற்றி போன்றது. அபிவி ருத்தியின் ஊடாக உங்களது அபிலாசைகளைப் பெற்றுக் கொள்வதற்கு கிடைத்த இந்த முதல் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

இந்தப் பிரதேசம், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தப் பகுதியில் விளையும் மரக்கறிகள் தென்னிலங்கை மக்களால் விரும்பி உண்ணப் படுகின்றன.

விவசாய நடவடிக்கைகளின் போது நீங்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதை நான் அறிவேன். நாம் உங்களது நெருக்கடி களைப் படிப்படியாகத் தீர்த்து வைத்து வருகின்றோம்.

நீர்ப்பாசனம், விவசாய நலத் திட்டங்கள், உற்பத்திப் பொருள் களுக்கான சந்தை வாய்ப்பு போன்றவற்றில் நாம் பல முன்னேற்றங்களை இப்பகுதி மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத் திருக்கிறோம். இன்னும் பல வற்றைச் செய்ய முற்பட்டி ருக்கிறோம். அதற்கு மக்களின் ஒத்துழைப்புத் தேவை. எம்மை பலப்படுத்துவதன் ஊடாக உங்களை நீங்கள் பலப்படுத்த முடியும்.

மகாவலி கங்கையை வடக் குக்குத் திருப்பியாவது யாழ். மாவட்ட விவசாயிகளின் கஷ் டங்களை தீர்த்து வைப்போம். மக்களே! இது உங்களுக்கான தருணம். உங்களுக்காகச் சேவையாற்றக் கூடிய வேட் பாளர்களை நீங்கள் தேர்ந் தெடுத்து மாகாண சபைக்கு அனுப்பி வைத்தால் நீங்கள் கொழும்புக்கு எங்களிடம் வரவேண்டிய தேவையிருக் காது. உங்கள் மாகாண சபை பிரதிநிதிகள் உங்களோடு இருந்து உங்கள் தேவை களைத் தீர்த்து வைப்பார்கள்.- என்றார். (ஐ)

# நாம் பெறப்போகும் வெற்றியே எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்

## சுமந்திரன் எம்.பி. கருத்து

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக சர்வதேசக் குழு வடமாகாண சபைக்கான தேர்தல் நடவடிக்கைகளை நேரடியாகக் கண்காணிப்புச் செய்யவுள்ளது. எனவே எமது வெற்றி சர்வதேசத்தின் பார் வையில் இருக்கிறது. நாம் பெறப்போகும் அமோக வெற்றி தான் எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகின்றது. சரித்திர முக்கியத்துவம் பெற்ற இந்தத் தேர்தலில் தமிழர்கள் ஒன்றிணைந்து சாதனை படைக்க வேண்டும்.

இவ்வாறு அழைப்பு விடுத்துள் ளார் தமிழ் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பி னர் எம்.ஏ. சுமந்திரன்.

வழக்கம்பரையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற் றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எல்லா நாடுகளிலும், நாடாளு மன்ற தேர்தல்கள் நடைபெறும் போது மட்டுமே சர்வதேச கண் காணிப்பு மேற்கொள்ளப்படு வது வழக்கம். ஆனால் முதன் முறையாக இந்த மாகாணத் தேர்தலை சர்வதேசக் குழு நேரடியாக கண்காணிக்கும் நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கி றது.

இலங்கை அரசு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு உள்ளார்ந்த தீர்வு ஒன்றை ஏற் படுத்தும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று மாகாணசபைகளுக்கு நியாய மான உரிமைகளை வழங் குவோம், இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்போம் என உறுதிமொழிகளை அள்ளி வழங்கியுள்ளது.

குறிப்பாக ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம், சர்வதேச மனித உரிமைகள் பேரவை, சர்வதேச மன்னிப்புச் சபை என்பனவற்றிற்குப் பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளது. ஆனால் எந்த வாக்குறுதி களும்நிறைவேற்றப்படவில்லை. இதனால் வெறுப்படைந்தவர் கள் தமிழ் மக்கள் மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தினருமே. இதன் காரணமாக சர்வதேச சமூகம் கொடுத்த



அழுத்தங்களின் பயனாகவே வடமாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு முன்வந்தது.

இதுவே எமக்குக் கிடைத்த சந் தர்ப்பம். இதனைப் பயன்படுத்தி நாம் அடுத்த கட்டம் பற்றி சிந் திக்கவேண்டும். எமது அரசி யல் அபிலாசைகள் நிறை வேற்றப்படவேண்டும்.

சமஷ்டி முறையிலான தன் னாட்சி உரிமை வேண்டும். எமது பிறப்புரிமையான சுயநிர் ணய உரிமை வேண்டும்.

இவற்றை எல்லாம் நாம் பெற வேண்டுமானால் நமது அரசி யல் பலத்தை உறுதிப்படுத்த வேண்டும். அது நமது வாக்குப் பலத்தால் மட்டுமே முடியும்.- என்றார். (ஐ-2)

# கட்சியையே விற்றுப் பிழைக்கின்றனர் சிலர்

## கிண்டலடிக்கிறார் வேட்பாளர் கஜதீபன்

தமிழ் மக்களின் விடிவுக்காக என்று கூறி ஆயுதம் ஏந்திய அமைச்சர் டக்ளஸ், இன்று தனது கட்சியை விற்றுப் பிழைப்பு நடத்துகி றார். அவரை நினைத்தால் மிகவும் வேதனை யாகவுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவரும் வடமாகாண சபைத்தேர்தல் வேட்பாளருமாகியபா.கஜதீபன். கைதடியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது, மண்மீட்புக்காக ஆயுதங் களைக் கையில் எடுத்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களின் வரிசை யில் அமைச்சர் டக்ளஸும் ஒருவர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்ற பெயரால் அவர் போராட்டம் அரசியலுக்குப் பின் கதவால் நுழைந்தார். இன்று தனது கட்சியைக் கைவிட்டுவிட்டு அரசுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற பேரின வாத முன்னணியில் இணைந்துள்ளார். அதுமட்டுமல்லாது, தம்மையும் காட்டிக் கொடுத்து மக்களையும் காட்டிக்கொடுத்து தமிழ்இனத்தையே அவமானப் படுத்துகின் றார். வீணையே எங்கள் சின்னம். சேவையே எங்கள் எண்ணம் என்றார். இன்று தனது சின்னத்தை மறந்து சேவையைத் துறந்து அரச கைக்கூலியாகி வெற்றிலையையென்று திரிகிறார்.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, என்றைக்கும் பிரிக்க முடியாத வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பது அவரது கட்சியின் தாரக மந்திரம். இன்று மத்தியில் கூட்டாட்சியும் இல்லை, மாநிலத்தில் சுயாட்சியும் இல்லை. பிரிக்கமுடியாதவடக்கும்கிழக்கும்பிரிக்கப்பட்டு விட்டது. இவர்களது கொள்கைகளும் கோட்பாடு களும் இன்று காற்றோடு காற்றாகிவிட்டன. எமது அன்பான மக்களே! இந்தத் தேர் தலை நீங்கள் மிகவும் சரியாகப் பயன் படுத்தி 21 திகதி காலையிலேயே வாக்க ளிக்கச் சென்று உங்கள் பேனா முனையால் இத்தகையவர்களை விரட்டியடித்து வர லாற்றை எழுதுங்கள்- என்றார். (ஐ)









# அரசுக்கு அழுத்தம் கொடுக்க முழுப் பலம் கட்டாயதேவை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் அனந்தி விளக்கம்

யாழ்ப்பாணம் செப். 10

காணாமற் போனவர்களையும், விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளோரையும் விடுதலை செய்ய அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தனியாகவோ, அமைப்பாகவோ எதையுமே செய்யமுடியாதுள் ளது. இதற்கு அரசியல் பின் புலம் தேவை. அதனால்தான் நானும் அரசியல் களத்தில் இறங்கியுள்ளேன்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் அனந்தி சசிதரன். வடமராட்சி, திக்கத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இறுதிக்கட்ட போரின்போது மூன்றரை லட்சம் மக்கள் இராணுவத்திடம் சரண் அடைந்தனர். இத்தனை சனக் கூட்டத்தின் முன்னிலையில் எனது கணவர் உட்பட பெருந்தொகையானவர்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். அதற்கு பல ஆதாரங்கள் எம்மிடம் உண்டு. இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள், சிறைச்சாலைகளிலோ புனர்வாழ்வு முகாம்களிலோ இல்லை. காணாமற்போனவர்கள் தொடர்பாக, நல்லிணக்க ஆணைக்குழு முன் துணிச்சலாக சாட்சியமளித்தோம். உயர் நீதிமன்றத்தில் ஆள் கொணர்வு மனுக்களை தாக்கல் செய்தோம். நவநீதம்பிள்ளை அம்மையாரிடமும் முறையிட்டுள்ளோம்.

காணாமற்போனவர்களைத் தேடிச்செல்லும்போது நாம் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டோம். இதிலிருந்து நாம் கற்றுக்கொண்டது எமக்கு ஒரு பின்புலம் தேவை என்பதைத்தான்.

செல்லடிக்கும் கொத்துக்குண்டுகளுக்கும் நாம் அஞ்சமாட்டோம். இது நம்முடைய மண். தமிழர்களின் இரத்தம். தோய்ந்த மண். இதனை மாற்றானுக்கு தாரை வார்க்க முடியாது. உரிமைக்குரல் கொடுப்போம். ஒன்றுபட்டு வாக்களித்துத் தமிழ்த் தேசியத்தை பாதுகாப்போம்- என்றார். (ஜ-2-8)

# நாங்கள் சொல்வதே உண்மை

## இப்படிக் கூறுகிறார் ஆளுந்தரப்பு தவநாதன்

அக்கராயன், செப்.10

மக்களின் பிரச்சினைகளை சமயோசிதமாக எப்படித் தீர்க்க வேண்டும் என்று அறிந்து அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்பவர்கள்தான் உண்மையான தலைவர்கள். அப்படியான தலைவர்கள்தான் எமது கட்சியில் உள்ளார்கள். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் அரச தரப்பு வேட்பாளராகப் போட்டியிடும் வை.தவநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி விவேகானந்தா நகரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய கிராமங்களை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கில் மீள்குடியேற்றத்தின் பின்னர் மேற்கொண்ட பணிகளின் பலாபலன்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்களை ஏமாற்றி தேர்தலில் வென்றவர்கள் விவேகானந்தா நகர் கிராமத்துக்கு ஒன்றும் செய்யவில்லை. வீதிகள், பாலங்கள் ஒன்றும் புனரமைக்கவில்லை. சுகாதார வசதிகள் உருவாக்கப்படவில்லை. குடிதண்ணீர் விநியோகம் கூடச் செய்யவில்லை.

1987இல் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைதான் சரியான வழி என்பதில் எமது கட்சி(ஈ.பி.டி.பி.) உறுதியாக இயங்கி வந்தது. எமது தலைமை, மாகாணசபை முறைமையை ஏற்போம் என்று ஏனைய தமிழ் தலைமைகளிடம் கேட்ட போது மறுத்தவர்கள் இப்போது மக்களிடம் வாக்கு கேட்டு வருகிறார்கள்.- என்றார். (ஜ-18)










உதயன்
10/09/2013

# மக்களை ஏமாற்றாமல் அரசியல் செய்கிறேன்

## அங்கஜன் பெருமிதம்



கடந்த நாடாளுமன்றத் தேர்தலோடு யாழ்ப்பாணத்திற்கு வந்த நான், தேர்தலுக்கு பின்னரும் மக்களை ஏமாற்றாமல் தொடர்ந்தும் யாழ் மாவட்டத்திலேயே தங்கியிருந்து இப்பகுதி இளைஞர்களின் அபிவிருத்திக்காகவும், மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காகவும், அவர்களின் சுய அபிவிருத்திக்காகவும், பிரதேச அபிவிருத்திக்காகவும் முழுமையான பங்களிப்பை செய்து வருகின்றேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாகப் போட்டியிடும் அங்கஜன்.

புத்தூர் கலைமதி கிராமத்தில் சனிக்கிழமை நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று இந்த இடத்திலிருந்து பேசுவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். ஏனென்றால் கடந்த காலங்களில் இப்பகுதி மக்களை நான் நேரில் பல தடவை சந்தித்திருக்கின்றேன். இந்த பகுதி மக்கள் என்னோடு நன்றாக தொடர்பு பட்டவர்கள். அது மட்டுமன்றி புத்தூருக்கு நிறைய முக்கியத்துவங்கள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் இந்த ஊர் தரைத் தோற்றத்திலும் உயர்ந்த இடமாகும். அத்தோடு குடா நாட்டிற்கே குடிதண்ணீர் கொடுக்கும் வற்றாத கிணறுகளை கொண்டிருக்கின்றது.

கடினமான தரையில் வாழ்ந்தாலும் மென்மையான மனதுக்காரர்களான இந்த ஊர் மக்கள் கடினமான உழைப்பால் முன்னேற்றத்தைத் தொட்டவர்கள்.

இந்த தேர்தல் உண்மையில் அபிவிருத்திக்கான தேர்தல் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அபிவிருத்தி என்ற உரிமையையும் எம்மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே இந்த மாகாண சபையை வடக்கு மக்களுக்கும் வழங்குவதற்கு நாம் வந்திருக்கின்றோம்.

நாம் மக்களை ஏமாற்றும் அரசியலுக்கு எதிரானவர்கள். மக்களுக்காகவே அரசு, அரசுக்காக மக்களில்லை என்பதைக் கொள்கையாக கொண்டவர்கள்-என்றார். (ஐ)

# கூட்டமைப்புடன் இணைந்து தேசியத்துக்காக பாடுபடுவேன்

## ஐ.தே.க. வேட்பாளர் பாலச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.10

எமது மக்களுக்கு நல்லதோர் அரசியல் தீர்வை சர்வதேசத்தின் உதவியுடன் பெற்றுக் கொள்வதற்கான சூழ்நிலை உருவாக வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்த முடியும். மீண்டும் ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட முதற்படியாக மாகாணசபையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து நம்மைப் பலப்படுத்துங்கள். நான் கூட்டமைப்புடன் இணைந்து தேசியத்துக்காகப் பாடுபடுவேன் என ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் க.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

மூளாயில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவன் அல்ல. 1977 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானம் தொடக்கம் இன்றுவரை தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்ப துயரங்களைச் சந்தித்திருக்கின்றனர்.

எத்தனையோ மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. கணக்கிலடங்காத வளங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

இவை எல்லாவற்றையும் நான் அறிவேன். எமது மக்களின் நிம்மதியான வாழ்வுக்காக நிரந்தரமான அரசியல் தீர்வுக்காக இலங்கைத் தேசியத்திற்குள்ளே தமிழ்த் தேசியத்திற்காகக் குரல் கொடுப் பேன்.

எத்தகைய இடர் வந்தாலும் எம்மக்களின் குரலாக, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஓங்கி ஒலிப்பேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வு சம்பந்தமாக ஆக்க பூர்வமான செயற்பாடுகளை எடுக்கத் தவறின் எமது மக்க ளுக்காக ஐக்கியதேசியக்கட்சியிலி ருந்து வெளியேறவும் பின் நிற்க மாட்டேன்- என்றார். (ஐ-60)

> எமது மக்களின் நிம்மதியான வாழ்வுக்காக நிரந்தரமான அரசியல் தீர்வுக்காக இலங்கைத் தேசியத்திற்குள்ளே தமிழ்த் தேசியத்திற்காக குரல் கொடுப்பேன்.



# அமைதியான சுதந்திரத்தை அடுத்த சந்ததிக்கு வழங்குவோம்

## வவுனியாவில் கூட்டமைப்பு வேட்பாளர்

வவுனியா, செப்.10

எமது இனம் எதிர்நோக்கும் இன்னல்கள் யாவற்றுக்கும் முகம் கொடுத்து எமது தனித்துவத்தை கட்டிக் காத்து, அடுத்து வரும் தலைமுறைக்கு ஒப்படைக்க வேண்டிய பெரும் பொறுப்பு எமக்கு உள்ளது. இதனை வலியுறுத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுகிறோம் என வவுனியா மாவட்டத்தில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் நடராஜா தெரிவித்தார். செட்டிகுளத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

> தமிழ் இனம் ஒரு போதும் மண்டியிட்டு, யாருக்கும் விலை போகாது. எங்கள் அடிப் படை உரிமை களுக்காக நாம் போராடுவோம்.

தமிழ் இனம் ஒரு போதும் மண்டியிட்டு, யாருக்கும் விலை போகாது.

எங்கள் அடிப்படை உரிமைகளுக்காக நாம் போராடுவோம். ஆயுதம் ஏந்தித்தான் போராட வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. எங்களிடம் இருக்கும் வாக்குப் பலத்தைக் கொண்டு போராடுவோம்.

போரால் பாதிக்கப்பட்ட நாம் எமது இனத்தின் இருப்பை உறுதிப் படுத்த வேண்டிய வரலாற்று தேவையோடு இருக்கின்றோம்.

எனவே ஒவ்வொரு தமிழனும் சிந்தித்து எதிர்வரும் 21ஆம் திகதி வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்போம் - என்றார் . (ஐ-402)


















# இந்தியாவின் பொதுமன்னிப்புக்காக ஏங்கித் தவிக்கிறார் அமைச்சர் டக்ளஸ்

## வல்வெட்டித்துறையில் சரவணபவன் எம்.பி.



கொலைக் குற்றவாளியாக இந்திய அரசால் தேடப்படும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய மீனவர்களுக்காகக் குரல்கொடுத்தால் தனக்குப் பொது மன்னிப்புக் கிடைக்கும் என்ற நப்பாசையில் நாடகமாடுகிறார்.

இவரது கபட நாடகத்தை எவரும் நம்ப மாட்டார்கள், இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் நான் இந்தப் பிரதேசத்திற்கு வந்தபோது, டக்ளஸ் தேவானந்தா ஒரு நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருந்தார். இந்திய மீனவர்கள் மீது தனக்கு கரிசனை உள்ளது போல் காட்டிக் கொள்வதாக அந்தச் செயற்பாடு இருந்தது. இப்படிச் செய்தாலாவது தன்னைக் கொலைக் குற்றவாளி பட்டியலில் இருந்து விடுவித்து இந்தியா பொதுமன்னிப்பு வழங்கும் என்ற சுயலாப நோக்கம் அவரது செயற்பாட்டில் தெரிந்தது.

வல்வெட்டித்துறை வீரம் விளைந்த பூமி. இந்த வரலாற்றை யாராலும் மாற்ற முடியாது.

இறப்பு என்பது இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் ஒரு அனுதாபத்தை ஏற்படுத்தும் சம்பவம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயாரின் இறுதிச் சடங்கு இங்கே நடந்தபோது, அட்டூழியகாரர்கள் உடன் பிறப்புகளைக்கூடக் கலந்து கொள்ள விடவில்லை. வீட்டுக்கு வீடு வாசல்களில் இராணுவத்தை நிறுத்தி மக்களை வெளியே வரவிடாமல் தடுத்தனர். இப்படி ஓர் அவலம் இந்த மண்ணில் நடந்துகொண்டிருக்க, இணக்க அரசியல் பேசும் டக்ளஸ் தேவானந்தா மனித நேயம் இன்றி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

இப்பொழுது ஆளும் கூட்டணிக்குள் மூன்று பிரதான அணிகள் இருக்கின்றன. டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி.குழு,அங்கஜனின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மூன்றாவதாக இராணுவத்தின் யாழ். கட்டளைத் தளபதி ஹத்துரு சிங்க அணி. இந்த உள்வீட்டுக்கட்சிகளுக்குள் இப்போது குத்து வெட்டுகள் தாராளமாக இடம்பெறுகின்றன.

ஆனால் டக்ளஸ் தேவானந்தா மட்டும் மிகவும் மௌனமாக இருக்கின்றார். இதற்கு காரணம் தன்னை விட யாரும் மிஞ்சிவிடக் கூடாது என்பதே என்றார் சரவணபவன். (ஜ-2)

# இறந்தோர் தொகையையும் பொன்சேகா வெளியிட வேண்டும்

யாழ்ப்பாணம், செப். 10

போரை முடிவுக்கு கொண்டு வந்தவன் தான் என்று சொல்லும் பொன்சேகா, போரின்போது கொல்லப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கையை இப்போதாவது சொல்ல வேண்டும். இவ்வாறு வெளியிடுவதன் ஊடாகவே தமிழ் மக்கள் காணாமல்போன தம் உறவுகள் தொடர்பான ஒரு முடிவுக்கு வரமுடியும்.

இவ்வாறு தெரிவித்தார் காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளரும், தேசிய இனங்களின் ஐக்கியத்துக்கான அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட தலைமை வேட்பாளருமான சுந்தரம் மகேந்திரன். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"காணாமற்போனவர்கள் என்று எவரும் இல்லை. அப்படி காணாமற் போயிருந்தால் அவர்கள் போரில் கொல்லப்பட்டிருக்கலாம் 23 ஆயிரம் விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்" என்றும் பொன்சேகா தெரிவித்திருக்கின்றார்.

போர் வெற்றிக்குக் காரணமானவன் தான் என்று கூறிய பொன்சேகாவை மஹிந்த அரசு சிறையில் அடைத்து அவரது போர் வெற்றியையும் சிதைத்து அனைத்து வரப்பிரசாதங்களையும் மீளப் பெற்றுக் கொண்டது.

இவ்வாறானதொரு நிலையில் தேர்தலில் போட்டியிடுகின்ற சரத்பொன்சேகா தமிழ் மக்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க முயலுவாராயின் அவரது காலத்தில் முன்னெடுக்கப்பட்ட போரின்போது கொல்லப்பட்ட மக்களின் புள்ளிவிவரத்தை அவர் வெளியிட வேண்டும். போரின்போது கொல்லப்பட்டவர்கள் தொடர்பான தரவுகள் இராணுவத்தினரிடம் தான் இருக்க வேண்டும்.

ஹிட்லர் காலத்தில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் இன்றும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் இங்கு அரசோ போரை நடத்திய இராணுவத் தளபதியோ இதுவரை கொல்லப்பட்டவர்கள் தொடர்பான எண்ணிக்கையை வெளியிடவும் இல்லை, காணாமற் போனவர்கள் விடயத்தில் அக்கறை காட்டுவதும் இல்லை. இருப்பினும் பல வருடங்களுக்கு முன்னர் இங்கு காணாமற் போனவர்கள் இப்போது விடுதலையாகி வருகின்றனர். இதற்கு இவர்களின் பதில்தான் என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஜ-5)

# தமிழ்க் கலாசார பண்பாட்டை நிலைநாட்ட வாக்களிப்போம்

## மாந்தை கிழக்கு பிரதேசசபை உப தலைவர்

எமது கலாசாரம், பண்பாடு என்பவற்றுடன் நிலத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதற்காக வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் உப தலைவர் சி.செந்தூரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் அறிமுக கூட்டமும், தேர்தல் பரப்புரைக் கூட்டமும், கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது உரிமைகளை வென்றெடுக்க பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் இடம் பெற்றன. அதில் நாம் பல்வேறு நெருக்கடிகளையும் இழப்புகளையும் சந்தித்தோம். ஆனால் இப்போது ஜனநாயக வழியில் நடைபெறும் போராட்டத்துக்கு கைகொடுத்து எமது வெற்றியை நிலைநாட்டி எமது உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும். இன்று நாம் ஆபத்தான அச்சுறுத்தலான அரசியல் பணிகளையே இந்த மாவட்டத்தில் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இந்த நிலை இங்கு மட்டுமல்ல, ஏனைய மாவட்டங்களிலும் காணப்படுகின்றது.

எமது உரிமைகளை வென்றெடுக்க பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் இடம் பெற்றன.

இனவாத அரசியல்வாதிகளினதும் அரசினதும் சிந்தனைகள், செயல்கள் எதிர்காலத்தில் தமிழ் இனம் மரியாதையோடும் சுய கௌரவத்தோடும் வாழக் கூடாது என்பதாகும். இவ்வாறு அடிமைப்பட்ட இனமாக தமிழ் இனம் இருக்க வேண்டும். தமிழ் கலை, கலாசார விழுமியங்கள் அழிக்கப்பட வேண்டும் என்றே இனவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். எமது கலாசாரத்தையும் பண்பாடுகளையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு எம்முடையதே. இதற்காக நாம் வடமாகாண சபைத் தேர்தலில் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வோம்-என்றார். (ஜ-6)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ் மாவட்ட
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X
13
துணிச்சல் மிக்க இளம் சட்டத்தரணி
கே.சஜந்தன்
இருப்பதைக் காப்போம்! இழந்ததை மீட்போம்!
சுயாட்சி வெல்ல வாக்களிப்போம்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்ட
ஜனநாயக ஐக்கிய முன்னணி
வேட்பாளர்
அருள்ஜெயந்திரன்
(சண்ஜெ)
(சண்ஜெய் நிறுவனங்களின் உரிமையாளரும் முன்னாள் பிரபல வர்த்தகர் ச.வே. சண்முகம்பிள்ளையின் (நீர்கொழும்பு) பேரனும், முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் யாழ்–கிளிநொச்சி டாக்டர் இ.அருள்பிரகாசத்தின் மகனும்)
X 2
"தமிழர்களின் உரிமைகளை படிப்படியாக வென்றெடுக்கக் கூடிய துணிச்சல் மிக்க ஒரே வேட்பாளர்"
உங்கள் தெரிவு (இரட்டை இலைக்கும்), இல. 2 இற்கும்.
அச்சமில்லாத பிச்சையல்லாத தமிழ்ச் சமூகத்தை உருவாக்க ஒன்றுபடுவோம்



வடமாகாண சபைத் தேர்தல்
யாழ்மாவட்டம்
எம் மக்களுக்காக...
சாத்தியமானவற்றை
சாதிக்கவும் முடியாதவற்றை
முயற்சிக்கவும்
கனகரஞ்சிதன்
பிரணவன்
X 12X
எதிர்கால அரசியலுக்காக
இளைஞர்களுக்கு வாக்களிப்போம்



வடமாகாண சபைத் தேர்தல் 2013
எதிர்க்கத் துணிந்தால் தமிழ் மீளும்
எதற்கும் துணிந்தால் தமிழ் ஆளும்
X 17
பா.கஜதீபன் (ஆசிரியர்)
அளவைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம்.
தலைவர் யாழ் மாவட்ட இளைஞர் அணி.
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடமாகாண சபைத் தேர்தல் 2013
பைந்தமிழ் மண்ணில்
தன்னலமற்ற தமிழன்
யாழ்ப்பாண மாவட்டம்
தமிழரசுக் கட்சி வேட்பாளர்
தமிழ் தேசிய கூட்டமைப்பு
X 14
சந்திரலிங்கம் சுகிர்தன் (B.Com)
(C/11230)



-யாழ் மாவட்டம்-
வட மாகாணசபைத் தேர்தல் – 2013
"நாம் ஒன்றுபட்டு போராடும் இனம் என்பதை
உதைக்கு ஓங்கி உரைப்போம்!
வரலாறு எம்மை விடுதலை செய்யும்!
உங்களதும் உங்கள் தலைமுறையினதும் விடிவுக்காய்
உங்கள் வாக்கினைத் தவறாமல் அளியுங்கள்!"
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
X
1
திருமதி. அனந்தி சசிதரன் (எழிலன்)
பிரதம முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் – கிளிநொச்சி
இணைப்பாளர், காணாமல்போனோர் உறவினர்கள் சங்கம்.



# உத்தரபிரதேசத்தில் பெரும் கலவரம்

## 37 பேர் சாவு: ஏராளமானோர் காயம்

முசாபர்நகர், செப்.10
உத்தரபிரதேசம் முசாபர்நகர் மாவட்டத்தில் இருபிரிவினர் இடையே ஏற்பட்ட கலவரம் தொடர்ந்து பல பகுதிகளில் பரவி வருகின்றது. அந்தக் கலவரங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது. ஏராளமானோர் காயம் அடைந்துள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 27ஆம் திகதி ஒரு பிரிவைச் சேர்ந்த இளம் பெண்ணை, மற்றொரு பிரிவைச் சேர்ந்தவர்கள் கேலி செய்துள்ளனர். அதை சிலர் தட்டிக் கேட்ட போது இரு பிரிவினர் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. அதில் 3 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவமே தற்போது இடம்பெறும் பெரும் வன்முறைகளுக்குக் காரணமாக அமைந்தது.

வன்முறைகளை அடுத்து இராணுவத்தினர் அந்தப் பகுதிகளில் கடமையில் ஈடுபட்டுத்தப்பட்டுள்ளனர்.எனினும்அவர்களையும் மீறி வன்முறைகள் பல பகுதிகளுக்கும் பரவுகின்றது.

தற்போது அந்தப் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கபட்டுள்ளதுடன், வன்முறைகளுக்குக் காரணமானவர்கள் என்று இனங்காணப்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களில் இதுவரை 37 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் ஏராளமானோர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிய



வருகின்றது. பல்வேறு பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து பதிவாகி வரும் நிலையில் இந்த எண்ணிக்கை வெகுவாக உயரும் என்று அஞ்சப்படுகின்றது. (ற)

## செவ்வாய்க்கு விண்கலம்: இஸ்ரோ தகவல்

சென்னை, செப்.10
செவ்வாய் கிரகத்துக்கு எதிர் வரும் நவம்பர் மாதமளவில் ஆய்வு விண்கலம் ஒன்றை அனுப்ப இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) திட்டமிட்டுள்ளது.

இந்தியாவின் கனவுத் திட்டமாகக் கருதப்படும் இந்தத் திட்டத்தை இஸ்ரோ நாளை அறிவிக்க உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பி.எஸ்.எல்.வி.-சி25 றொக்கெட்டின் உதவியுடன் அனுப்பப்படவுள்ளது இந்த விண்கலம். பி.எஸ்.எல்.வி.-சி25 றொக்கெட்டின் வெளிப்புறத் தகடுகளைப் பொருத்தும் முதல் கட்டப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், றொக்கெட் ஒருங்கிணைப்புப் பணி ஒக்ரோபர் 10ஆம் திகதி நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பூமியின் சுற்றுவட்டப் பாதையில் இருந்து நவம்பரில் விண்ணில் செலுத்தப்படும் விண்கலம், 10 மாதங்கள் விண்வெளியில் பயணம் செய்த பிறகு, செவ்வாய் கிரகத்தை சென்றடையும். பின்னர், அங்கு நீள்வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்படும் விண்கலம், அதன் பரப்பில் இருந்து 500 கி.மீ. நெருக்கத்திலும், 80 ஆயிரம் கி.மீ. தொலைவிலும் சுற்றி வரும் என்று இஸ்ரோ மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.(ற)

## பணத்துடன் மறைந்த தாய் ஆதரவற்றுக் குழந்தைகள்

பாட்னா, செப்.10
குழந்தைகளுக்கான உதவித் தொகையைப் பெற்றுக்கொண்ட தாய் ஒருவர் குழந்தைகளைத் தவிக்க விட்டுப் பணத் துடன் தலைமறைவாகியுள்ளார். இந்தச் சம்பவம் இந்தியாவின் பீகார் மாநிலத்தில் இடம் பெற்றுள்ளது.

பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள சாந்தி நிகேதன் பாடசாலையில் 2006ஆம் ஆண்டு ஷிகா பாண்டே என்பவர் ரிம்ஜிம் (12), அஞ்சலி (11) என்ற தனது குழந்தைகளை கொண்டு வந்து சேர்த்தார்.

ஆதரவின்றித் தவிக்கும் குழந்தைகளைப் பற்றி பாடசாலையின் முதல்வர் அவினேஷ்வர் பிரசாத் சிங் ஊடகங்களில் கருத்துத் தெரிவித்திருந்தார்.


அதைப் பார்த்த இந்தி நடிகர் அமிதாப்பச்சன் அந்த சிறுமிகளின் நல்வாழ்வுக்காக ரூ.4 லட்சம் அளிக்க முன்வந்தார்.

இதுகுறித்து பத்திரிகைகளில் வந்த செய்தியைப் பார்த்து விட்டு ஷிகா பாண்டே பாடசாலைக்கு வந்து தனது குழந்தைகளை பார்த்துள்ளார்.

தனது கணவர் சிறையில் இருந்ததாகவும், தான் கடுமையான பண நெருக்கடியில் இருந்ததால் குழந்தைகளை பார்க்க வரமுடியவில்லை என்றும் பாடசாலை முதல்வரிடம் கூறியுள்ளார்.

அதையடுத்து அமிதாப்பச்சன் வழங்கிய பணம், ஷிகா பாண்டேயின் பெயரில் காசோலையாக வழங்கப்பட்டது. அதைப் பெற்றுக் கொண்ட ஷிகா பாண்டே, குழந்தைகளை அழைத்துச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றவர்தான், அதன்பின்னர்ஆளைக்காணவே இல்லை என்று தெரிவித்துள்ளார் பாடசாலையின் முதல்வர்.

தற்போது அந்தக் குழந்தைகள் இருவரும் ஆதரவற்று இருக்கின்றனர் என்றும் அவர்களைப் பராமரிப்பது தமக்கு பெரும் சிரமமாக இருக்கின்றது என்றும் கவலை வெளியிட்டுள்ளார் அந்த அப்பாவி பாடசாலை அதிபர். (ற)



இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நேற்று விநாயகர் சதுர்த்தி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு ஐதராபாத்தில் அமைக்கப்பட்டுள்ள 17மீற்றர் உயரமான பிரமாண்டமான விநாயகர் சிலை. (ற)

## கோகர்நாத்தில் 166 உடல்கள் இதுவரை மீட்பு

பாட்னா, செப்.10
உத்தர்கண்ட் வெள்ள இடர் மீட்புப் பணிகள் இன்னமும் நடைபெற்றுவரும் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமையும் 68 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கோதார் பள்ளத்தாக்கில் நடைபெற்று வரும் மீட்புப் பணிகளின் போதே இந்த உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணிகள் இரண்டரை மாதத்துக்கும் மேலாக நடைபெற்று வருகின்றபோதும், தற்போதும் உடல்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த செவ்வாய்க் கிழமையில் இருந்து இதுவரை 166 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அதனால் குறித்த வெள்ள இடரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறித்து இதுவரை தெளிவான புள்ளி விவரங்களைத் திரட்ட முடியாதுள்ளது என்று தெரிவித்துள்ளது உத்தர்கண்ட் மாநில அரசு. (ற)

## தண்ணீர் பற்றாக்குறையுடன் 22 நகரங்கள் இந்தியாவில்

### புள்ளி விவரங்கள் கூறுகின்றன

புதுடில்லி, செப்.10
இந்தியாவில் 22 நகரங்கள் அன்றாட தண்ணீர் பற்றாக்குறையில் சிக்கித் தவிக்கின்றது என்று புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன. அதில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நகரம் ஜாம்ஷெட்பூர் என்றும் அந்தப் புள்ளி விவரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அந்த புள்ளி விவரங்களில் கூறப்பட்டுள்ளதாவது:

'ஏறக்குறைய மக்களுக்கு தேவையான தண்ணீரின் அளவையும் கிடைக்கின்ற தண்ணீர் அளவையும் கணக்கிட்டு பார்த்தால் 70 சதவீத பற்றாக்குறை காணப்படுகின்றது.

கான்பூர், அசான்சோல், தன்பாத், மீரட், பரிதாபாத், விசாகபட்டினம், மதுரை மற்றும் ஐதராபாத் ஆகிய முக்கிய நகரங்களில் கடுமையான பற்றாக்குறை உள்ள நகரங்களாக உள்ளன. அங்கு 30 சதவீத தேவையை பூர்த்தி செய்ய இயலவில்லை.

பெரும்பாலான நகரங்களுக்கு போதுமான தண்ணீர் உள்ள போதும் தண்ணீரை பொறியியாலார்கள் சரியானபடி பராமரிக்காத காரணத்தினால் இப்பிரச்சினை ஏற்படுகின்றது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய குடிநீர் வள மோலாண்மை அதிகாரி திலிப் பவுஷ்தர் கூறுகையில்,

"மற்ற பெரிய நகரங்களுடன் ஒப்பிடுகையில் மும்பையில் நல்ல மழை பெய்கிறது. இதில் சிறிது தான் விவசாயத்திற்கு பயன்படுகிறது. எனினும் மழை நீர் சேகரிப்பு செய்யப்படாமல் வீணடிக்கப்படுகின்றது. அதை சரியாக செய்தால் தண்ணீர் பற்றாக்குறையை குறைக்கலாம்.

ஜாம்ஜெட்பூர், தன்பாத் மற்றும் கான்பூரில் அதிகரிக்கும் மக்கள் தொகை பெருக்கம் தண்ணீர் தேவையை அதிகரிக்கிறது. மொத்தத்தில் இந்தியாவில் தினசரி தண்ணீரை முறையாக பயன்படுத்தினால் 90 சதவீத தேவையை பூர்த்தி செய்யலாம். தண்ணீரை வீணாக்காமல் வழங்கினாலே பற்றாக்குறையை தவிர்க்கலாம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

**மக்களுக்கு தேவையான தண்ணீரின் அளவையும் கிடைக்கின்ற தண்ணீர் அளவையும் கணக்கிட்டு பார்த்தால் 70 சதவீத பற்றாக்குறை காணப்படுகின்றது**

# தெலுங்கானா பிரச்சினை மீண்டும் விஸ்வரூபம்

## போர்க்களமானது ஐதராபாத்

பாட்னா, செப்.10
சற்று ஓய்ந்திருந்த தெலுங்கானா பிரச்சினை மீண்டும் விஸ்ரூபம் எடுத்ததில் போர்க்களமாக மாறியது ஐதராபாத்.

தெலுங்கானா பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தரப்பினர் இதுவரை தமது இடங்களிலேயே எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். நேற்று முன்தினம் அவர்கள் திடீரென ஐதராபாத்தில் கூடி பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த முற்பட்டதை அடுத்தே அங்கு பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

தனித் தெலுங்கானாவுக்கு ஆதரவு தெரிவித்து வரும் ஐதராபாத் மக்கள், "எமது பகுதியிலேயே வந்து தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதா என்று கொந்தளித்து பொதுக் கூட்டத்தை நிறுத்தும் முயற்சிகளில் இறங்கினர். அதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

முறுகல் நிலை கைகலப்பாக மாறியதை அடுத்துப் பெருந்தொகையான பொலிஸார் அந்தப் பகுதி எங்கும் குவிக்கப்பட்டனர். எனினும் இருதரப்பையும் சேர்ந்தவர்கள் பெருந்தொகையில் குவியத் தொடங்கியதை அடுத்து நிலை கட்டுமீறியது. அந்தப் பகுதியில் காணப்பட்ட வாகனங்கள் உடைத்து நொருக்கப்பட்டன. இந்த வன்முறைகள் மெல்ல மெல்ல ஐதராபாத்



முழுவதும் பரவத் தொடங்கியது. அதையடுத்து பொலிஸார் தடியடி நடத்தியும், தண்ணீர் பீரங்கித் தாக்குதல் நடத்தியும் வன்முறைகளில் ஈடுபட்டவர்களை விரட்டத் தொடங்கினர். அதனால் ஐதராபாத் முழுவதும் போர்க்களம் போல் காட்சியளித்தது.

இந்த வன்முறைச் சம்பவங்களில் பலர் காயமடைந்துள்ளனர். தற்போதும் பல இடங்களில்வன்முறைச்சம்பங்கள்இடம் பெறுகின்றன என்று கூறப்படுகின்றபோதும், நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது என்று பொலிஸார் கூறுகின்றனர்.(ற)

# மூன்று நாள்களே சிரிய நடவடிக்கை

## அமெரிக்கா அதிரடித் திட்டம்



நியூயோர்க், செப்.10
எதிர்பார்ப்பதை விட அதி தீவிரமான தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு அமெரிக்கா திட்டமிட்டு வருகின்றது. அந்தத் தாக்குதல் திட்டம் 3 நாள்கள் கொண்டதாக அமையும் என்று அமெரிக்க நாளிதழான 'லொஸ்ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

### திட்டம் தயார்

சிரியா மீது இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றது அமெரிக்கா. அனைத்து முன்னேற்பாடுகளையும் முடித்துள்ள நிலையில் தாக்குதலை திடீரென அமெரிக்கா ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தநிலையிலேயே 'லொஸ்ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது.

### 3 நாள் தாக்குதல்

"அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகன் தாக்கப்படவுள்ள சிரியாவின் முக்கிய 50 நிலைகளை தற்போதே முடிவு செய்துள்ளது. அந்த நிலைகளின் மீது சரமாரியான ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொள் வதற்கு பெண்டகன் முடிவெடுத்துள்ளது. அதன் மூலம் சிரியாவை நிலைகுலைய வைக்க முடியும் என்றும் பெண்டகன் நம்புகின்றது. இந்த அதிரடித் தாக்குதலை தொடர்ந்து மூன்று நாள்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தப்பும் இலக்குகள் மீது உடனடித் தாக்குதல்கள் மேற்கொள்வ தற்கும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல் திட்டத்துக்கு உதவியாக மூன்று தாக்குதல் கப் பல்களுடன் யு.எஸ்.எஸ் நிமிட்ஸ் விமானம் தாங்கிக் கப்பல் செங்கடலில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது" என்று தகவல் வெளியிட்டுள்ளது 'லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்'.

### பெருகும் ஆதரவு

சிரியா மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கான உலக நாடுகளின் ஆதரவு அதிகரித்து வருகின்றது என்று அமெரிக்காவும் பிரான்ஸும் தெரிவித்துள்ளன. உலநாடுகளின் தலைவர்களுக்கு இந்த விடயம் குறித்து தெளிவுபடுத்திய பின்னரே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அவை தெரிவித்தன.
எனினும் சிரியா மீதான இராணுவநடவடிக்கைக்குஅமெரிக்க மக்களிடையே எதிர்ப்பு உள்ளது. வெள்ளை மாளிகை முன்பு திரண்ட பெருந்திரளானோர் சிரியா மீது அமெரிக்கா எடுக்கும் இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### காணொலி ஆதாரம்

சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பிரயோகிக்கப்பட்டன என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் என்று அமெரிக்கா சில காணொலிக் காட்சிகளை வெளியிட்டுள்ளது. சிரிய இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஒப்புதல் கோரப்படவிருக்கும் நிலையில் இந்த காணொலிக் காட்சிகள் வெளியிடப் பட்டிருக்கின்றன. (ற)



சிரியா மீது அமெரிக்காவின் தாக்குதல் முனைப்புகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வெள்ளை மாளிகை முன்பாகப் பெருந்திரளானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். போருக்கு எதிரான அமைப்புகள் ஒன்றிணைந்து இந்தப் பிரமாண்டமான ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

## தாய்லாந்து விமானம் விபத்து

பாங்கொக், செப்.10
தாய்லாந்துக்குச் சொந்தமான பயணிகள் விமானம் ஒன்று ஓடுபாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.
குறித்த விமானம் சீனாவின் குவாங்கூகு மாகாணத்தில் இருந்து புறப்பட்டு தாய்லாந்தின் பாங்கொக்சர்வதேசவிமான நிலையத்தில் தரையிறங்கிய போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.
இந்த விபத்தில் 15 பேர் காயங்களுக்கு உள்ளாகியபோதும் உயிரிழப்புகள் எவையும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## மதுபான விடுதியில் சூடு; 11 பேர் சாவு

### கவுதமாலாவில் சம்பவம்

சான் ஜோஸ் நச்சு, செப்.10
கவுதமாலாவில் உள்ள ஒரு மதுபான விடுதியில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.
சான் ஜோஸ் நச்சு ந்கரில் உள்ள மதுபான விடுதிக்குள் புகுந்த முகமூடி அணிந்த கும்பல் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளது. அதில் சம்பவ இடத்திலேயே 11 பேர் உயிரிழந்தனர், 16 பேர் காயமடைந்தனர்.
துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில், ஏற்கெனவே மதுபான விடுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட ஒருகுழுவே தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ற)

## விடைபெற்றார் பாக். ஜனாதிபதி

இஸ்லாமாபாத், செப்.10
பாகிஸ்தான் ஜனாதிபதி பதவியில் இருந்து விடைபெற்றார் ஆசிப் அலி சர்தாரி.
பாகிஸ்தானில் 2008ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த 58 வயதான ஆசிப் அலி சர்தாரி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.
எனினும் அண்மையில்நடந்த பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி பெரும்பான்மையை இழந்தது. இந்த நிலையில் அவரது பதவிக் காலம் (5 ஆண்டு) நிறைவடைவதை அடுத்து நேற்று முன்தினம் முறைப்படி ஜனாதிபதி பதவியில் இருந்து அவர் விலகினார்.


பாகிஸ்தானில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு 5 ஆண்டுகள் பதவி காலத்தை நிறைவு செய்த முதல் ஜனாதிபதி சர்தாரி என்பது குறிப்பிடத்தக்கது.

சர்தாரி மறைந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஷிர் பூட்டோவின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது.
பதவி விலகிய பின்னர் சர்தாரி லாகூர் புறப்பட்டுச் சென்றுள்ளார். அங்கிருந்து கட்சிப் பணிகளை அவர் மேற்கொள்வார் என்று கூறப்படுகின்றது. (ற)

## குடிவரவுச் சட்டத்துக்கு எதிர்ப்பு பதவி விலகும் பிரிட்டன் எம்.பி

லண்டன், செப்.10
பிரிட்டனின் புதிய குடிவரவுச் சட்டங்களை எதிர்த்து அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசியலில் இருந்தே விலகவுள்ளார்.
புதிய குடிவரவுத்துறை சட்டங்களின்படி இந்தியா. இலங்கை உட்பட ஆறுநாடுகளைச் சேர்ந்தவர்களை பாதுகாப்பற்ற பயணிகள் என்று பிரிட்டன் வகைப்படுத்தியதையடுத்து. அந்நாடுகளைச் சேர்ந்தவர்கள் கூடுதல் பிணைத் தொகை செலுத்தியே விசா பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது.
இந்த நடைமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஜனநாயக விடுதலைக் கட்சியின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் சாரா டீத்தர் தாம் அரசியலில் இருந்தே விலவுள்ளதாக அறிவித்துள்ளார்.
"தொழில் மற்றும் மேற் படிப்புக்காகவே பெரும்பாலானவர்கள் பிரிட்டன் வருகின்றனர். அவர்களுக்கு இவ்வாறு கடுமையான சட்டங்களைத் திணிப்பது சற்றும் பொருத்தமற்றது. அதனாலேயே எனது பதவியைத் துறப்பதோடு. அரசியலில் இருந்து விலகுவதற்கும் தீர்மானித்துள்ளேன்'' என்று தெரிவித்துள்ளார் சாரா.
லண்டனின் வடக்குப் பகுதியில் உள்ள பிரெண்ட் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகிய இவர், கடந்த தேர்தலில் தெரிவான மிக இளம் வயது நாடாளுமன்ற உறுப்பினராவார். (ற)

## நேட்டோ தாக்குதலில் பொது மக்கள் சாவு

காபூல், செப்.10
ஆப்கனில் எல்லைப் பகுதியில் நேட்டோ படையினர் நடத்திய தாக்குதலில் பொது மக்கள் 9 பேர் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர்.
ஆப்கனின் கிழக்கில் பாகிஸ்தான் எல்லையோரம் அமைந்துள்ள குனார் என்ற பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் இருந்த தலிபான் அமைப்பினரின் முகாம் ஒன்றைக் குறிவைத்தே நேட்டோ படையினர் தாக்குதலை நடத்தினர் என்று தெரியவருகின்றது. எனினும் அந்தத் தாக்குதலில் 9 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்று உள்ளூர் வாசிகள் கூறுகின்றனர்.
இதுகுறித்து தகவல் வெளியிட்டுள்ள நேட்டோ படைத் தலைமையகம், தாக்குதலில் 10 தலிபான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளது. பொதுமக்களின் உயிரிப்புகள் குறித்து எதுவித தகவல்களையும் அது வெளியிடவில்லை.
நேட்டோ படையினரின் தாக்குதலில் பொதுமக்கள் உயிரிழக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. அதனால் ஆப்கன் அரசுக்கும் நேட்டோ படைகளுக்கும் இடையே முரண்பாடுகள்ஏற்பட்டுவருகின்றன. கடந்த பெப்ரவரி மாதம் நடத்தப்பட்ட நேட்டோ விமானத் தாக்குதலில் பொதுமக்கள் 10 பேர் கொல்லப்பட்டனர். அதையடுத்து விமானத்தாக்குதல்களை நடத்தக்கூடாது என்று ஜனாதிபதி ஹமீது கர்சாய் உத்தரவிட்டுள்ளார். (ற)

## இஸ்லாமிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பிரிட்டனில் 160 பேர் கைது

லண்டன், செப்.10
பிரிட்டனில் இஸ்லாமியர்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் 160 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பிரிட்டனில் முஸ்லீம்கள் அதிகமாக வசிக்கும் டவர் ஹாம்லெட் பகுதியில் இஸ்லாமியர்களை எதிர்த்து 'இங்லீஷ் டிபென்ஸ் லீக்' என்ற அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
'டிபென்ஸ் லீக்' அமைப்பைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டவர்கள் மற்றும் இனவெறிக்கெதிரான ஒன்றுபட்ட அமைப்பினர் போன்ற பல குழுவினர் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்தொகையானோர் பங்குபற்றியிருந்தனர். அதையடுத்து அந்தப் பகுதியின் பாதுகாப்புக்கென 3 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.




ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கும் டவர் ஹாம்லெட் பகுதிக்குள் நுழையாத வண்ணம் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.
ஆர்ப்பாட்டத்தின் போது வன்முறைகளில் ஈடுபட்டனர் என்றும், ஆபத்தான ஆயுதங்களை வைத்திருந்தனர் என்றும் தெரிவித்து பொலிஸாரால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)

## தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு இன்று மஞ்சம்

யாழ்ப்பாணம், செப்.10

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் மஞ்சத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும். கடந்த 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான பெருந்திருவிழாவில், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (வ)




காரைநகர், செப்.10

காரைநகர் கிழவன்காடு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய அலங்கார உற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.(ந-250)

* * *

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சி தோட்டம் கற்பக விநாயகர் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய தீர்த்தக் கேணியான கணேச குண்டத்தில் நடைபெறும். (ந)

## கலைகளில் சிறந்து விளங்கும் சங்கானை மாவடிக் கிராமம்

இயல், இசை, நாடகக் கலைகளில் அபரிதமான திறனும், வளர்ச்சியும் கொண்ட கிராமமாக சங்கானை மாவடிக் கிராமம் திகழ்கின்றது என வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி காசிநாதன் நிருபா தெரிவித்துள்ளார்.

அண்மையில் சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தால், ஆலய மண்டபத்தில் நடத்தப் பட்ட கலைவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய இளைஞர் முதல் முதியோர் வரை தொலைக்காட்சி, தொலைபேசி போன்றவற்றில் தமது பொன்னான நேரத்தைச் செலவு செய்கிறார்கள். இந்த நிலையில் இவ்வாறானதொரு கலை விழாவை நடத்தி தமது கலைத் திறனை வெளிக்காட்டிய இந்த மன்றத்தினரை மனதாரப் பாராட்டுகின்றேன்.

இக் கிராமத்தின் ஒவ்வோர் வீட்டிலும் உள்ள பிள்ளைகள், சங்கீதம், மிருதங்கம், நடனம், வயலின் போன்ற ஏதாவது ஒரு கலைத்துறையில் திறமை பெற்றிருப்பதைக் கண்ணுற்றேன். அவர்களின் திறமையை நிரூபிக்கும் வகையில் இங்கு இடம்பெற்ற நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

இவ்வாறான கலை நிகழ்வுகளில் ஆர்வம் செலுத்தினால், எதிர்கால இளஞ்சந்ததியினர் தவறான பாதையில் சென்று, கலாசார சீரழிவுகளில் ஈடுபடாமல், சிறந்தவர்களாக வாழ்வதற்கு உதவும். இதற்கு, ஒவ்வோர் பெற்றோரும், பிள்ளைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

இக் கிராமத்தைப் பொறுத்தளவில் இங்கு கூடியிருக்கும் பெற்றோர்கள், எவ்வாறு தமது பிள்ளைகளை வழி நடத்தியுள்ளார்கள் என அறிய முடிகின்றது. அதுமட்டுமல்ல, தமது பிள்ளைகளின் ஒவ்வோர் நிகழ்வையும், ரசித்தபடி இருந்தார்கள். இத்தகைய செயலானது, பிள்ளைகளுக்கு மேலும் ஊக்குவிப்பாக அமையும் என அவர் மேலும் கூறினார். (ந-29)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நல்லூரில் ஆரம்பம்


யாழ்ப்பாணம், செப்.10

மழைகாலம் ஆரம்பித்துள்ளதை அடுத்து நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று தொடக்கம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை டெங்கு ஒழிப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளதால் சகலரும் இதற்கு முன்வர வேண்டும் என்றும் கோரியுள்ளது.

தினமும் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை டெங்கு ஒழிப்பு முன்னெடுக்கப்படும். பிரதேச செயலர், பொதுசுகாதார பரி சோதகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் கிராம மட்ட அமைப்புக்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு மேலும் கேட்டுள்ளனர்.

கடந்த வருடமும் இதே காலப்பகுதியில் அதிகமானோர் டெங்கால் பாதிக்கப்பட்டிருந்தனர். அதனைக் கருத்தில் கொண்டும் இந்த டெங்கு ஒழிப்பு முன்னெடுக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)



## யாழ்.நகரில் மோதல்; இரு இளைஞர் கைது

யாழ்ப்பாணம், செப்.10

யாழ். இந்துக் கல்லூரியை அண்மித்து நேற்று முன்தினம் இரவு கோஷ்டி மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதலில் காயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவ இடத்துக்கு அன்றிரவு விரைந்து சென்ற பொலிஸார், அங்கு மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களைக் கைது செய்தனர். அவர்கள் இருவரும் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை செய்யப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்தனர். (ஒ-4)

## இரு நூல்கள் அறிமுக விழா

கொழும்புத்துறை, செப்.10

கனடா திருமறைக் கலாமன்ற நிர் வாக அங்கத்தவர் செபஸ்தி யாம்பிள்ளை இராசநாயகத் தின் ஆக்கத்தில் உருவான இரு நூல்களின் அறிமுக நிகழ்வு இன்று மாலை 5 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மறை(த்)தேன் மலர்கள், அடிச் சுவடுகள் ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வு இடம்பெறும். திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூல்களுக்கான மதிப்பீட்டுரையை அருட்திரு பா.பிறாயன் அடிகள் வழங்குவார். (ந-135)

## ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

வவுனியா வடக்குக் கல்வி வலயத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**உறுப்பெழுத்து**

தரம் 3 பிரிவில் 1ஆம் இடம்-கே.கம் சாஜினி (துவசியாகுளம் அ.த.க. பாடசாலை). 2 ஆம்இடம்-அமிர சேகரம் (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்). 3ஆம் இடம்-துவாகரன் எஸ்.திருஸிகா (நெடுங்கேணி ம.வி.)

தரம் 4 பிரிவில் 1ஆம் இடம்- திரி சாளினி (ஓமந்தை மத்திய கல்லூரி). 2ஆம் இடம்- கே.பிறேமி (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்). 3ஆம் இடம்- டி.மயூரிகாதரம், (நெடுங்கேணி ம.வி.)

தரம் 5 பிரிவில் 1ஆம் இடம்- யு.சனிகா (புதுக்குளம் மகாவித்தியாலயம்). 2ஆம் இடம்- எஸ்.சிவமலர், 3ஆம் இடம்- சபிஸன் (கனகராயன்குளம் ம.வி.).

தரம் 6 பிரிவில் 1ஆம் இடம்- கே.டிலக்ஸிகா (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்). 2ஆம் இடம்- எஸ்.கானி, 3ஆம் இடம்- கஜானி (கனகராயன் குளம் ம.வி.).

தரம்7 பிரிவில் 1ஆம் இடம்- பி.ஜதுசா(ஓமந்தை மத்திய கல்லூரி). 2ஆம் இடம்- வி. வரனிகா (புதுக்குளம் ம.வி.) 3ஆம் இடம்- கே. புகழ் நிலா (கனகராயன்குளம் ம.வி.)

தரம்8 பிரிவில் 1ஆம் இடம்- ஆர். டகோஜினி (ஓமந்தை மத்திய கல்லூரி) 2ஆம் இடம்- எஸ்.கிருத்திகா (நெடுங்கேணி ம.வி.) 3ஆம் இடம்- பி.வினோதா (கனகராயன் குளம் ம.வி.)

தரம்9 பிரிவில் 1ஆம் இடம்- ரி.ஜனுயா (புதுக்குளம் ம.வி.) 2ஆம் இடம்- ஆர்.அனுசாயினி, (கனகராயன் குளம் ம.வி.) 3ஆம் இடம்- கே.நிசாந்தினி, (கனகராயன் குளம் ம.வி.).

தரம்10பிரிவில்1ஆம்இடம்-பி.தரன்சிகா (கனகராயன்குளம் ம.வி.) 2ஆம் இடம்- சி.மைதிலி (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்) 3ஆம் இடம்- வை.நிரோஜா (ஓமந்தை மத்திய கல்லூரி)

தரம்11 பிரிவில் 1ஆம் இடம்- கே.தாசினி (சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்) 2ஆம் இடம்- பி.கணேஸ்வா (நெடுங் கேணி ம.வி.) 3ஆம் இடம்- கே.ஆரணி தரம் (நெடுங்கேணி ம.வி.)

தரம் 12 பிரிவில் 1ஆம் இடம்- எம்.கஸ்மிஜா (நெடுங்கேணி ம.வி) 2ஆம் இடம்- பி.கோபனா (ஓமந்தை மத்திய கல்லூரி) 3ஆம் இடம்- பி.கோகுலவாசன்

தரம் 13 பிரிவில் 1ஆம் இடம்- ஜி.பிரியங்கா 2ஆம் இடம்- ரி.சஜீவனா (ஓமந்தை மத்திய கல்லூரி), 3ஆம் இடம்- எஸ்.சத்தியா (ஓமந்தை மத்திய கல்லூரி).(ந) (தொடரும்)

## பாடசாலை நேரத்தில் சைக்கிள் களவு

வடமராட்சி , செப்.10

வடமராட்சி வலய கரணவாய் வேதாரணீஸ்வரா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாணவி ஒருவரின் சைக்கிளொன்று களவாடப்பட்டுள்ளது.

பாடசாலை நேரத்தில் மதிலால் இந்த சைக்கிள் தூக்கி எடுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

முதல் நாள் இரு இளைஞர்கள் மதில் பக்கத்தால் எட்டிப் பார்த்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தக் களவு குறித்து நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ந-35)


### காணி விற்பனைக்கு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு முன்வீதியில் பனைகள் நிரம்பிய 12 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 910 3318 (31637) (7.6.3)

### TV கள் மலிவு விலையில்

யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் உத்தரவாதத்துடன் SONY Wega TV கள் 21"- 11000/= முதல், 29"- 16000/= Panasonic 29" -15000/= DTS amp, Box, DVD என்பன.

தொடர்பு: 077 044 0570

சோனி ரேடிா சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)

56, K.K.S வீதி, சுன்னாகம்.

(39232)(45.6.3)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமியார் ஒழுங்கையில் இரண்டரைப் பரப்பு காணியுடன் அழகிய வீடு விற்பனைக்குண்டு. நான்கு பெரிய படுக்கை அறைகளுடன், குசினி, Store Room/ பான்றி, Office Room, Attached Bath Room, Two Halls 1820 சதுர அடி விஸ்தீரணம் கொண்டது. Water Tank, கட்டுக்கிணறு, Servant Toilet, மற்றும் தென்னைகள், மா மரங்கள், கொய்யா, முருங்கை போன்ற பிரயோசனங்களுடன் விற்பனைக்குண்டு. 2011 ஆண்டு Valuation Report பார்வைக்குண்டு.

தொடர்பு :0776 953 776

### புங்குடுதீவு காட்டுப்புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதிவைரவர் ஆலய திருப்பணி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| முதலாவது பரிசு | குளிர்சாதனப்பெட்டி | சீட்டிலக்கம் 4817 |
| 2ஆம் பரிசு | தொலைக்காட்சிப்பெட்டி | சீட்டிலக்கம் 9167 |
| 3ஆம் பரிசு | தையல் இயந்திரம் | சீட்டிலக்கம் 8343 |
| 4ஆம் பரிசு | சலவை இயந்திரம் | சீட்டிலக்கம் 6382 |
| 5ஆம் பரிசு | துவிச்சக்கரவண்டி | சீட்டிலக்கம் 6789 |

ஆறுதல் பரிசுகள்: 10 (கையடக்க தொலைபேசிகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | 2660 | 2. | 5256 |
| 3. | 0080 | 4. | 3084 |
| 5. | 2637 | 6. | 2205 |
| 7. | 4581 | 8. | 2717 |
| 9. | 5206 | 10. | 0572 |

பரிசில்கள் வென்ற அதிர்ஷ்டசாலிகள் உங்களுக்கான பரிசில்களைப் பெற்றுக்கொள்ள கீழ்வரும் தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளவும். பரிசில்களைப்பெற வரும்வேளை தேசிய அடையாள அட்டை, பரிசுச்சிட்டை என்பவற்றை எடுத்துவர வேண்டும்.

தலைவர் : 077 290 6981
செயலாளர் : 077 870 2260
பொருளாளர் : 071 824 7046
077 775 2566

தாங்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி
ஆலய பரிபாலனசபை.
(31636)(10.6)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations பீதாம்பரம் ஜெயவிந்தன் தேசமாணி J.P. அவர்கள்




13.08.2013 அன்று மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம் நீதிபதி A. A. ஆனந்தராஜா அவர்களின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இன்று தனது 38ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் இவர் சமூகத்திற்கும் மக்களிற்கும் அளப்பரிய பல சேவைகள் செய்து பல்லாண்டு காலம் வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துபவர்கள்:
உறவினர்கள்.
(31602) (7.6.3)

### வட மாகாண சபைத்தேர்தல் 2013

யாழ் மாவட்டம்



உங்கள் நிலமும் உங்கள் வீடும் உங்கள் வாழ்வும் உங்கள் வசப்பட எங்கள் கைகளை வலுப்பெறச் செய்யுங்கள்.

X 5

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்)
(பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

### வட மாகாண சபைத் தேர்தல் 2013



யாழ் மாவட்டம்

தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை பெற்றுவாழ அபிவிருத்தி நோக்கி நகர நலிவுற்றோர் நலன்பெற இல. 3 இற்கு வாக்களிப்போம்.

அரியகுட்டி பரஞ்சோதி
(மாநகரசபை உறுப்பினர்)

X 3

இலங்கை தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

### சாவகச்சேரி வைத்தியசாலையில்

## பார்வையாளர் தங்குமிடம் ஏற்படுத்தி தரக் கோரிக்கை

தென்மராட்சி, செப்.10
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரும் பார்வையாளர் நலன் கருதி பார்வையாளர் தங்குவதற்கான மண்டபமொன்றை அமைத்து தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த வைத்தியசாலை விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களைப் பார்வையிட தூர இடங்களிலிருந்து வரும் பார்வையாளர்கள் விடுதிகளுக்குச் செல்லும் நேரம் வரை வைத்தியசாலைக்கு வெளியே தங்கி நிற்க வேண்டிய நிலை காணப் படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு வைத்தியசாலை, வளாகத்தி னுள் பார்வையாளர் விடுதி களுக்குச் செல்லும் வரை தங்கி யிருப்பதற்கு மண்டபமொன்றை அமைத்துத் தருமாறு உரிய தரப்பினரைக் கோரியுள்ளனர்.

1996 இற்கு முன்னர் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரால் வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த பார்வையாளர் மண்டபம்போர்வேளையில்முழுமையாகச் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட அச்சுவேலி பஸ்நிலைய வீதி



அச்சுவேலி, செப்.10
ஆவரங்கால் சந்தியில் இருந்து அச்சுவேலி பஸ் நிலையத்துக்குச் செல்லும் பிரதான வீதி திருத்தி அமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக உள்ளது.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் மற்றும் பஸ் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் குறித்த வீதி நீண்ட காலமாகத் திருத்தி அமைக்கப்படாமல் இருப்பதால் பயணிகள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்-பருத்தித்துறை பிரதான வீதி, அச்சுவேலி வல்லை-சங்கானை வீதி, அச்சுவேலி இராச வீதி ஆகியன உரிய முறையில் விஸ்தரிக்கப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டு காப்பெற் வீதியாக மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

ஆவரங்கால் சந்தியில் இருந்து அச்சுவேலி மத்திய கல்லூரி வரையுள்ள 2 கிலோ மீற்றர் தூரம் மட்டும் எந்த விதமான மறுசீரமைப்புக்கோ திருத்த வேலைக்கோ உட்படுத்தப்படாமல் குன்று குழியுமாக பூர்வீக நிலையில் உள்ளது.

பெருமளவு வாகனப்போக்குவரத்தும் மக்கள் பயன்பாடும் அதிகமாக உள்ள குறைந்தளவு தூரம் கொண்ட இந்த வீதியைத் திருத்தி அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-11)

### நல்லூர் திருவிழா காலத்தில் கொடிகாமம் - யாழ்ப்பாணம் மார்க்க

# தனியார் பஸ்கள் அதிகரித்த கட்டணங்கள் அறவீடு

யாழ்ப்பாணம், செப்.10
நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவுக்குச் சென்ற பக்தர்களை ஏற்றிச் சென்ற கொடிகாமம் - யாழ்ப்பாணம் மார்க்க தனியார் பஸ்கள் அதிக கட்டணத்தை அறவிட்டுள்ளனர் என்று அதில் பயணித்தவர்கள் தெரிவித்தனர்.

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் தனியார், அரசபஸ்கள் யாவும் விசேடமாக நல்லூர் தேர் மற்றும் திருவிழா நாள்களில் நல்லூருக்குச் செல்லும் அடியார் கள் தொகை அதிகம் என்பதனால் அவர்களை நல்லூரில் இறக்கிவிட்டே யாழ். நகருக்குச் செல்லுமாறு பஸ் சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.. அவ்வாறே யாழ்.நகரிலிருந்து கொடிகா மம் செல்லும் பஸ்களும்கச்சேரிஊடாகநல்லூர் சங்கிலியன் சிலையை அண்மித்து கோயிலுக்குச் சென்றவர்களை ஏற்றிக் கொண்டு செல்வதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அவ்வாறு தேர்த்திருவிழா அன்று கைதடியிலிருந்து தனியார் பஸ்ஸில் புறப்பட்ட இருவர் செம்மணி வீதியூடாக நல்லூருக்குச் சென்றனர். அவர்களிடம் இருந்து தலா 20 ரூபா வீதம் 40 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

மறுநாள் தீர்த்ததிருவிழா அன்று கைதடியிலிருந்து இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் செல்வதற்கு 16 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

தீர்த்தம் நிறை வடைந்து அன்று முற்பகல் நல்லூர் சங்கிலியன் சிலையடியில் தனியார் பஸ் ஒன்று கொடிகாமம் செல்வதற்கு பயணிகளுடன் சிறிது நேரம் காத்திருந்தது. அதில் ஏறி கைதடிக்குச் செல்வதற்கு 25 ரூபா தருமாறு நடத்துநர் கேட்டுள்ளார். 16 ரூபாவுக்குப் பதிலாக எதற்காக 25 ரூபா தரவேண்டும் என்று பயணி கேட்ட போது, கைதடியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு உள்ள கட்டணம் தான் நல்லூருக்கும் அறவிடுமாறு சங்கம் கூறியுள்ளதாகத் தெரிவித்தார். தேவையென்றால் சங்கத்துடன் போய்க் கதைக்குமாறும் நடத்துநர் கூறியுள்ளார்.

கைதடி யாழ்ப்பாணம் போக்குவரத்துக்கான ஒரு வழிக் கட்டணமாக 23 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் நடத்துநர்கள் 25 ரூபாவே அறவிட்டு பயணிகளிடம் 25 ரூபா வீதம் பெற்று வருகின்றனர். சில்லறைப் பணம் இருந்தாலும் மிகுதிப் பணமாக 7 ரூபாவை கொடுப்பதில்லை. 5 ரூபா மட்டுமே கொடுத்தனுப்புகின்றனர்.

சில வேளைகளில் சில்லறைப் பணம் இல்லை என்று கூறி 30 ரூபாவை அறவிடுகின்றனர்.

பஸ்ஸில் தினமும் சென்று வருபவர்களிடமிருந்து ஒரு வழிகட்டணத்தில் 2 ரூபா வீதம் 4 ரூபாவை பஸ் நடத்துநர்கள் தினமும் மேலதிகமாகப் பெற்று வருகின்றனர். பணத்துக்குரிய சிட்டை (ரிக்கற்) வழங்கப்பட வேண்டும் என்று சங்கம் கூறி வருவது பேச்சளவில் மட்டுமே உள்ளது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் தனியார் பஸ் சங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும்எடுத்திருக்க வில்லை என்று பயணிகள் குற்றம்சாட்டுகின்றனர். (வ-4)

## இரவில் கேட்ட வெடிச் சத்தங்களால் கலவரப்பட்ட வடமராட்சி மக்கள்

வடமராட்சி.செப்.10
இரவு வேளையில் திடீரெனக் கேட்ட குண்டுச் சத்தங்கள் போன்ற அதிர்வுகளால் வடமராட்சி மக்கள் பீதியுற்றனர். என்னவோ ஏதோ என்று கலவரப்பட்டனர்.

சில நிமிடங்களின் பின்னரே ஆலயத்திருவிழா வில் கொளுத்தப்பட்ட வெடிகளின் சத்தங்கள் தான் அவை என்பது தெரிய வந்தது.

வதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்மன் கோவில் 14 ஆம் திருவிழாவை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை இரவு 9.30 மணிக்குப் பின்னர் சரமாரியாகக் கொளுத்தப்பட்ட வெடிகளினாலேயே மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்தத் திருவிழாவுக்கென நீர்கொழும்பில் இருந்து பல லட்சம் ரூபா செலவில் தனி வாகனம் மூலம் எடுத்து வரப்பட்ட வெடிகள் சுவாமி வீதி உலாவரும்போது சரமாரியாகக் கொளுத்தப்பட்டன. கொளுத்தப்பட்ட வெடிகளில் சாதாரண சத்தம் கொண்ட வெடிகளை விட குண்டுவெடிப்பது போன்ற சத்தங்கள் அடுத்தடுத்து கேட்டன.

அதனால் பதற்றமுற்ற வடமராட்சி மக்கள் வெடிச்சத்தம் வந்த திசையை நோக்கிய பகுதிகளில் வசிக்கும் தமது உறவினர்கள் நண்பர்களுடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஏதாவது அசம்பாவிதமா என விசாரித்துக் கொண்டனர். அதை அடுத்தே திருவிழாவில் வெடி கொளுத்தப்பட்ட விவரம் தெரிய வந்து நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

இதேவேளை வெடிச்சத்தம் கேட்டு கோயிலுக்கு விரைந்த நெல்லியடிப் பொலிஸார் வெடி கொளுத்திய இளைஞர்களுடன் வாக்குவாதப்பட்டு பெரும் சத்தம் கொண்ட வெடிகளைக் கொளுத்த அனுமதி இல்லை என்று தெரிவித்தனர்.

திருவிழாஉபயகாரர்கள்பொலிஸாருடன் பேச்சு நடத்தியபோது வெடி கொளுத்தும் பணத்தை தான தருமங்களுக்கு உதவுங்கள். அல்லது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குங்கள் எனப் புத்திமதி கூறியதுடன் சத்தம் குறைந்த வெடிகளை மாத்திரம் கொளுத்துமாறு கூறினார். (ஒ-8)

## வல்லிபுர ஆழ்வார் வெளிவீதியுலா



வடமராட்சி, செப்.10
வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவின் 7 ஆம் திருவிழாவான இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் இரவுத் திருவிழாவின் போது சுவாமி வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்குவார்.

வடக்கு வீதியில் சுவாமி வெளிவீதி உலாவரும் போது கற்கோவளம் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் நிகழ்வு அந்நாள் திருவிழாவின் கருத்தைச் சித்திரிக்கும் முறையில் இடம்பெறும். (ஒ-8)

## உரியவரிடம் ஒப்படைக்க வைத்திருந்த பேர்ஸை இலாவகமாக திருடிய நபர்

வலி.தென்மேற்கு.செப். 10
ஆலய மண்டபத்தில் அநாதரவான நிலையிலிருந்த மணிப் பேர்ஸை அவதானித்த முதியவர் ஒருவர் அதை உரியவரிடம் ஒப்படைப்பதற்காக எடுத்துச் சென்று பாதுகாப்பாக வைத்திருந்த சமயம் இது குறித்து அறிந்து கொண்ட நபரொருவர் அந்தப் பேர்ஸை இலாவகமாகத் திருடிக்கொண்டு அவ்விடத்திலிருந்து நழுவிச் சென்றவர் அதற்குள் இருந்த சுமார் 7 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு பேர்ஸை வீசிவிட்டு சென்றுள்ளார்.

இந்தத் தந்திரமான திருட்டு சுதுமலையில் இடம்பெற்றுள்ளது.

> தேநீர் பருகி விட்டு திரும்பி வந்த முதியவர் சைக்கிள் பையில் வைத்த பேர்ஸைக் காணாது அதிர்ச் சிக்குள்ளானார். அவ்விடத்தில் தேடிப் பார்த்தபோது வீதியில் பேர்ஸ் வீசப்பட்டிருப்பதை கண்டார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் சாவல்கட்டிலுள்ள தனது பெற்றோரைப் பார்ப்பதற்காக வரும் வேளைகளில்சுதுமலைஅம்மன்ஆலயத்துக்குச் சென்று வழிபடுவது வழக்கம். சமபவ தினத்தன்று காலை அவர் தனது பெற்றோரின் வீட்டிலிருந்து சைக்கிளில் சுதுமலை ஆலயத்துக்குச் சென்று அம்பாளைத் தரிசித்து விட்டுச் சிறிது நேரம் மண்டபத்தில் இருக்கும் போது இவரின் கைத்தொலை பேசிக்கு அழைப்பொன்று வந்தது.

சேட்பொக்கற்றிலிருந்தபேர்ஸை எடுத்துப் பக்கத்தில் வைத்து விட்டு தொலைபேசியில் உரையாடிய இவர் மண்டபத்தில் வைத்த பேர்ஸை மறந்து விட்டு சைக்கிளில் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதேவேளை, வழமைபோல் மேற்படி ஆலயத்துக்குச்சென்று மண்டபத்திலிருந்து சிறிது நேரம் பொழுதைக் கழிக்கும் இணுவிலைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் அநாதரவான நிலையிலிருந்த பேர்ஸை அவதானித்து அதனை உரியரிடம் கையளிக்கக் காத்திருந்தார்.

ஆனால் அரை மணித்தியாலம் கடந்தும் உரிமைகோர எவரும் முன்வரவில்லை. எனவே அதை எடுத்து உரியவரிடம் ஒப்படைப்பதற்காக தனது சைக்கிளில் இருந்த பையில் பாதுகாப்பாக வைத்து விட்டு மானிப்பாயிலுள்ள தேநீர்க் கடைக்குச் சென்று, அது குறித்து அங்கிருந்தவர்களிடம் தெரிவித்துவிட்டு தேநீர் பருகிக் கொண்டிருந்தார்.

அவரது கதையை நன்றாகக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் சைக்கிள் பையில் வைக்கப்பட்டிருந்த குறித்த பேர்ஸை எடுத்துக் கொண்டு நழுவிச் சென்றுவிட்டார். தேநீர் பருகி விட்டு திரும்பி வந்த முதியவர் சைக்கிள் பையில் வைத்த பேர்ஸைக் காணாது அதிர்ச்சிக்குள்ளானார். அவ்விடத்தில் தேடிப் பார்த்தபோது வீதியில் பேர்ஸ் வீசப்பட்டிருப்பதை கண்டார்.

அதை எடுத்துப் பார்த்தபோது தேசிய அடையாள அட்டையுடன் தொலைபேசி இலக்கமும் இருந்ததைக் கண்டு உரியவரிடம் தொடர்பு கொண்டு அவரை வரவழைத்த போது அதற்குள் இருந்த 7 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டமை தெரியவந்தது. (வ-115)

## உயர்கல்விக்கு ஆர்வம் காட்டும் உயர்தரப் பரீட்சை எழுதியோர்

யாழ்ப்பாணம், செப்.10
ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவடைந்தவுடன் தற்போது மேலதிக உயர்கல்விகளைத் தனியார் கல்வி நிறுவனங்களில் தொடர்வதற்கான முன்னாயத்தங்களில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கல்வி நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு தமது நிறுவனங்கள் குறித்த விளம்பரங்களை மாணவர் களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளதால் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்க்காமல் அடுத்தகட்ட கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு மாணவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்கால தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப மாணவர்கள் தம்மைத் தயார்படுத்தும் நோக்குடன் கிராமப்பகுதிகளில் இருந்து யாழ்.நகர் நோக்கி படையெடுக்க ஆரம்பித்துள்ளனர். இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி தனியார் கல்வி நிறுவனங்களும் மாணவர் மத்தியில் தமது நிறுவனங்களால் வழங்கப்படும் கற்கைநெறிகள் தொடர்பாக விளக்கமளித்து வருகின்றன. குறிப்பாக கருத்தரங்குகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் ஊடாக மாணவர்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

மாணவர்கள்கூட்டாகஇணைந்து இத்தகைய கற்கை நெறிகளில் இணைவதற்கு தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய முற்பணங்களையும் செலுத்துவதில் ஆர்வம் காட்டியுள்ளனர். (வ-14)

## மழையைக் கண்டதும் விவசாயிகள் வயல்களில்



தென்மராட்சி,செப். 10
தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த நான்கு தினங்களாக மழை பெய்ததையடுத்து பிரதேச நெல் வயல்களில் காலபோக நெற் செய்கைக்கான ஆரம்பப் பணிகளை விவசாயிகள் முன்னெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

வயல்களில் வரம்புகள் கட்டுதல், வாகனங்களில் கொண்டு வரப்படும் குப்பை போன்றவற்றை பரவுதல் போன்ற பணிகளில் விவசாயிகள் அதிகமாக ஈடுபட்டு வருகின்றனர். (வ-9)

## பருத்தித்துறையில் 27 வீடுகள் வெள்ளியன்று கையளிப்பு

வடமராட்சி, செப்.10
பருத்தித்துறை துறைமுகப் பகுதியை அண்டிய பகுதியில் படையினர் வசமிருந்த 27 வீடுகள் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு உரிமையாளர்களிடம் படையினரால் கையளிக்கப்படவுள்ளன.


வீட்டு உரிமையாளர்கள் அன்றைய தினம் ஆவணங்களுடன் பருத்தித்துறை நகர கிராம சேவையாளர் எஸ்.யோகேந்திரநாதனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

1996 ஆம் ஆண்டு இந்தப் பகுதி படையினரின் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து வீடுகள் படையினர் வசமாகியிருந்தன.

வீடுகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு உரிமையாளர்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்ததுடன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பிரஸ்தாபித்திருந்தனர்.

கடைசியாக நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது ஒரு சில மாதங்களில் வீடுகளை ஒப்படைப்போம் எனப் படையினர் தெரிவித்திருந்தனர். (ஒ-8)

## ஆயுதங்கள் மீட்பு



மட்டக்களப்பு.செப்.10
மட்டக்களப்பு.வெல்லாவெளி , நவகிரிநகர் வயல்வெளியிலிருந்து ஆயுதங்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளன என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.
ரீ - 56 ரக துப்பாக்கிகள் 2, ரீ - 56 ரக துப்பாக்கிகளுக்கான மகஸின்கள் 4, தோட்டாக்கள் 200, ஒரு கைக்குண்டு ஆகியவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.
களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் வசிக்கும் விவசாயி ஒருவருக்குச் சொந்தமான வயலிலிருந்தே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.
நவகிரிநகரில் உள்ள தனது வயலை பெரும்போகச் செய்கைக்காக ஞாயிற்றுக்கிழமை மாலை உழுதுகொண்டிருந்த போது, இந்த ஆயுதங்கள் வெளிப்பட்டன என்று அவர் களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் தெரிவித்தார்.
அதனையடுத்தே குறித்த வயல் வெளிக்குச் சென்ற களுவாஞ்சிக்குடி பொலிஸார் ஆயுதங்களை மீட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கிழக்கில் படையினரின் போர்ப் பயிற்சி நாளை

## வெளிநாட்டு இராணுவமும் பங்கேற்பு



மட்டக்களப்பு.செப்.10
கிழக்கு மாகாணத்தில் இலங்கை இராணுவத்தின் நீர்க்காகம் தாக்குதல் - 4 போர்ப் பயிற்சி நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
நாளை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் போர்ப் பயிற்சியில், 2,698 படையினரும், 40 வெளிநாட்டுப் படையினரும் பங்கேற்கவுள்ளனர்.
இந்தப் போர்ப்பயிற்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள, கதிரவெளி, திருகோணமடு, தொப்பிகல, நரக்கமுல்லை பகுதிகளில் நடைபெறவுள்ளது.
இந்தப் போர்ப் பயிற்சியில் இலங்கை இராணுவத்தின் கொமாண்டோ மற்றும் சிறப்புப் படைப்பிரிவுகளும், இலங்கை கடற்படை மற்றும் விமானப்படையின் சிறப்புப் படைப்பிரிவுகளும் பங்கேற்கவுள்ளன.
இந்தியா, பாகிஸ்தான், சீனா, பிறேசில், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 40 படையினரும் இதில் பங்கேற்கவுள்ளனர்.
கடல், தரை,வான் தாக்குதல் போர்ப்பயிற்சிகள் திருகோணமடு, வெருகல், பகுதிகளில் இடம் பெறும்.
இந்த ஆண்டு போர்ப்பயிற்சி, படகுத்துறைகள் மீதான தாக்குதல், வேவு இலக்குகள் கண்காணிப்பு, வான்வழி நடவடிக்கைகள், கடல்வழி நடவடிக்கைகள், கடல்வழித் தரையிறக்கம், வழி கண்டறியும் குழுக்கள், எதிரியின் கோட்டைகளில் பரசூட் மூலம் குதித்தல், பதுங்கித் தாக்குதல்கள், தேடுதல்கள் நடவடிக்கைகள், தீவிரவாத முறியடிப்பு மற்றும் பிணைக் கைதிகள் மீட்பு ஆகியவற்றை மையப்படுத்தி இப்பயிற்சி இடம் பெறவுள்ளது.
போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை இராணுவம் 2010 ஆம் ஆண்டு, முதல் முறையாக சிலாவத்துறையில் நீர்க்காகம் தாக்குதல்-1 போர்ப் பயிற்சியை நடத்தியது. அதையடுத்து, திருகோணமடு, தொப்பிக்கல பகுதிகளில் இந்தப் பயிற்சிகள் நடத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## கிழக்குப் பொலிஸாருக்கு முழந்தாள் தண்டனை

மட்டக்களப்பு.செப்.10
பொலிஸாருக்கு கைகளை உயர்த்தியவாறு முழந்தாளிட்டு நிற்க வைப்பித்து தண்டனை வழங்கப்பட்ட சம்பவமொன்று கிழக்கில் இடம் பெற்றுள்ளது.
கொழும்பிலிருந்து சென்ற பொலிஸ் அதிகாரியொருவரே பொலிஸ் சார்ஜன்ட்டுகளுக்கு இவ்வாறு தண்டனை வழங்கியுள்ளார்.
பொலிஸ் சார்ஜன்ட்டுகள் இரண்டு கைகளையும் உயர்த்தியவாறு அரை மணித்தியாலம் முழந்தாள் இட்டு நின்றுள்ளனர்.
லஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரைத் தண்டிக்கும் வகையிலேயே இந்தத் தண்டனை அந்த நிலையத்தில் கடமையாற்றும் சகல சார்ஜன்ட்டுகளுக்கும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இரண்டு கைகளையும் உயர்த்தியவாறு முழந்தாளிட்டிருந்த சார்ஜன்ட்டுகளில் இருவர் மயங்கி விழுந்ததையடுத்து அந்தத் தண்டனை இடைநடுவில் நிறுத்தப்பட்டது. (ச)



வாழைச்சேனை கைலாசப்பிள்ளையார் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது விநாயகப்பெருமான் தேரில் ஆரோகணித்து பக்தர்கள் புடைசூழ வீதிவலம் வருகிறார். (ச)

## கரடியனாறில் இந்திய புடைவை வியாபாரி விபத்தில் காயம்

மட்டக்களப்பு.செப்.10
மட்டக்களப்பு , கரடியனாறு பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இந்தியப் புடைவை வியாபாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.
ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில், எஸ்.சங்கர் என்ற இந்தியப் புடைவை வியாபாரியே இவ்வாறு விபத்துக்குள்ளானார்.
அவரது கால் முறிவடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இந்த நபர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது வான் மோதி விபத்துக்குள்ளானார் என்று கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# கிழக்கில் தகைமையற்றவர்கள் பதில் அதிபர்களாக கடமையில்

## இலங்கை ஆசிரிய சங்கம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு.செப்.10
கிழக்கு மாகாணத்தில் அதிபர் சேவைக்கு தகுதி பெற்றவர்கள் இருந்தும் பல வருடங்களாக எதுவித தகுதியுமற்றவர்களே பாடசாலைகளில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றி வருகின்றனர்.
இதற்கு அரசியல் பின்னணியே காரணம் என்று இலங்கை ஆசிரிய சங்க பொதுச் செயலர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.
அதிபர் சேவைக்குத் தகுதி பெற்றவர்களை நியமிக்கும்படி கிழக்கு மாகாண கல்வி அமைச்சரை கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சங்கம் சந்தித்து பேச்சு நடத்தியது. அப்போது கல்வி அமைச்சர் தகுதியுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலைத் தயாரித்து இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தபோதும், இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.
முஸ்லிம் பாடசாலைகளே நிரந்தர அதிபர்கள் இல்லாத காரணத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (ச)

> ” முஸ்லிம் பாடசாலைகளே நிரந்தர அதிபர்கள் இல்லாத காரணத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

## அம்பாறையில் நெல்லினம் 'ஆசனிக்' சோதனைக்கு

அம்பாறை.செப்.10
அம்பாறை மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட அனைத்து நெல்லினங்களினதும் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவற்றை ஆசனிக் சோதனைக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று விவசாயப் போதனாசிரியர் எஸ். எல். ஏ. பஹ்மி அகமட் தெரிவித்தார்.
இந்த மாவட்டத்தில் உள்ள நெல்லில் இதுவரை ஆசனிக் தாக்க உறுதிப்படுத்தப்படவில்லை என்று அவர் கூறினார். பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட சிறுநீரகப் பிரச்சினைக்கு விவசாயத்தில் அளவுக்கதிகமாக இரசாயனங்கள் பாவிக்கப்பட்டமையே காரணமா? என்று கண்டறியும் நோக்கிலே இந்தச் சோதனை நடத்தப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.
விவசாயிகளைத் தெளிவுபடுத்த இது ஒரு சிறந்த வேலைத்திட்டமாகும். எதிர்காலத்தில் பாவிக்கப்படவுள்ள விவசாய இரசாயனங்களை கணிசமான அளவு குறைத்து உற்பத்திச் செலவு குறைந்த நெல்லை உற்பத்தி செய்வதுடன் தூய அரிசியை மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## இந்தியத் தூதர் மட்டக்களப்பு பயணம்



மட்டக்களப்பு.செப்.10
இந்தியத் தூதர் யஸ்வர்தன் குமார் சிங்ஹா இன்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்புக்குச் செல்லவுள்ளார்.
அவரது மட்டக்களப்பு பயணத்தின் போது இந்திய - இலங்கை நட்புறவின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்திய வீடமைப்புத் திட்டங்களை அவர் பார்வையிடவுள்ளார்.
இலங்கைக்கான புதிய இந்தியத் தூதராக கடமையேற்ற பின்னர் முதற்தடவையாக கிழக்குக்கு பயணம் செய்யும் வை.கே. சிங்ஹா மீள்குடியேறியுள்ள மக்களையும் சந்திக்கவுள்ளார். (ச-32)

# ஒலுவில் துறைமுக நினைவுக்கல்லில் அஷ்ரப்பின் நாமம் இருட்டடிப்பு

## நன்றிகெட்ட செயல் என்கிறார் முனாஸ்



மட்டக்களப்பு.செப்.10
'ஜனாதிபதியால் திறக்கப்பட்ட ஒலுவில் துறைமுகம் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் கனவின் ஒரு அங்கமாகும்.
ஆனால் அந்தத் துறைமுகத்துக்கான நினைவுக் கல்லில் அந்த மாமனிதரின் பெயரைப் பொறிக்க விடாமல் தம்பெயர் தான் வரவேண்டும் என்று துடித்த நன்றி கெட்ட முஸ்லிம் அரசியல்வாதிகளை வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்று அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எல். முனாஸ் தெரிவித்தார்.
பிரதேசசபை உறுப்பினரின் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு கூறினார்.அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெயர் எடுக்கத் துடித்துக் கொண்டிருக்கும் தன்னினத்தையும் புறமொதுக்கி பதவி மட்டும் போதும் என்று திரியும் சில அரசியல்வாதிகள் தம்மை மறந்து செயற்படுகின்றனர். தான் எங்கிருந்து வந்தேன் என்பதனை மறக்காமல் அரசியலையும் பதவிகளையும் துச்சமென மதித்த அந்த மாமனிதனையும் மறக்காது நன்றியுடன் செயற்பட்டால் அவர்களது அரசியல் சிறப்புறும்.
அவர்கள் நடந்து செல்லும் பாதைகள் 99 வீதம் சுயநலமிக்கவையாக இருப்பது நன்றாகத் தெரிகின்றது. ஒலுவில் துறைமுகத் திறப்பு விழாவுக்காக ஜனாதிபதியை வரவேற்க முஸ்லிம் காங்கிரஸ் காரர்கள் வைத்த பதாகைகளைப் பார்க்கின்ற பொழுது நாடி நரம்புகள் துடிக்கின்றன.- என்றார். (ச)

## ஆர்ப்பாட்டத்தை அடக்க இராணுவமா? ஆராயக் குழு



கொழும்பு.செப்.10

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரை அடக்குவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு மூவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமே மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளது.

இந்தக் குழு ஜனாதிபதி சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா தலைமையிலேயே நியமிக்கப்பட்டுள்ளது. (ச)

> **இலங்கை சட்டத்தரணிகள் சங்கமே மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளது.**

# இனவாதம் பேசுகின்ற சில அரசியல் கட்சிகள்

## தம்பரஅமில தேரர் குற்றச்சாட்டு



கொழும்பு.செப்.10

இனவாதத்தால் பாதிப்புகளை எதிர்நோக்கி பாடங்களை கற்றுக்கொண்டாலும் சில அரசியல்கட்சிகள் இனவாதத்தை இன்னும் கைவிடவில்லை என்று ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மக்கள் அமைப்பின் இணை ஏற்பாட்டாளர் தம்பர அமிலதேரர் குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில இனவாத கட்சிகளும், அரசியல் தலைவர்களும் தமது அதிகார இருப்பை தற்காத்துக் கொள்வதற்காக இனவாதத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இலங்கையின் சிங்களம், தமிழ், முஸ்லிம் என மூன்று பிரதான இனங்கள் வாழ்கின்றன. இந்த சகல இனங்களும் ஒரு நாட்டின் இனமாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்கான உரிய செயற்பாடுகளை எவரும் மேற்கொள்ளவில்லை.

பிரித்தானியர்கள் இலங்கையை கைப்பற்றிய பின்னர் நாட்டை முதலாளித்துவ பொருளாதாரத்துக்குள் கொண்டு சென்றனர். அத்துடன் இனங்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தி இனவாத ரீதியான ஆட்சியை நடத்தினர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் நிர்வாக முறைகளை ஏற்படுத்தும்போது, ஆங்கிலேயர் இனவாதத்தைப் பயன்படுத்தினர். அதனால் இலங்கையில் சகல இனங்களும் தம்மைத் தனித்து அடையாளப்படுத்திக் கொண்டதுடன் இலங்கையர் என்ற எண்ணம் அவர்களுக்குள் ஏற்படவில்லை.

இந்த நிலையில் இனங்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. இதனை நாட்டை ஆட்சி செய்த முதலாளித்துவ அரசுகள் மேலும் அதிகரிக்கச் செய்தன.-என்றார். (ச)

## ஹெரோயின் வைத்திருந்த நபர் கைது




கொழும்பு,செப்.10

நிட்டம்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தபுராகல்ல, ருக்ஹகவில பிரதேசத்தில் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடவத்த பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே வீடொன்றைச் சோதனை செய்யும்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வீட்டிலிருந்த 60 கிராம் 690 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 15 கிராம் 780 மில்லி கிராம் அபின் என்பவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ச)



எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு, வட மேல் மற்றும் மத்திய மாகாண சபைகளின் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப்பதிவு நேற்று திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இன்று செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ள இந்தத் தபால் மூல வாக்களிப்பில் 11,323 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இந்த இரண்டு தினங்களிலும் தபால் மூலம் வாக்களிக்க முடியாதவர்கள் எதிர்வரும் 12ஆம், 13ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## போலிக் கும்பலிடம் ஏமாற வேண்டாம்

### நுகர்வோர் அதிகாரசபை வேண்டுகோள்

கொழும்பு.செப்.10

நுகர்வோர் அதிகாரசபையின் அதிகாரிகளெனக் கூறிக்கொண்டு கடைகளுக்குள் புகுந்து பணம் மற்றும் பொருள்களை கொள்ளையடிக்கும் போலிக் கும்பலிடம் ஏமாற வேண்டாம் என்று அதிகார சபையின் தலைவர் ரூமி மார்சூக் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். நாட்டின் பல இடங்களில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தொடர்ந்து தனக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அவர் சுட்டிக்காட் டினார்.

விற்பனை நிலையங்களைச் சோதனையிட வருபவர்கள் உண்மையில் நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் தானா? என்பதனை அவர்களது அலுவலக அடையாள அட்டையைப் பார்த்து உறுதி செய்த பின்னர் அவர்களைச் சோதனை நடவடிக்கைக்கு அனுமதிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார். (ச)

## போதைப்பொருள் கடத்தல்; 90 ஆயிரம் பேர் சிக்கினர்



கொழும்பு,செப்.10

இலங்கையில் கடந்த 20 மாதங்களில் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 90 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தியவர்களே அதிகளவில் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப் பொருள் கடத்தல் மற்றும் வைத்திருத்தல் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நாள்தோறும் 150 பேர் கைது செய்யப்படுகின்றனர்.

பொலிஸாரின் சுற்றிவளைப்புக்கள் மூலம் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் பல முறியடிக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தல், கடத்தல் நடவடிக்கைகளை இல்லாதொழித்தல் ஆகிய நடவடிக்கைகளில் பொலிஸார் கூடுதல் கவனம் செலுத்துவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

## பதுளை அரச வங்கியொன்றில் 80 லட்சம் ரூபா மோசடி

கொழும்பு,செப்.10

அரச வங்கியொன்றில் சதக் கணக்கில் சிறுசிறு தொகைகளாக 80 லட்சம் ரூபா வாடிக்கையாளர் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளாக வாடிக்கையாளர்களின் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட வேண்டிய தொகைகளின் சதக் கணக்குகள் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் பதுளை பிர தேச அரச வங்கியொன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தும் பொறுப்பு, கொழும்பு குற்ற விசா ரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பண்டாரவளை பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் விஜேசிங்க தெரிவித்தார்.

> **அரச வங்கியொன்றின் சிரேஷ்ட அதிகாரியொருவர் மிகவும் நுட்பமான முறையில் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார்.**

அரச வங்கியொன்றின் சிரேஷ்ட அதிகாரியொருவர் மிகவும் நுட்பமான முறையில் இந்த மோசடியில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வின் போது இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

வாடிக்கையாளர்களின் வைப்புகளுக்கான வட்டி மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் போது வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகைகளில் ஏதேனும் சதக் கணக்குகள் இருந்தால் அவற்றை அந்த அதிகாரி தனது கணக்கிற்கு மாற்றிக் கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ச)

## செப்பு உலோகம் கொடுத்து ரூ.16 லட்சம் மோசடி



கொழும்பு.செப்.10

மிரிஹானை பிரதேசத்தில் தங்கம் பெற்றுத் தருவதாகக் கூறி 16 லட்சம் ரூபா பண மோசடி செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்த நபர் தங்கம் எனக் கூறி செப்பு உலோகத்தை வழங்கியுள்ளார் என்று மிரிஹானை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் ஜா-எல பிரதேசத்தில் வைத்து 42 வயதான சந்தேக நபர் ஒருவரே கைதாகியுள்ளார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மிரிஹானை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச)

## இந்திய மருந்துக் கொள்வனவு இடைநிறுத்தம்

### சுகாதார அமைச்சு கூறுகிறது



கொழும்பு.செப்.10

இந்தியாவின் எல்விட்டா பாஃமா என்ற மருந்துப் பொருள் நிறுவனம் ஒன்றிடம் கொள்வனவு செய்யப்பட்டு வந்த அனைத்து மருந்து வகைகளையும் கொள்வனவு செய்யாது கைவிடுவதற்கு மருத்துவ தொழில்நுட்ப மற்றும் விநியோகப் பிரிவு தீர்மானித்துள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் தரம் குறைந்த மருந்துப் பொருள்களை வழங்கிய எல்விட்டா பாஃமா என்ற நிறுவனத்திடமிருந்து மருந்துப் பொருள்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை இடைநிறுத்தப்படவுள்ளது என்று அதன் பணிப்பாளர் ஹேமந்த பெனரகம கூறினார்.

எல்விட்டா பாஃமா நிறுவனத்திடமிருந்து கடந்த வருடம் தொடக்கம் தரம் குறைந்த மருந்துப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் மருந்துப் பொருள்கள் தரம் குறைந்து காணப்படுமிடத்து அதற்காக பணம் அல்லது சிறந்த மருந்துப் பொருளை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

எனினும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு தரம் குறைந்த் மருந்துப் பொருள்களை விநியோகித்தின் காரணமாக எல்விட்டா பாஃமா நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும் மருந்துப் பொருள்களை தற்காலிகமாக நிறுத்திக் கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அந்த நிறுவனத்திடமிருந்து பெற்று வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட மருந்துப் பொருள்களை வைத்தியசாலைகளிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மருத்துவ நிபுணர் குழுவொன்று தற்போது இந்திய நிறுவனத்தின் தலைமையகத்துக்கு அனுப்பப்படவுள்ளது. அந்த குழு மருந்துப் பொருள்களை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நன்றே செய்ய, அதனை இன்றே செய்ய அரசு மனங்கொள்ள முனையுமா....?

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் பூகோள (காலக்கிரம) மீளாய்வுக் கூட்டத் தொடர் ஜெனீவாவில் நேற்று ஆரம்பமானது. மூன்று வார காலத்துக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத் தொடரில், சமீபத்தில் எங்கள் நாட்டுக்கு வந்து திரும்பிய, மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இங்கு தாம் கண்டு, கேட்டு, அவதானித்த விடயங்களை உள்ளடக்கிய காத்திரமான அறிக்கையைச் சமர்ப்பிக்க உள்ளார்.

உலகின் இருபது நாடுகளில் நிலவும் மனித உரிமை நிலைமைகள் குறித்து நான்காயிரம் சொற்கள் கொண்ட அறிக்கையை அவர் சமர்ப்பிப்பார் என்று நம்பப்படுகிறது. இலங்கை குறித்த தமது அறிக்கையை எதிர்வரும் இருபத்தைந் தாம் திகதி- இலங்கையில் வடக்கு மாகாண சபை உட்பட மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிவுற்ற நான்காவது நாளில்-நவநீதம்பிள்ளை சமர்ப்பிப்பார்.

இந்த மீளாய்வுத் தொடர் மாநாட்டை இலங்கை பெரிதாக எடுத்துக் கொள்ளாது என்றும்-அரசின் உயர்மட்டத் தூதுக்குழு எதுவும் கலந்துகொள்ள மாட்டாது என்றும்-ஐ.நா.வுக்கான தூதுவர் ரவிநாத் ஆரியசிங்கா உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட குழு ஒன்றே செல்லும் என்றும், சொல்லப்படுகிறது. இறுதி நேரத்தில் அமைச்சர் எவரினதும் தலைமையில் உயர்மட்டக் குழு செல்லும் வாய்ப்பு உண்டு என்பதனைத் தட்டிக் கழித்து விடவும் இயலாது.

தமது இலங்கை விஜயத்தின் சூட்டோடு சூடாக, நவிப்பிள்ளை சமர்ப்பிக்க உள்ள அறிக்கை, இலங்கை அரசாங்கத்தைப் பல கோணங்களில் சூட்டோடு சூடாக மடக்கி விடும் என்பதால் சற்று அடக்கி வாசிக்க அரசு உத்தேசித்துள்ளதாகவும் கருதப்படுகிறது.

மிகக் குறிப்பாக, மனித உரிமைகள் ஆணையாளர், தமது இலங்கை விஜயத்தின் முடிவில் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், இந்த நாட்டின் அரசினதும், அதன் செயற்பாடுகள் குறித்தும் முன்வைத்த பாரதூரமான கருத்துக்கள் அரசை அல்லாட வைத்திருப்பதாக நம்பப்படுகிறது.

போரின் முடிவு கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மக்கள் எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் நாடாக இலங்கையைக் கட்டி எழுப்புவதற்குப் பதிலாக, சர்வாதிகாரப் போக்கை நோக்கிய திசையில் அதனை இட்டுச் செல்வது ஆழ்ந்த கவலையைத் தருகிறது.-

காணாமற்போனவர்கள் குறித்து விசாரிப்பதற்கு அரசு நியமித்துள்ள ஆணைக்குழு, வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் விசாரணை நடத்தமாட்டாது என்பது அதிர்ச்சி தருவதாகும்-என்பன போன்ற மற்றும் அவரது துணிச்சல் நிறைந்த வீச்சான கருத்துக்கள், எங்கள் நாட்டு அரசாங்கத்தைக் கதி கலங்க வைத்திருக்கவும் கூடும். யார் அறிவார்....?

மேலும், மனித உரிமைகள் ஆணையாளரின் காத்திரமான, அதேவேளை சூடான கருத்துக்களுக்கு அதிருப்தியும் ஆவேசமும் கலந்த கடிதத்தை அனுப்புவதற்கு அரசு உத்தேசித்துள்ளதாகவும் தகவல்கள் கசிந்திருந்தன. அவற்றுக்கு இடையில் நேற்று ஆரம்பமாகிய ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இப்போதைய மீளாய்வுத் தொடர்க் கூட்டத்தில், சட்ட நிபுணர்கள் குழு ஒன்று கலந்து கொள்ளக்கூடும் என்றும் அரசல் புரசலாகப் பேசப்படுகிறது.

நேற்று ஆரம்பமாகிய பூகோள மீளாய்வுத் தொடர் கூட்டத்தில் கலந்து கொள்ள சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் ஜெனீவா சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் ஆணையாளர் தமது இலங்கை விஜயத்தின்போது தெரிவித்த கருத்துக்கள், குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்ற நிலையை அரச தரப்புக்கு ஏற்படுத்தியதோ, என்னவோ...., அதன் அதிகார மட்டத்தில் வெப்பியாசாரத்தை கனல் பறக்கச் செய்துள்ளதாகவே தோன்றுகிறது.

நவநீதம்பிள்ளை அம்மையார் தமது ஏழு நாள் இலங்கை-விஜயத்தின்போது கண்டதும், கேட்டதும் பின்னர் சொன்னதும் தனக்குப் பெரும் பாதிப்புகளை, ஊறுகளை விளைவிக்கும் என்ற அச்சத்தை அரச தரப்புக்கு ஏற்படுத்தி உள்ளது என்பது வெளிப்படுகிறது; அல்லவா....?

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் இப்போதைய மீளாய்வுத் தொடர்க் கூட்டம், இலங்கைக்கு அதிக வெப்பத்தைத் தந்து புளுங்கச் செய்திருக்கிறது என்றால்-

ஆணையகம் எதிர்பார்க்கும் வழியில் தடம் பதித்து நடக்காமல், தனது தந்திரோபாயங்கள், தகிடுதத்தங்கள் மூலம் முந்திக் கொண்டு ஓடுவதற்கு அரசு முனைந்தால்; அல்லது திட்டமிட்டால் பலாபலன்கள் மேலும் மேலும் சிதறமுறலாம். ஆறுமாத இடைவெளியில் அனைத்துலகின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் வீச்சும் வேகமும் கொள்ளலாம். இது குறித்து இலங்கை அரசு ஆக்கபூர்வமாகச் சிந்திக்க முனையலாகாதா.....?

நன்றே செய்ய, அதனை இன்றே செய்ய அரசு மனங்கொள்வது எப்போது...?

# தேவையொரு மனமாற்றம்

ராஜராஜன்

சகல வளங்களும் நிறைந்து காணப்பட்ட போதிலும் எமது நாடு இன்னமும் வறிய நாடுகளின் பட்டியலில்தான் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த நாடு நாற்புறமும் வளம்மிக்க கடலால் சூழப்பட்டுள்ளது. மலைகள், ஆறுகள், நதிகள், ஏரிகள், குளங்கள் ஆகியவை பெருமளவில் இயற்கையாகவே அமைந்துள்ளன. தட்ப வெப்ப நிலையும் அனைத்துக்கும் சாதகமான நிலையில் காணப்படுகின்றன. இவற்றை விட அடர்ந்த காடுகளும் இங்குள்ளன. ஒரு நாட்டின் வளத்தை எடைபோடுவதற்கு இவற்றைவிட வேறெதுவும் தேவையில்லை. ஆனால் இந்த நாடு ஏனோ இன்னமும் வறிய நாடுகளின் பட்டியலில் தான் உள்ளடக்கப்பட்டுள்ளது. இங்கு வாழுகின்ற மக்களும் வறுமையின் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றனர். ஒரு சிலர் வளங்கள் உள்ளவர்களாகக் காணப்படலாம். ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது எமது நாட்டினதும், மக்களினதும் அவல நிலை தெரியவரும்.



ஆட்சியாளர்களின் மனங்களில் மாற்றங்கள் உருவாகுமானால் நாட்டின் அவலநிலையிலும் நிச்சயம் மாற்றங்கள் ஏற்படும்.

**அந்நிய ஆதிக்கத்துக்குள் இலங்கை**

சுமார் 450 ஆண்டுகள் இந்த நாடு அந்நியரின் ஆட்சிக்குள் இருந்தது. ஆனால் வளம்மிக்க நாடுகளில் ஒன்றாக விளங்கியது.

இலங்கையொரு சிறிய நாடாக இருந்த போதிலும் இங்கு காணப்பட்ட அரிய வளங்கள் அந்நியரைப் பெரிதும் கவர்ந்தன. இவற்றினால் தத்தமது நாடுகளுக்குப் பெரியளவில் வருமானம் கிடைக்குமென்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.

இதன் காரணமாக 1505 ஆம் ஆண்டு இலங்கை போர்த்துக்கேயர் வசமாகியது. அவர்கள் 1658 ஆம் ஆண்டு வரை இங்கு ஆட்சி புரிந்தனர். பின்னர் 1658 இலிருந்து 1796 ஆம் ஆண்டு வரை ஒல்லாந்தரும் , 1796 இலிருந்து 1948 இல் இந்த நாடு சுதந்திரம் அடையும் வரையில் ஆங்கிலேயரும் இந்த நாடடை ஆட்சி புரிந்தனர்.

அந்நியரின் ஆட்சிக் காலத்தில் எமது நாடு பல வகையிலும் வளர்ச்சி கண்டது. கல்வி, சுகாதாரம், தொழிற்றுறை, விவசாயம் எனப் பல துறைகளும் செழித்துக் காணப்பட்டன. அன்று எம்மை ஆட்சி செய்தவர்கள் எந்த வகையிலும் எம்முடன் ஒத்துப் போகாத இயல்புகளைக் கொண்டிருந்த வெள்ளையர்களாக இருந்ததோடு இங்குள்ள வளங்களைச் சுரண்டுவதி லும் குறியாக இருந்தார்கள். ஆனாலும் இந்த நாட்டினதும், மக்களினதும் முன்னேற்றத்தில் அக்கறை காட்டாமல் அவர்கள் இருந்ததில்லை.

**அபிவிருத்தியை நோக்கிச் சென்ற மலையகம்**

அவர்களது ஆட்சியில் மலையகம் பெரும் அபிவிருத்தி கண்டது. அங்குள்ள காடுகள் அழிக்கப்பட்டன. தேயிலை, றப்பர், கொக்கோ, மிளகு, வாசனைத் திரவியங்கள் போன்ற பல பணப் பயிர்கள் அங்கு பெருமளவில் பயிரிடப்பட்டன. அந்த வேலைகளுக்கு அதிகளவில் தொழிலாளர்கள் தேவைப் பட்டதால் இலங்கைக்கு அருகிலுள்ள இந்தியாவின் தென்பகுதியிலிருந்து ஏராளமான தொழிலாளர்கள் கப்பல் கள் மூலமாக இங்கு வரவழைக் கப்பட்டனர். இதன் காரணமாகவே இன்று மலையகத்தில் பெருமளவு இந்திய வம்சாவழி மக்கள் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகியது.

மேலும் அந்நியர் இங்கு இருந்தபோது இன, மொழி, பேதம் பெரிய அளவில் தலை காட்டவில்லை.

சிறுபான்மையின மக்கள் ஒதுக்கி வைக்கப்படவில்லை. மாறாக அன்றைய நிலையில் இந்த நாட்டின் சிறுபான்மை இனமொன்றைப் பிரதி நிதித்துவம் செய்யும் தமிழர் கள் பெரும்பான்மை சிங்கள இன மக்களைவிட உயர்ந்ததொரு இடத்தில் வைத் துக் கணிக்கப்பட்டனர். இதற்கு அவர்களது உயர்ந்த கல்வி நிலையும், திறமைகளும் காரணங்களாக அமைந்தன.

**சுதந்திரத்துக்குப் பின் மாறிய நிலைமை**

ஆனால் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இந்த நாடு ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றதன் பின்னர் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டன.

ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தவர்களின் தவறுகள் காரணமாக நாடு மீள முடியாததொரு நிலையில் வீழ்ந்து கிடக்கின்றது. ஒரு காலத்தில் செல்வத்தை அள்ளித் தந்த தேயிலை, இறப்பர் துறைகள் நலிவடைந்து போயுள்ளன. இந்தத் துறைகளில் ஈடுபடும் தொழிலாளர்களில் பெரும் பங்கினர் இந்திய வம்சாவழி மக்கள். போதிய வேதனம் வழங்கப்படாமையால் வறுமை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் இவர்களின் தலைவர்களென அழைக்கப்படுகின்றவர்கள் இந்த மக்களைச் சுரண்டிச் சுரண்டியே சுகபோக வாழ்வு வாழ்வதைக் காண முடிகின்றது. தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள் வதற்காக இவர்களை நாடிவரும் அரசி யல்வாதிகள் கூடத் தமது தேவைகள் முடிந்த பின்னர் இவர்களைக் கண்டு கொள்வதில்லை.

**பொருளாதாரத்தில் பின்னடைவு**

இந்த நாட்டின் பொருளாதாரம் வளர்ந்து வருவதாக மத்திய வங்கி அவ்வப்போது கூறி வருகின்ற போதிலும் மக்களின் வாழ்வாதாரத்தில் எத்தகைய வளர்ச்சியையும் காண முடியவில்லை. ஒரு 60 ரூபா கொடுத்து ஒரு இறாத்தல் பாண் கூட வாங்கிச் சாப்பிட முடியாத நிலையிலேயே மக்கள் உள்ளனர். ஊழல்கள், மோசடிகள் கார ணமாக பெரும்பாலான அரச நிறு வன்ங்கள் நட்டத்திலேயே இயங்கி வருகின்றன. இந்த நட்டங்களெல்லாம் வரி என்ற பெயரில் மக்களின் தலைகளிலேயே சுமைகளாக ஏற்றி வைக்கப்படுகின்றன.

மேலும் உள்ளூர் வங்கிகள், வெளி நாடுகள் ஆகியனவற்றிலிருந்து வரலாறு காணாத அளவில் அரசினால் கடன்கள் வாங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே பெறப்பட்ட கடன்களையும், வட்டியையும் செலுத்தும் பொருட்டு புதிது புதிதாகக் கடன்கள் வாங்கப்படுகின்றன. இவையெல்லாம் இந்த நாட்டு மக்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக மாற்றியுள்ளது. மேலும் குறுகிய நோக்கம் கொண்ட திட்டங்களும் நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளன. இதற்கு உதாரணங்களாக அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தல சர்வதேச விமான நிலையம் ஆகியனவற்றை கூறலாம். வெளிநாட்டுக் கடனுதவியுடன் பெருமளவு நிதிச் செலவில் அமைக்கப்பட்ட இந்தத் துறைமுகமும், விமான நிலையமும் வெள்ளை யானை கள் போன்று விஸ்வரூபம் எடுத்து நாட் டின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதித்து வருகின்றன. இவையிரண் டுக்கும் செலவிட்ட பணத்தை வேறு பயனுள்ள துறைகளில் பயன்படுத்தி யிருந்தால் நாட்டு மக்களின் சுமைகள் ஓரளவாவது குறைந்திருக்கும்.

**இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்படும் சிறு பான்மை இனத்தவரின் உணர்வுகள்**

ஒரு நாடு அபிவிருத்தி காணவேண்டுமென்றால் அங்கு வாழுகின்ற மக்கள் அனைவரும் சமமாகக் கருதப்பட வேண்டும். நாட்டுப்பற்று என்பது ஒவ்வொரு குடிமகனின் மனதிலும் முழு அளவில் ஏற்பட வேண்டும். ஆனால் இதற்கான வாய்ப்புக்கள் எமது நாட்டில் இல்லை. இன, மொழி, மத ரீதியாக மக்கள் பாகுபாடு காட்டப்படுகின்றனர். சிறுபான்மையின மக்களின் உணர்வுகள் இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்படுகின்றன, அழிக்கப்படுகின்றன.

அவர்களும் மனிதப்பிறவிகள் தானே என்று ஒருபோதும் மதிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் தேசியம், நாட்டுப்பற்று ஆகியவற்றை அவர்களிட மிருந்து எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இதனால் நாட்டின் அபிவிருத்திதான் பின் தள்ளப்படுகின்றது.

இன்றைய அவல நிலையிலிருந்து இந்த நாடு மீண்டெழ வேண்டுமென்றால், இன்றைய ஆட்சியாளர்கள், அந்நியர் இங்கு தங்கியிருந்த நாள்களின் வரலாற்றை ஒருமுறை புரட்டிப் பார்க்க வேண்டும். அந்நியரால் முடிந்தது எம்மால் ஏன் முடியாதுள்ளது என்பதை அலசிப் பார்க்க வேண்டும். இனியாவது தாம் இதுவரை விட்ட தவறுகள் மீண்டும் நிகழாது இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அனைவரும் இந்த நாட்டின் குடிமக்கள் தான் என்ற நல்ல எண்ணம் அவர்களின் மனதில் குடிகொள்ள வேண்டும்.

ஆட்சியாளர்களின் மனங்களில் மாற்றங்கள் உருவாகுமானால் நாட்டின் அவலநிலையிலும் நிச்சயம் மாற்றங்கள் ஏற்படும்.

அனைத்து மக்களும் தாம் இந்த நாட்டின் குடிமக்கள் என்பதை உணரத் தொடங்குவார்கள். சமூகங் களுக்கிடையிலுள்ள வேறுபாடுகள் களையப்படும். அன்பும் சகோதரத்து வமும் இங்கு துளிர்விட ஆரம்பிக்கும். பின்னர் வேறென்ன வேண்டும் இந்த நாடு மேலுமொரு சொர்க்கபுரியாக மாறுவதற்கு. இவை எல்லாமே ஆட்சியாளர்களின் கரங்களில் தான் உள்ளது. அவர்கள் இனியாவது சிந்திப்பார்களா?



# எங்கே தேடுவது கதை சொல்லும் பாட்டிகளை...?

எனக்கு அம்மம்மா, பாட்டி, தாத்தா எனச் சேர்ந்து வாழும் பாக்கியம் கிடைத்திருந்தது.. அவர்கள் கதை கதையாகச் சொல்வார்கள். எவ்வளவோ கதைகள். இதிகாசம், இலக்கியம், விக்கிரமாதித்தன், தெனாலி ராமன், நாயன்மார், தேவதைக் கதைகள் அறிவுரைக் கதைகள் என அவை பலப்பல.அந்தக் கதைகளே எது நல்லது எது கெட்டது என்பதைக் கற்றுத் தந்துவிடும்..

பிறேமினி

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவும் உறைவிடமும் முதன்மை பெறுகின்றன. அவற்றுக்கு அடுத்த படியாக அவனுக்குத் தேவை, பொழுது போக்கு.முன்னைய காலத்தில் வயதானவர்கள் கதைசொல்லி இளையவர்கள் அவற்றைக் கேட்டு ரசிப்பதுண்டு. ஆனால், இன்று கதை சொல்வது என்பதே கதையாகிப் போய் விட்டது.

கதைகள், பாடல்கள் இவையெல்லாம் நாம் யார் என்பதைத் தெரிவிக்கும் ஒரு செய்தித் தொடர் சங்கிலி. நம்மைப் பற்றி குழந்தைகளுக்குத் தெரிய வேண்டுமானால் நமது பாரம்பரிய பாடல்களையும் கதைகளையும் முதலில் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பாட்டின் மூலம் நமது இயற்கை வளம், விலங்கினங்கள், பறவை வகைகள் எல்லாவற்றைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம். கதைகளும் அப்படித்தான். கதை சொல்வதன் மூலம் வரலாறு, பாரம்பரியம், தேசப்பற்று, நல்லது, கெட்டது எல்லாவற்றையும் குழந்தைகள் மனதில் பதிய வைத்து விடலாம். இதற்கெல்லாம் மேலானது மனிதத் தொடர்பு. கணினியிலும் தொலைக் காட்சிப் பெட்டி மூலமாக வும்கூட கதைகளும் பாடல்களும் கேட்கலாம். ஆனால் நேராக நாம் குழந்தைகளுக்கு சொல்வதுபோல அவை ஆகா.

எனக்கு அம்மம்மா பாட்டி, தாத்தா என சேர்ந்து வாழும் பாக்கியம் கிடைத்திருந்தது.. அவர்கள் கதை கதையாகச் சொல்வார்கள். எவ்வளவோ கதைகள். இதிகாசம், இலக்கியம், விக்கிரமாதித்தன், தெனாலிராமன், நாயன்மார், தேவதைக் கதைகள் அறிவுரைக் கதைகள் என அவை பலப்பல.அந்தக் கதைகளே எது நல்லது எது கெட்டது என்பதைகற்றுத் தந்துவிடும்..

சில கதைகளைத் திரும்பத் திரும்பக் கேட்போம். சொல்லியாச்சே என்பார்கள். பரவாயில்லை பாட்டி என்போம்.அன்றைய வாழ்க்கை முறையில் நாங்கள் எத்தனை தடவைகள் கதை கேட்டாலும் அதைச் சலிக்காமல் சொல்லும் அளவுக்கு அவர்களுக்கு நேரமும் இருந்தது. தமது பேரக் குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்ற சமூக அக்கறையும் இருந்தது. ஆனால் இன்று அப்படியல்ல.

தொலைக்காட்சிப் பெட்டியும் கணினியும் குழந்தைப்பருவமெனும் விலை மதிக்க முடியாத செல்வத்தைத் திருடி விட்டன.

கதை சொல்லும்பொழுது பெரியவர்கள் குழந்தைகளருகே அமர்ந்திருப்பார்கள். இது குழந்தைகளின் மனவளத்திற்கு முக்கியம். பல விடயங்களை கதைகள் மூலம் கற்றுத் தர லாம். கலாசார ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் புலப்படும். புதுப் புதுச் சொற்கள் அறிமுகமாகும். நாங் கள் விக்கிரமாதித்தன் கதையும் கேட்டோம்..அம்புலிமாமா கதையும் கேட்டோம்.அந்தக் கதைகளில் ஒவ்வொரு நாடு ஒவ் வொரு அரசர்கள் அவர்கள் ஆட்சி புரிந்தவை வித்தியாசமான வெவ்வேறு மனிதர்கள், அனுபவங்கள் எல்லாம் வரும். அதை சிறு வயதிலேயே தெரிந்துகொண்டால், வளரும் போதே மனிதர்களைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும்.எது செய்தால் நல் லது எது செய்தால் தீயது என்பதைப் பகுத்தறியும் பக்குவம் வந்துவிடும்.அதே போல்தான் தேசம் பற்றிய கதைகள் என்றுமே சிறப்பு டையது..

நம் தேசம் காத்த வீரர்கள் தேசிய உயிர், உணர்வு என்ற விளக்கை ஒளிர வைக்கும் எண்ணெய், எமது தியாகிகள், வீரர்கள், நல்லோர்களின் கதைகள்தான். சிறப்பாக தங்கள் வீரத்தாலும், மனித நேயத்தாலும், உயர்ந்த வாழ்க்கை நெறியினாலும் தியாகச் செயல்களாலும் விளக்கியுள்ளார்கள்.

கதை சொல்வது என்பது வலிமை வாய்ந்த ஒரு கருவி, மகத்தான குறிக்கோள்களை அதன்மூலம் அடையலாம். குழந்தைகளுக்கு உணவு ஊட்டினால் மட்டும் போதாது. நன்னெறியும் சொல்லித் தர வேண்டும். அன்று, கதை மூல மாக தாத்தாவோ, பாட்டியோ, அம்மாவோ, அப்பாவோ நற்குணங் களைக் கற்றுத் தந்தார்கள். இன்றோ அவர்கள், கண்களை உருட்டி சூழ்ச்சி செய்வது எப்படி, வஞ்சம் அகங்காரம் என் பவை என்ன என்று தெள்ளத் தெளிவாக விளக்கும் தொலைக் காட்சித் தொடர்களால் தொலைந்து போய் விட்டார்கள். அந்த நிலையில் நன்னெறியை யார் புகட்டுவது?

நாங்கள் குழந்தைகளாக இருந்த போது முத்தோர்கள் எங்களுக்குச் சொன்ன ராஜாராணிக் கதைகள், புராண, காவியக்கதைகள், தேவதைக் கதைகள் எல்லாவற்றிலும் நல்லது வெல்லும், கெட்டது தோற்கும் என்பதை, தெளிவாகச் சொல்லிச் சொல்லி வளர்த்ததாலோ என்னவோ அன்று கொலை, கொள்ளை, களவு, பலாத்காரம் , வன்முறை என எந்தத் தீமைகளும் நடக்கவில்லை. இன்று கதை சொல்லப் பாட்டிக ளும் இல்லை கதை கேட்க பிள் ளை களும் இல்லை என்பதே உண்மை. அதனால்தான் இன்றைய வயதுப் பிள்ளைகள் வழி தவறிப் போகின்றார்கள்.

# கேள்விக்குறியாக மாறியுள்ள ஒட்டுசுட்டானின் எதிர்காலம்

முல்லை பாலன்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்த குடும்பங்களின் அத்தியாவசிய தேவைகள் இது வரையில் பூரணமாக நிறைவேற்றப்படாததால், அந்தக் குடும்பங்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக மாறிக் காணப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 2185 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வில்லை.

இந்தக் குடும்பங்கள் மீள்குடியமர்ந்து நான்கு வருடங்களாகியும் இதுவரை மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்காமையால் குப்பி விளக்குகளின் உதவியுடனேயே இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கணேசபுரத்தில் 60 குடும்பங்கள், முத்து விநாயகபுரத்தில் 260 குடும்பங்கள், தட்டையர் மலையில் 200 குடும்பங்கள், கற் சிலைமடுவில் 280 குடும்பங்கள், முத்து ஐயன்கட்டில் 350 குடும்பங்கள், கனகரத் தினபுரத்தில் 100 குடும்பங்கள், ஒட்டுசுட் டானில் 280 குடும்பங்கள், பண்டாரவன்னி கிராமத்தில் 120 குடும்பங்கள், கருவேலன் கண்டலில் 120 குடும்பங்கள், கூழாமுறிப்பில் 110 குடும்பங்கள், புளியங்குளத்தில் 120 குடும்பங்கள், பெரிய இத்திமடுவில் 71 குடும்பங்கள் என இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கு வாழ்கின்றன.

இந்தப் பகுதியில் வாழ்வாதாரத்தின் ஆணி வேராகத் திகழ்ந்து பலருக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்த பண்டார வன்னி ஓட்டுத் தொழிற்சாலை, 6 அரிசி ஆலைகள், தும்புத் தொழிற்சாலை, மற்றும் கல் உடைக்கும் இயந்திரங்கள், கல் அரியும் இயந்திரங்கள் என்பன மின்சார வசதியில்லாததால் பாதிக்கப்பட்டுள்ளன. பிரசித்திபெற்ற பல ஆலயங்கள், சுமார் 10 க்கும் மேற்பட்ட பாடசாலைகள், முன்பள்ளிகள், வாகனத் திருத்தகங்கள், சுகாதாரப் பணிமனைகள் என்பனவும் மின்சாரம் கிடைக்காததால் பல்வேறு இடர்களுடன் இயங்கி வருகின்றன.

1990 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் மின்சார வசதி கிடைக்கப்பெற்றதால் மக் கள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று வந்தனர். மேலும் இங்குள்ள பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணினிகள் மின்சாரம் இல்லாததால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. அத்துடன் கிணறு, குளம் ஆகியன இருந்தும் எரிபொருள் விலை ஏற்றத்தால் நீரை இறைத்துப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. வாழை, கரும்பு, தென்னை, சோளம், நிலக் கடலை, வெங்காயம், மரவள்ளி, மிளகாய் ஆகிய பயிர்கள் இந்தப் பகுதியில் அமோக விளைச்சலைப் பெற்றுக் கொடுத்ததால் தென்னி லங்கைக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டன. ஆனால், இன்று பயிர்ச் செய்கை நிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் காடாகவும் தரிசு நிலங்களாகவும் மாறிக் காணப்படுகின்றன.

இந்தப் பகுதியில் பெண்கள் குடியேற்றத்திட்டம், படித்த வாலிபர் திட்டம், உழ வருக்கான காணித் திட்டம் எனப் பல்வேறு திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு இவற்றின் மூலமாக சிறந்த பயன் கிடைத்தது. மேலும் வளங்கொழிக்கும் பூமியாகவும் ஒட்டுசுட்டான் பிரதேசம் திகழ்ந்தது. தற்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போன்று வளம் நிறைந்த இந்தப்பகுதி வனம் நிறைந்ததாக மாறிக் காணப் படுகின்றது. வனவிலங்குகளின் தாக் கம், குறைந்தளவு மழை வீழ்ச்சி, சீரற்ற நிலையில் காணப்படும் போக்கு வரத்து வீதிகள், குடிதண்ணீர்த் தட்டுப் பாடு, சுகாதார வசதிக் குறைவு ஆகியனவற்றுடன் தொழில் வாய்ப்பும் இல்லாது இங்கு வசிக்கும் குடும்பங் கள்இடர்களைஎதிர்கொண்டுவருகின்றன.

மேலும் நிரந்தரமான வாழ்விட வசதியின்மை, காணிகளுக்கான ஆவண மின்மை போன்றவையும் இந்த மக்களை வாட்டி வரு கின்றன. ஆகவே மேலே குறிப்பி டப்பட்ட குறைபாடு களுக்கு நிரந் தரத் தீர்வு காணப்படாவிட்டால் இந்த மக்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக மாறி விடும் என்பதில் ஐயமே இல்லை.

# மனிதனின் பூர்விகம் செவ்வாய்க் கிரகம்!

பூமியிலுள்ள மனிதர்கள் எல்லோருக்கும் செவ்வாய்க் கிரகம்தான் பூர்வீகம் என்று ஆய்வறிக்கை ஒன்றில் விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.


ப்ளோரன்ஸில் நடைபெறும் 23-வது கோல்ட்ஷிமித் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் ஆய்வறிக்கையில், உயிர்களின் தொடக்கத்துக்கு மூல காரணமான மாலிப்டினம்' என்ற ஒக்ஸிஜன் நிரம்பிய கனிமம், செவ்வாய்க் கிரகத்தில் மட்டுமே இருப்பதாகவும், புவிப்பரப்பில் அவை கிடையாது என்பதால் உயிர்கள் செவ்வாய்க் கிரகத்தில்தான் முதலில் தோன்றின என்று கூறப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் பங்கேற்ற அமெரிக்க விஞ்ஞானி ஸ்டீவன் பென்னர் கூறியதாவது:

மாலிப்டினத்தில் அதிக அளவில் ஒக்ஸிஜனேற்றம் நிகழ்ந்ததுதான் உயிரினங்கள் உருவாவதன் தொடக்கமாக இருந்தது. இந்த மாலிப்டினம் பூமியில் உயிர்கள் தோன்றிய காலத்தில் இருந்திருக்கவே முடியாது. காரணம், 300 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் மிகக் குறைவான அளவே ஒக்ஸிஜன் இருந்தது. ஆனால் அதே நேரம்

செவ்வாய்க் கிரகத்தில் போதுமான அளவு ஒக்ஸிஜன் இருந்தது.

செவ்வாய்க் கிரகத்தில் இருந்து பூமியில் வந்து மோதிய விண்கல்லால்தான் பூமியில் உயிர்கள் தோன்றியிருக்க முடியும் என்ற தத்துவத்துக்கு இந்த ஆதாரம் வலுச் சேர்ப்பதாக உள்ளது. உயிரிகள் உருவாக செவ்வாய்தான் பொருத்தமான கிரகம் என்றாலும், அவை பரிணாம வளர்ச்சியடைவதற்கு பூமியே ஏற்ற கிரகமாக இருந்தது.



இந்த ஆதாரங்களிலிருந்து நாமெல்லோரும் செவ்வாய்க் கிரகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகிறது.

அங்கு உருவாகி, ஒரு பாறை மூலமாக பூமிக்கு வந்த உயிரிகளின் வழித்தோன்றல்கள் தாம் நாம். நல்லவேளை, நாமும் நமது மூதாதையர்கள் போல் செவ்வாய்க் கிரகத்திலேயே தங்கியிருந்தால், இப்படி உட்கார்ந்து இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்திருக்க மாட்டோம்

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். தாயாரின் வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**இடபம்:** மனசாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்:** உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**சிங்கம்:** புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். நீண்ட நாள்களாக பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**நாளை**

ஆவணி-26 புதன்கிழமை 11.09.2013
திதி: ஷஷ்டி பி.ப. 12.34 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.ப.07.40 வரை
சுபநேரம்: 04.33 - 06.03 வரை
இராகுகாலம்: 12.03 - 01.33 வரை

**துலாம்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் அதிருப்தி அடைவார்கள்.

**விருச்சிகம்:** சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் மேலதிகாரியை கலந்தாலோசிப்பது நல்லது.

**தனுசு:** அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**மகரம்:** இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்குமாறு நடந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**மீனம்:** தேவையற்ற விடயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். அடுத்தவர்களை குறை கூறிக்கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 4 | | 9 | 1 | | 8 | |
| 2 | | | 5 | | | | | 3 |
| | | 1 | 6 | 4 | | | 5 | 9 |
| 5 | 1 | | 9 | | 7 | | | |
| | | 3 | | | | 7 | | |
| | | | 3 | | 2 | | 9 | 8 |
| 6 | 7 | | | 1 | 5 | 8 | | |
| 1 | | | | | 9 | | | 6 |
| | 3 | | 7 | 2 | | 9 | | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 7 | 1 | 3 | 5 | 9 | 6 | 2 |
| 6 | 5 | 3 | 8 | 9 | 2 | 7 | 4 | 1 |
| 1 | 9 | 2 | 4 | 6 | 7 | 5 | 8 | 3 |
| 9 | 6 | 4 | 2 | 7 | 8 | 3 | 1 | 5 |
| 7 | 2 | 1 | 9 | 1 | 3 | 8 | 9 | 4 |
| 3 | 8 | 5 | 9 | 1 | 4 | 2 | 7 | 6 |
| 5 | 3 | 9 | 7 | 4 | 1 | 6 | 2 | 8 |
| 2 | 1 | 6 | 5 | 8 | 9 | 4 | 3 | 7 |
| 4 | 7 | 8 | 3 | 2 | 6 | 1 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்

## தம்பையா நடராசா



தோற்றம்
02.04.1927

மறைவு
04.09.2008

**திதி : 10.09.2013**

ஐயா என்றழைத்த எம் இதய தெய்வமே!
ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் ஐயா!
உளம் கலங்கி வாடுகின்றோம் ஐயா.
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடர்கின்றோம் அப்பா!
உங்கள் ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

**மகன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**சிறி நதியா நகை மாளிகை**

(C/11957) (7.6.3)

# ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் விதிகளை மீறிய நடவடிக்கைகள்

### மறுக்கிறார் வவுனியா வடக்கு பிரதேச செயலர்





நெடுங்கேணி. செப்.10

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலரின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் விதிகளுக்குப் புறம்பான வகையில் சில நடவடிக்கைகள் இடம்பெறுவதாக இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் மக்கள் தெரிவிக்கையில்:

இங்குள்ள முதுரம்பிட்டிக் கிராமத்தை முதன்மையாகக் கொண்ட ஆத்தி மோட்டைக் கிராமத்தில் விதிகளை மீறிய வகையில் வெளியாள்களுக்கு காடுகள் அமைந்துள்ள காணிகள் வழங்கப்பட்டு அங்கு வீடுகளை அமைப்பதற்கான அத்திபாரங்களும் இடப்பட்டுள்ளன. மேலும் வீடுகளை அமைக்கும் போர்வையில் பெருமளவு காட்டு மரங்கள் அழிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக இங்குள்ள பொது மக்களும், பாதிக்கப்பட்ட மக்களும் வவுனியா அரச அதிபர், அமைச்சர்கள் ஆகியோருக்கு முறையிட்டுள்ளனர்.

மேலும் காணிகள், இந்தியன் வீடுகள் ஆகியவற்றை வழங்குவதிலும் இங்கு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன.

இதற்கு பிரதேச செயலகத்தின் சில உயரதிகாரிகள் துணை போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா வடக்கு பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது: முதுரம்பிட்டிக் கிராமத்திலிருந்து 30 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து சென்று தற்போது மீளக்குடியமர்ந்த மக்களுக்கே அங்குள்ள அவர்களின் காணிகளில் வீடுகளை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் வாழ்ந்த காணிகளே தற்போது காடுகளாக மாறிக் காணப்படுகின்றன. அங்குள்ள மரங்களை அவர்கள் தறித்து எடுப்பதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.

மேலும் ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் இதுவரை வீடுகள் கிடைக்காத சிலருக்கு வீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கையில் நான் ஈடுபட்டுள்ளேன் எனத் தெரிவித்தார்.

(க-435)

கிளிநொச்சிப் பாடசாலைகளிலிருந்து

# இடைவிலகிய மாணவர்களில் 21 பேர் மீண்டும் இணைப்பு

அக்கராயன்.செப். 10

கிளிநொச்சி மாவட்டத்தில் நடப்பாண்டில் பாடசாலைகளை விட்டு இடை விலகிய 191 மாணவர்களில் 21 பேர் பாடசாலைகளில் மீள இணைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முறை சாராக் கல்விப் பிரிவின் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

குடும்ப வன்முறைகள், பாடசாலைகளில் ஆசிரிய மாணவர்கள் உறவு பாதிக்கப்பட்டமை, வறுமை எனப் பல காரணங்களினால் இடை விலகிய மாணவர்களில் 21 பேர் மீளவும் பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் இடைவிலகல் அதிகளவில் உள்ள பகுதியாக ஆணையிறவுப் பாடசாலை இயங்கும் சிவபுரம், ஊரியான் விநாயகபுரம், கிருஸ்ணபுரம், உருத்திரபுரம், சிவநகர், யூனியன்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நீண்ட தூரம் மாணவர்கள் நடந்து பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ளமை இந்த மாணவர்களின் இடைவிலகலுக்கு இன்னொரு காரணமாகும். கண்டாவளை, பூநகரி, கரைச்சி மேற்குப் பகுதி ஆகிய இடங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் குறைந்தது 4 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே கல்வி கற்க வேண்டியுள்ளது.

மாணவர்களின் இடைவிலகல் தொடர்பாக கிளிநொச்சி கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம், மற்றும் சிறுவர் பாதுகாப்பு குழுக் கூட்டங்களில் தொடர்ந்து ஆராயப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# நிரந்தர மருத்துவர் இல்லை

### அவல நிலையில் வன்னேரிக்குளம் மக்கள்

அக்கராயன். செப்.10

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள மருத்துவமனையில் கடந்த 7 ஆண்டுகளுக்கும் மேலாக நிரந்தர மருத்துவர் இல்லாத நிலை காணப்படுவதாக அறிய முடிகின்றது.

இந்த மருத்துவமனையில் 25 ஆண்டுகளாகப் பணி புரிந்து வந்த மருத்துவர் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து கடந்த 7 ஆண்டுகளாக மருத்துவர் இல்லாத நிலையே காணப்படுகின்றது. வாரத்தில் இரு நாள்கள் அக்கராயன் மருத்துவமனையில் இருந்து மருத்துவர்கள் இங்கு வருகை தருவதாகவும் மிகுதி நாள்களில் 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் மருத்துவமனைக்குத் தாம் செல்லவேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் தற்போது 470க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## புனரமைக்கப்பட்டு வருகின்றது உதயநகர் வீதி

அக்கராயன்.செப். 10


கிளிநொச்சியில் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட உதயநகர் கிழக்கு வீதியின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி 24 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை உதயநகர் கிழக்கு கிராமத்திலுள்ள நாகதம்பிரான் ஆலய வீதியும் 17 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

உதயநகர் கிழக்கில் 623 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இந்தக் கிராமத்தின் பின்புறமாக உள்ள வீதிகளும் மோசமாகச் சேதமடைந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள 65 வீடுகளுக்கு இதுவரை மின்சாரவசதி கிடைக்கவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். போரின் போது பெரும் அழிவுகளை இந்தக் கிராமம் எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)



கிளிநொச்சி முரசுமோட்டை ஐயன்கோயில் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் உள்ள மரப் பாலம் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. (க-6)

## வீதிகள் மோசம்; விவசாயிகள் சிரமம்

அக்கராயன்.செப். 10

துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் உள்ள வயல் நிலங்களுக்கு செல்லும் வீதிகள் உரிய முறையில் புனரமைக்கப்படாததால் விவசாயிகள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குளத்தின் கீழான முதலாம், ஐந்தாம் வாய்க்கால் வீதிகள் உரிய வகையில் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் வயல் நிலங்களில் இருந்து அறுவடை செய்த நெல்லை தோளில் சுமக்கும் நிலை காணப்படுகின்றது. குளப் புனரமைப்புக்களின் ஓர் அங்கமாக வாய்க்கால்களும் புனரமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் இது இதுவரை இடம்பெறாததால் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பலப் பெருமாள் குளம் குடியேற்றத் திட்டக் கிராமம் அடிப்படை வசதிகள் குறைந்த கிராமமாகக் காணப்படுகின்றது. இங்கு சுமார் 100 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## பஸ்கள் தரிக்காத தரிப்பிடம்

மாங்குளம்.செப். 10

நெடுங்கேணியில் அமைக்கப்பட்டுள்ள பஸ் தரிப்பிடத்தில் பஸ்கள் தரித்துச் செல்லாததால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நெடுங்கேணியில் வவுனியா வடக்குப் பிரதேச சபையினால் பஸ் தரிப்பிடம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் பஸ் சாரதிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த பஸ் தரிப்பிடத்தில் பஸ்களை நிறுத்தாமல், தமக்கு விரும்பிய இடங்களில் நிறுத்துவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரும் பிரதேச சபையினரும் பஸ் சங்கத்தினரும் இதில் தலையிட்டு இந்த பஸ் தரிப்பிடத்தில் பஸ்கள் தரித்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-422)

# விளம்பரப் பலகையைக் காணவில்லை: நெடுங்கேணி பொலிஸில் முறைப்பாடு

மாங்குளம்.செப். 10

வீதி அபிவிருத்திக்கான விளம்பரப் பலகையைக் காணவில்லையென நெடுங்கேணிப் பிரதேச சபைச் செயலாளர் எஸ். மனோகரன் கனகராயன்குளம் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

இது குறித்து தெரிய வருவதாவது :-

கனகராயன்குளம் பாடசாலை வீதி தொடக்கம் புதுக்குளம் வரையான வீதி தற்போது நெடுங்கேணிப் பிரதேச சபையால் புனரமைக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி வேலைகள் முடிவடைந்த நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடமாகாண ஆளுநர் சந்திரசிறி உட்பட வேறு அமைச்சர்கள் சிலரின் படங்களும் போடப்பட்ட விளம்பரப் பலகை புதுக்குளத்துக்கும் கனக ராயன் குளத்துக்கும் இடையில் பிரதேச சபையால் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அந்த விளம்பரப்பலகையைக் காணவில்லை.

இது தொடர்பாகவே பிரதேச சபை செயலாளர் பொலிஸில் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு காணாமற்போன விளம்பரப் பலகையை மீட்டுத் தருவதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் கனகராயன்குளத்திலிருந்து வவுனியா நோக்கி செல்லும் ஏ-9 வீதியில் அமைக்கப்பட்டிருந்த வீதி அபிவிருத்திக்கான விளம்பரப் பலகையும் அகற்றப்பட்டு கீழே போடப்பட்டுக் கிடக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-422)

காணாமற்போன விளம்பரப் பலகையை மீட்டுத் தருவதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மூங்கிலாறு மருத்துவமனைக்கு மருத்துவரை நியமித்து உதவுக

### கிராம மக்கள் அவசர கோரிக்கை

முல்லைத்தீவு மூங்கிலாறு மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமித்து தமது மருத்துவத் தேவைகளை நிறைவு செய்து தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட றெட்பானா, வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், இளங்கோபுரம், தேராவில், கொழுந்துப்புலவு, உடையார்கட்டு, குரவயல், இருட்டுமடு, சுதந்திரபுரம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரம் வரையான குடும்பங்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் மூங்கிலாறு மருத்துவமனை காணப்படுகின்றது.

ஆனால் குறித்த வைத்தியசாலைக்கு இதுவரை நிரந்தர வைத்தியர் எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் தமது அடிப்படை மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் இந்தப் பகுதி மக்கள் 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள புதுக்குடியிருப்பு மருத்துவமனை அல்லது 28 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிளிநொச்சி மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே இந்த மருத்துவ மனைக்கு நிரந்தரமான மருத்துவர் ஒருவரை நியமிக்குமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-6)



## நிதி நெருக்கடியை எதிர்நோக்கும் கம்பனிகளுக்கு மத்திய வங்கி உதவி

நிதி நெருக்கடியை எதிர்நோக்கும் பதிவு செய்யப்பட்ட நிதிசார் தீர்வுகளை வழங்கும் கம்பனிகளுக்கு திரவத்துவ வசதிகளை வழங்க தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

செலவீனங்களை குறைத்தல், மூலதனத்தை வழங்க பங்காளர்களை உடன்பட வைப்பது மற்றும் வைப்புகளை பங்குகளாக மாற்றுவது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ள இந்த வசதிகளை வழங்க தீர்மானித் துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஒவ்வொரு நிதிசார் கம்பனிகளின் நிலைகளையும் ஆராய்ந்த பின்னர், இதற்கு அவசியமான நிதி வசதிகளை இலங்கை வைப்பு காப்புறுதி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## சிறப்பான செயற்பாடுகளை கௌரவித்தது ஜனசக்தி

தனது விற்பனைக் குழுவில் சிறப்பாக செயலாற்றியிருந்த ஊழியர்களை கௌரவிக்கும் வகையில் ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனம் அண்மை யில் கிங்ஸ்பரி ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் வெற்றியீட்டியவர்களுக்கு வெளிநாட்டு சுற்றுலாக்கள், வார இறுதி பக்கேஜ்கள், பணப்பரிசுகள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் போன்றவை வழங்கப்பட்டன.

மனதுக்கு சக்தி எனும் தொனிப் பொருளில், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜனசக்தி அரையாண்டு விருது விழா 2013, நிறுவனத்தின் புதிய தொரு நிறுவன அடையாளத்தை பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.

ஒவ்வொரு ஆண்டும் எமது விற்பனைக் குழுவின் கடின உழைப்பு மற்றும் சாதனைகளை நாம் கௌரவித்து வருகிறோம். எமது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்களை விஸ்தரித்து தன்னம்பிக்கையை ஊக்கப்படுத்தும் வகையில் புதிய சகாப்தத்தைத் தொடங்கியுள்ள எமது பயணத்தில் இவ் ஆண்டுக்கான அரையாண்டு விருது விழாவானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தாக அமைந்திருந்தது.

எமது நிறுவனத்தின் முதுகெலும்பு விற்பனை குழுவினராகும். தொடர்ச்சியாக அவர்களின் நம்பிக்கையை ஊக்குவித்து தனிப்பட்ட திறனுக்கு அப்பால் செல்வதற்கான ஊக்குவிக்கும் முயற்சிகளை தொடர்ந்து நாம் முன்னெடுத்து வருகிறோம் என ஜன சக்தி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரகாஷ் ஷாஃப்டர் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பிரதான விருந்தினராக கலந்து சிறப்பித்த லாஃப் குழுமத்தின் ஸ்தாபகரும், பிரதான நிறைவேற்று அதிகாரியுமான டபிள்யு. கே.எச்.வேகபிட்டிய அவர்கள் விற்பனை குழுவினர் மத்தியில் தனது வெற்றிகரமான சுய வாழ்க்கை பற்றி ஊக்கப்படுத்தும் வகையில் உரை யாற்றியிருந்தார்.

இந் நிகழ்வில் சிறந்த பிராந்திய விற்பனை முகாமையாளருக் கான (பொது) விருது பி.சி.விஷ்வகவிற்கும், பொது விற்பனை பிரிவில் சிறந்த விற்பனை முகாமையாளருக் கான வைர விருது கே.டபிள்யு. எஸ். டி.ரொஷானிற்கும் வழங்கப்பட்டது. ஜனசக்தி நிறுவனத்தின் பொது காப் புறுதியின் Hall of Fame விருது கொழும்பு மெட்ரோவைச் சேர்ந்த கே.எச்.டி.ஆரிய வங்சவிற்கு வழங் கப்பட்டது.

கொழும்பு மத்திய நிலையத்தைச் சேர்ந்த டி.ஜே.பியதாஸவுக்கு நட்சத்திர பிரிவில் விருது வழங்கப்பட்டது. சிறந்த வர்த்தக ஊக்குவிப்பு முகாமையாளர் மற்றும் வணிக ஊக்குவிப்பு பிரிவில் வெள்ளி விருது அளுத்கம கிளையின் டி.வன்ட போனா விற்கும், கொழும்பு வடக் கைச் சேர்ந்த எல்.சில்வாவிற்கு வைர விருதும் வழங்கப்பட்டன.

சிறந்த வர்த்தக ஊக்குவிப்பு பிரதிநிதி மற்றும் சிரேஷ்ட வணிக ஊக்குவிப்பு பிரதிநிதி பொது விற்பனை பிரிவில் காலிக் கிளையைச் சேர்ந்த பி.திகும் பரவிற்கு வெள்ளி விருதும், பதுளைக் கிளையைச் சேர்ந்த கே.ஜி.ஏ.பி.கிரே ரோவிற்கு தங்க விருதும், கண்டிக் கிளையைச் சேர்ந்த எம்.வை.கே. விஜயசேகரவுக்கு வைர விருதும் வழங்கப் பட்டன.

சிறந்த வர்த்தக ஊக்குவிப்பு அதிகாரி பிரிவில் வைர விருது கொழும்பு மெட்ரோவைச் சேர்ந்த டபிள்யு.ஆர். பி.கே.ரணவக்கவிற்கும், ஹோமா கமADOயைச் சேர்ந்த டி.எஸ்.நிலுஷாவுக்கு வெள்ளி விருதும் வழங்கப்பட்டன.

வர்த்தக ஊக்குவிப்பு உதவியாளர் பிரிவில் நுகேகொட கிளையைச் சேர்ந்த ஈ.என்.எஸ்.பெர்னான்டோவிற்கு தங்க விருதும், அக்குரஸ்ஸ கிளையைச் சேர்ந்த எச்.ஐ.சத்துரங்க விற்கு வெள்ளி விருதும் வழங்கப் பட்டன.

வர்த்தக ஊக்குவிப்பு விற்பனை மேற் பார்வையாளர் பிரிவில் (பொது) வெள்ளி விருது மஹரகம ADOஐச் சேர்ந்த பி.டி.என்.சந்திர ரத்னவிற்கும், மஹரகம கிளையைச் சேர்ந்த எஸ்.ஆர். பிரசாத்திற்கு தங்க விருதும், கண்டி கிளையைச் சேர்ந்த கே.ஜி.ஆர்.பி. இலங்கரத்னவிற்கு வைர விருதும் வழங்கப்பட்டது. நீர்கொழும்பு கிளை யைச் சேர்ந்த கே.ஏ.ஆர். பெர்னாண் டோவிற்கு சிறந்த ஒட்டுமொத்த ஆயுட்குழு - பிரிவு தலைவர் விருது மற்றும் சிறந்த வர்த்தக ஊக்குவிப்பு அதிகாரி விருது ஆகிய இருவிருதுகள் வழங்கப்பட்டன.

சிறந்த வர்த்தக ஊக்குவிப்பு பிரதிநிதி மற்றும் சிரேஷ்ட வணிக விருது மேற்கு களுபோவிலையைச் சேர்ந்த ஏ.எச்.எஸ்.ஜயலாலிற்கு வழங்கப்பட் டது.

சிறந்த வர்த்தக ஊக்குவிப்பு உதவியாளர் விருது கடுவெல மேற்கைச் சேர்ந்த ஐ.ஜி.என்.ரோஹிதவிற்கும், சிறந்த தனிப்பிரிவு தலைவர் விருது தலைமைக்காரியாலயத்தைச் சேர்ந்த எம்.ஏ.எஸ்.டி.பிரசன்னா விற்கும் வழங்கப்பட்டது. பிராந்திய பிரதிநிதி மற்றும் விற்பனை அதிகாரி பிரிவில் வாழ்நாள் சாதனையாளர் விருதை அனுராதபுரக் கிளையைச் சேர்ந்த பி.டபிள்யு. ஏ.ஹலங்கொட வென் றெடுத்தார். (த)

## செலான் வங்கியின் பேஸ்புக் பக்கத்திற்கு 50,000 ரசிகர்கள்




செலான் வங்கி பி.எல்.சி. தனது பேஸ்புக் பக்கத்தில் 50,000 ரசிகர் அடையாளத்தை (Fan's Mark) அண்மையில் தம்வசப்படுத்தியுள்ளது. இதன்மூலம், இலங்கையில் இவ்வாறான மைற்கல் ஒன்றை அடைந்த ஒரேயொரு வங்கியாக முன்னேறியுள்ளது மட்டுமன்றி, சமூக ஊடகத் துறையில் மிகவும் செயற்றிறன்மிக்க இலங்கையின் வங்கியாகவும் தன்னை ஸ்தாபித்துக் கொண்டுள்ளது.

செலான் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) ரிலான் விஜயசேகர கூறுகையில், இலங்கையில் வாடிக்கையாளர்களைக் கவரும் விடயத்தில் தீவிரமான அளவுக்கு குறை-மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு சாதனமாக சமூக ஊடகம் இருப்பதை நாம் உணர்ந்து கொண்டோம். எனவேதான் இலங்கையில் வங்கி மற்றும் சமூக ஊடகம் ஆகிய இரண்டு விடயங்களிலும் ஒரு வினையூக்கியாக திகழும் விதத்தில், வங்கியியல் துறையில் முன்னோடியான மற்றும் தலைமை வகிக்கும் பாத்திரமொன்றை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

ஊடக சாதனத்தை கையாள்வதில் நாம் நிலைபேறான ஒரு அணுகுமுறையை உருவாக்கி இருக்கின்ற அதேவேளை, சமூக ஊடகத்தில் வங்கியியல் துறை தொடர்பாக உலகளவில் அடையாளம் காணப்பட்ட தரமதிப்பீடுகளையும் தொடர்ச்சியாக பின் தொடர்ந்து வருகின்றோம் என்றார்.

பல்வகைப்பட்ட பாத்திரங்களை வகிக்கும் செலான் வங்கியின் பேஸ்புக் பக்கமானது வாடிக்கையாளர்களுடன் இடைத் தொடர்பினைப் பேணுவதுடன், வங்கியையும் அதனது பெருமளவிலான உற்பத்திகள் மற்றும் சேவைகளையும் ரசிகர்களின் விரல்நுனிக்கு நேரிடையாகவே கொண்டுசென்று சேர்க்கின்றது.

தனது சமூக ஊடகம் தொடர்பான முன்னெடுப்புக்களின் வெற்றியை அளவிடுவதில் Likes' அல்லது ரசிகர்களின் எண்ணிக்கை என்பன முக்கியமான அடிப்படைகள் அல்ல. மாறாக அதற்குமப்பால், தற்போதைய வாடிக்கையாளர்களிடத்திலும் எதிர்காலத்தில் வாடிக்கையாளராகும் சாத்தியமுள்ள நபர்களுடனும் அது கொண்டுள்ள ஈடுபாடே வெற்றியை மதிப்பிடும் அடிப்படையாகும் என்று செலான் வங்கி நம்புகின்றது.

இதில் காணப்படும் செலான் வங்கி வாடிக்கையாளர் உதவி தொடர்பிணைப்பு (Link) என்பது முக்கியமான வசதிகளுள் ஒன்றாகும். பேஸ்புக் ரசிகர்கள் செலான் வங்கியுடன் இடைத் தொடர்பை பேணிக் கொள்வதற்கான தனிச் சிறப்பு மிக்க வாய்ப்பை இது அளிக்கின்றது.

இந்த தொடர்பிணைப்பு ஆனது எந்த வகையான கேள்விகளையும் வரவேற்கின்றது. அந்தக் கேள்விகள் அனைத்திற்கும் முன்னுரிமை அடிப்படையில் பதில்கள் அளிக்கப்படுகின்றன.

அதேநேரம், வங்கியின் தொழிற்பாடுகள் தொடர்பில் பேஸ்புக் ரசிகர்களுக்கு தொடர்ச்சியான புதுப்பிக்கப்பட்ட தக வல்கள் வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. குறிப்பாக - வங்கியின் உற்பத்தி மற்றும் சேவை அறிமுகங் கள், பெறுமதி சேர் சேவைகள், உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டங்கள், செய்திகள், கிளை திறப்பு போன்ற பல தகவல்கள் பரிமாறப் படுகின்றன.

இந்த பேஸ்புக் பக்கத்தை மேலும் இடைத்தொடர்பு கொண்டதாக மாற்றியமைக்கும் விதத்தில், உன்னதமான பரிசுகளை வெகுமதியாக வென்றுதரக்கூடிய போட்டிகளையும் இது நடத்துகின்றது. (த)

## செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் பட்டய காப்புறுதியாளர்களாக உயர்வு



ஐக்கிய இராச்சியத்தின் பட்டய காப்புறுதியாளர்கள் (Chartered Insurers) நிறுவனத்தின் இணை உறுப்பினர்களுக்கான தகைமையை (ACII) செலிங்கோ லைஃப்பின் மேலும் ஏழு அதிகாரிகள் பூர்த்தி செய்துள்ளதாக நாட்டின் மிகப் பெரிய ஆயுள் காப்புறுதி நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த நிறுவனத்தால் நடத்தப்படும் காப்புறுதி துறைக்கான அட்வான்ஸ் டிப்ளோமா பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்பவர்களுக்கே CII தகைமை வழங்கப்படுகின்றது.

இது இந்த நிறுவனத்தின் CII தகைமை உள்ளவர்களுக்கு வழங்கப்படும் அதிஉயர் FCII தகைமையை விட ஒரு படி மட்டுமே குறைவானதாகும்.

செலிங்கோ லைஃப், தற்போது ACII தகைமையுள்ள தொழிற்சார் காப்புறுதியாளர்கள் 12 பேரைத் தன்வசம் கொண்டுள்ளது. இலங்கையில் உள்ள ஆயுள் காப்புறுதிக் கம்பனிகளுள் இந்தத் தகைமை கொண்ட ஆகக் கூடுதலான எண்ணிக்கையானோர் தற்போது இங்கு தான் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் இந்த நிறுவனத்தின் பட்டய காப்புறுதியாளர் பதவியைப் பெற்றுள்ளனர். மேலும் இவர்கள் அனைவரும் காப்புறுதித் துறையில் வேண்டப்படும் ஐந்து வருடத்துக்கு மேற்பட்ட அனுபவத்தையும் கொண்டுள்ளனர்.

செலிங்கோ லைஃப் அதன் ஊழியர்கள் துறைசார் தகைமைகளை விருத்தி செய்து கொள்வதை எப்போதுமே ஊக்குவித்து வருகின்றது. ஏனெனில் எமது வர்த்தகத்தில் ஒரு முக்கிய முனையாக இருப்பது தொழிற் சார் தன்மை என்பதே எமது நம்பிக்கையாகும் என்று கூறினார். (த)

## உண்மை விதை வெங்காய செய்கையாளர் கவலை

### தென்மராட்சியில் பெய்யும் மழையால்

தென்மராட்சி, செப்.10
தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த நான்கு தினங்க்ளாக அதிகாலை வேளைகளில் மழை பெய்து வருவதால் 'உண்மை' விதை வெங்காய உற்பத்தி யாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

பிரதேசத்தில் முதன்முறையாக பல இடங்களில் உண்மை விதை வெங்காயம் பயிரிடப் பட்டு அறுவடைக்குத் தயார் நிலையில் காணப்படுகிறது.

நெற்செய்கை வயல்களில் பயிரி டப்பட்ட வெங்காயச் செய்கை வெற்றியளித்துள்ள நிலையில் திடீரென பெரியளவில் மழை பெய்தால் பயிர்கள் வெள்ளத் தில் மூழ்கும் அபாய நிலை காணப்படுவதாகவும் இன்னமும் 15 தினங்களில் வெங்காயம் அறுவடை செய்யப்பட வுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (வ-9)



## பயன்படுத்தப்படாத வயல்நிலங்களை கமநல சேவைக்குழு பொறுப்பேற்கும்

அச்சுவேலி, செப்.10
நெற்பயிர்ச் செய்கைக்கு பயன் படுத்தப்படாத வயல்நிலங்கள் பெரும்பாக கமநல சேவை குழுவால் பொறுப்பேற்கப்பட்டு நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகளுக்கு போக அடிப்படையில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக கையளிக்கப்படவுள்ளன.

நெற்பயிர்ச் செய்கைக்கு பயன் படுத்தப்பட்டு வந்த வயல்நிலங்கள் பல உரிமையாளர்களால் பயன்படுத்தப் படாமல் தரிசு நிலங்களாக கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

நெற்பயிர்ச் செய்கை அளவை அதிகரிப்பதற்கும் பயிர்ச் செய்கை நடவடிக்கையில் வயல் நிலம் முழுவதையும் ஈடுபடுத்து வதற்கு ஏற்ற வகையில் மேற்படி செயற்றிட்டம் முன் னெடுக்கப்படவுள்ளது. இந்த நடைமுறையை பெரும்பாக கமநல சேவைப் பிரிவு மேற்கொள்வதற்கு வசதியாக கமநல சேவைக் குழுக்களின் அதிகாரம் நெற்பயிர்ச்செய்கை பாதுகாப்பு உப விதிகளின் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நெற்பயிர்ச் செய்கைக்கு பயன் படுத்தப்பட்டு வந்த வயல்நிலங் கள் பல உரிமையாளர்களால் பயன்படுத்தப்படாமல் தரிசு நிலங்களாக கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. பலர் இத் தகைய வயல்களை பொருத்த மான முறையில் பயிர்ச்செய் கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகளுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கும் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

நெற்பயிர்ச் செய்கையை அதி கரித்து பயிர்ச்செய்கை நடவடிக் கையை மேம்படுத்தும் நோக்கு டன் வயல்நிலங்களை பொறுப் பேற்கும் செயற்பாடு வயல் உரிமையாளரின் ஒப்புதலுடன் பெரும்பாக கமநல சேவைக்குழு மேற்கொள்ளும். வயல் உரிமை யாளர் பொருத்த மான இணக் கப்பாட்டுக்கு வராத விடத்து பொருத்தமான சட்ட நடவடிக்கை மூலமும் பொறுப் பேற்கப்படும். வயல் உரிமையாளர் மீண்டும் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு வயலை பயன் படுத்த விருப்பம் தெரிவித்து விண்ணப்பிக்கும் போது அவரிடம் மீண்டும் கைய ளிக்கப்படும். (வ-11)

## வயிற்றுளைவுத் தாக்கத்துக்கு உள்ளாகும் மீசாலை மக்கள்

தென்மராட்சி, செப்.10
தென்மராட்சி பிரதேசத்தில் அண்மைக் காலமாக வயிற் றுளைவு நோயால் பீடிக்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு சிகிச்சை பெற பெரு மளவானோர் வருகின்றனர்.

அவர்களில் மீசாலைப் பகுதியி னரே இந்நோயால் அதிகமாகப் பீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பிரதேசத்தில் சிறிது காலம் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தை அடுத்து கடந்த வாரங்களில் பெய்த கடும் மழையின் பின்னர் வயது வேறுபாடின்றி தினமும் பெருமளவானோர் வயிற்றுளை வால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மீசாலை கிழக்குப் பகுதியி லிருந்து தினமும் பத்துக்கு மேற் பட்டோர் வயிற்றுளைவினால் பாதிக்கப்பட்டு விடுதிகளில் சிகிச்சை பெற வருவதாகத் தெரி விக்கப்பட்டது.

குடிண்ணீர் கிணறுகளில் கல்சியத் தன்மை அதிகரித்துக் காணப்படுவதாகவும் கிணறு களில் பெறப்படும் குடிதண்ணீ ரைக் கொதிக்க வைத்து குடிக் குமாறும் சுகாதாரப் பகுதியி னர் அறிவுறுத்தல் விடுத்துள் ளனர். அத்துடன் அவர்கள் கிணறுகளுக்கு குளோரின் இட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தின் பல்வேறு பகுதி களில் இருந்து வயிற்றுளைவு நோயால் பாதிக்கப்பட்டு பலர் சிகிச்சை பெற வருவதால் வயிற் றுளைவு ஏற்பட்டவர்களுக்கு கை வைத்தியம் செய்யாமல் உடனடியாகவைத்தியசாலைக்கு அழைத்து வரு மாறு சுகாதாரப் பகுதியினரால் அறிவிக்கப்பட் டுள்ளது. (வ-9)

## 'கெயர்' செயற்றிட்டத்தின் கீழ் யாழில் 56 வேலைத்திட்டங்கள்

அச்சுவேலி, செப்.10
யாழ்.மாவட்டத்தில் கெயர் செயற் றிட்டத்தின் கீழ் 56 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வுள்ளன. இந்த வேலைத் திட்டங் களை எந்த பெரும்பாக கமநல சேவைப் பிரிவுகளில் மேற்கொள் வது என்பது முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்பட்டு நிறைவு செய்யப்பட உள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கெயர் வேலைத்திட்டத்தின் கீழ் உள் ளூர் குளங்களை திருத்தி அமைத் தல், விவசாய வீதிகளை சீர் செய்தல் ஆகிய 56 வேலைத் திட் டங்கள்மேற்கொள்ளப்படவுள்ளன.

திருத்தி அமைக்கப்பட வேண் டிய குளங்கள் மற்றும் விவ சாய வீதிகள் என்பன முன்னு ரிமை அடிப்படையில் இனங் காணப்பட்டு 14 பெரும்பாக கமநல சேவைப் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.


குறித்த வேலைத்திட்டங்கள் மேற் கொள்ளப்படும் பிரதேசங் களின் விவசாயிகள் மற்றும் விவசாய சம்மேளனங்களின் ஒத்து ழைப் புடன் மேற்கொள்ளப்படவுள் ளன.

இந்த வகையில் 200 வேலைத் திட்டங்கள் வரையில் மேற் கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக முன்னர் அறிவிக் கப்பட்டிருந்த போதிலும் தற் போது 56 வேலைத்திட்டங் களே மேற்கொள்ளப்படவுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கெயர் வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூர் குளங்கள் ஆழ மாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்படுவதால் அதில் தேங்கி நிற்கும் மழைநீரைப் பயன் படுத்தி சிறுபோக பயிர்ச்செய் கைகளை விவசாயிகள் மேற் கொள்ளமுடியும். அத்துடன் தரைக்கீழ் நீரி நிலையும் பாது காக்கப்படும். கோடை காலத் தில் கால்நடைகளுக்கான குடி தண்ணீர் வசதியும் கிடைக்கும்.

விவசாய வீதிகள் என்ற வகை யில் விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தோட்ட நிலங் கள் மற்றும் வயல் நிலங்க ளுக்கு சென்று திரும்புவதற்கு பயன்படுத்தும் வீதிகளும் கல், மக்கி கொண்டு சீர் செய்யப் பட்டு திருத்தி அமைக்கப்படவுள் ளன. (வ-11)

## கம்பர்மலையில் இன்று பட்டிமன்றம்



வடமராட்சி, செப.10
யாழ். பட்டிமன்றக் குழு நடத்தும் "இன்றைய சமூகத் தில் பெரிதும் காணப்படுவது பாசமா.- வேஷமா" என்ற தலைப்பிலான சிறப்புப் பட்டி மன்றம் இன்று செவ்வாய்க் கிழமை இரவு 11 மணியளவில் கம்பர்மலை, வல்வெட்டி வன் னிச்சி அம்மன் கோயில் பூங்கா வனத் திருவிழாவில் பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமை யில் நடைபெறவுள்ளது. (ஓ-8)

## சிறுவர் கண்காணிப்பு குழுக் கூட்டம்

பிரதேசமட்ட சிறுவர் கண் காணிப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில்முற்பகல்10மணிக்கு நடைபெறவுள்ளதாக கரவெட் டிப் பிரதேச செயலர் அறிவித் துள்ளார். குறிப்பாக பிரதேச சிறுவர் பாதுகாப்புக் குழுவின் பிரதான உறுப்பினர்களை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (வ-35)

## தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோர் நினைவிடம் வெள்ளத்தில்

கொழும்புத்துறை.செப். 10
யாழ்.முற்றவெளிப் பகுதியில் அமைந்துள்ள தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோரின் நினைவிடம்வெள்ளத்தில்அமிழ்ந்து காணப்படுகின்றது.

அந்தப் பகுதி வீதிகள் மற்றும் கோட்டைப் பகுதி என்பன மறுசீரமைப்பு நடவடிக்கை களால் உயரமாக்கப்பட்டதை யடுத்து தாழ்வாகக் காணப்படும் இந்த நினைவிடத்தில் மழை நீர் தேங்கியுள்ளது.

குறித்த மழைநீர் வடிந்தோட முறையான வடிகால் அமைப்புக் கள் ஏற்படுத்தப்படாமையால் வெள்ளம் குறிப்பிட்ட இடத்தில் தேங்கி நிற்கிறது.

சிறிய மழைக்கே இந் நிலை யென்றால் பெரும் மழை காலத்தில் இதன் நிலை என்ன என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது. அதேவேளை புனரமைப்புநடவடிக்கைகளால் உயரமாக்கப்பட்டுள்ள அந்தப் பகுதி நில அமைப்புகளுக்கு ஏற்ப தமிழா ராய்ச்சி நினைவிடத்தின் அடித்தளமும்உயரமாக அமைக் கப்பட வேண்டிய நிலை காணப் படுவதாக பொதுமக்கள் தெரி விக்கின்றனர். குறித்த நினை விடத்துக்கு பொறுப் பானவர்கள் இது தொடர்பில் தகுந்த நடவ டிக்கை எடுக்க வேண்டுமென சமூகஆர்வலர்கள்வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ-135)



## உப தபால் அதிபர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.10
வடமாகாணத்தில் உள்ள உபதபால் அதிபர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையை எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்.நகரில் நடத்துவ தற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி யில் காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரைக்கும் குறித்த பரீட்சை நடைபெறும்.

இந்தப்பரீட்சையில்வடக்கில்உள்ள 175 உப தபாலதிபர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-17)

## மண்டைதீவு ஆஸ்பத்திரியில் ஒரு மாதத்தின்பின் சேவையை பெறலாம்

யாழ்ப்பாணம், செப். 10
மண்டைதீவு அரசினர் வைத் தியசாலையில் கட்டுமானப் பணிகள் அனைத்தும் ஒரு மாத காலத்துக்குள் நிறைவடைய வுள்ளன. குறித்த வைத்திய சாலை சுகாதார அமைச்சின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது.

கடந்த கால போரால் வைத் தியசாலை முற்றுமுழுதாக தரை மட்டம் ஆக்கப்பட்டது. தற்போது இந்த வைத்தியசாலையை மீளவும் புதிதாக அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

மண்டைதீவில் அரசினர் வைத் தியசாலை ஒன்று இல்லாத தால் பிரதேச மக்கள் சிரமங் களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப்பகுதியிலுள்ள நோயா ளர்கள் சிரமத்தின் மத்தியி லேயே யாழ். போதனா வைத் தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ-17)

## 8 மாதங்களுக்கு மேல் கண்காணிக்கப்படாத கொல்களம்

அச்சுவேலி, செப்.10
அச்சுவேலி மற்றும் புத்தூர் பகுதி மாட்டி றைச்சி விற்பனை நிலையங்களுக்கு மாட்டி றைச்சியை தயார் செய்யும் கொல்களம் கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக எந்தவித மான கண்காணிப்புக்கும் உள்ளாகாத நிலையில் பயன்படுத்தப்படுகிறது.

இது தொடர்பில் சுகாதாரப் பகுதியினர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மாடு வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் கொல்களம் உரிய சுகாதார நிலையில் உள்ளது என்பதை உறுதி செய்வதற்கு சுத்தமான நீர்ப் பயன்பாடு, கொல்களத்தைச் சூழ கட்டாக் காலி நாய்கள் செல்ல முடியாத அளவுக்கு பாதுகாப்பு வேலி, கொல்களக்கழிவுகளை உரிய முறை அழித்தல், துர்நாற்றம் இல்லாத சூழல் உட்பட 20 க்குக் குறையாத அம்சங்கள் உரிய முறையில் பேணப்படல் வேண் டும்.

கொல்களத்தில் இறைச்சிக்கு வெட்டப்படும் மாடு 24 மணி நேரத்துக்கு முன்னர் உரிய தொழுவத்தில் காட்சிப்படுத் தப்பட வேண் டும். கால்நடை வைத்தியரின் உடற் கூற்று அறிக்கை பரிந்துரை பெறப்பட வேண்டும்.

கொல்களத்தில் இறைச்சி தயார் செய்யப்பட்ட பின்னர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அதனை உறுதி செய்து இறைச்சியில் முத்திரை பதிக்க வேண்டும்.

இவ்வாறான நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படாமல் கொல்களத்தில் மாடு வெட்டப்பட்டு அச்சுவேலி-புத்தூர் மாட் டிறைச்சி விற்பனை நிலையங்களில் விற் பனை செய்யப்படுவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் வலி.கிழக்கு பிரதேச சபைக்கும் வலி.கிழக்கு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக் கும் முறையீடு செய்த போதிலும் அது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள் ளப்படவில்லை என தெரிவிக் கப்படுகிறது. (வ-11)



# வாழ்வக நிறுவுநர் தினமும் நினைவுப் பேருரையும்

சுன்னாகம் மருதனார்மடத்தில் அமைந்துள்ள 'வாழ்வகம்' நிறுவனம் வெள்ளி விழா ஆண்டில் கால்பதிக்கின்றது. அதனையொட்டி நாளை புதன்கிழமை காலை 8.45 மணிக்கு நிறுவுநர் நினைவு நாளும் நினைவுப் பேருரை நிகழ்வும் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனும், கௌரவ விருந்தினராக கலாநிதி ஆறு. திருமுருகனும் கலந்துகொள்வர். நினைவுப் பேருரையை யாழ்.போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் வைத்தியக் கலாநிதி மு.மலரவன் ஆற்றுவார். நிகழ்வில் வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ந-86)

## தேசிய நிலை சமூக விஞ்ஞானப் போட்டி

தென்மராட்சி, செப்.10

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தேசிய நிலை சமூக விஞ்ஞானப் போட்டிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. ஏற்கனவே நடைபெற்ற மாகாண நிலைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களை தேசிய நிலைப் போட்டிகளில் பங்குபற்ற அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, மிருசுவில் அ.த.க.பாடசாலை, மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம், கைதடி- நுணாவில் அ.த.க.பாடசாலை, கைதடி- நாவற்குழி அ.த.க.பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களை தேசிய நிலைப்போட்டிகளுக்குத் தயார்ப்படுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

## சொந்த ஓட்டோவை அடித்து உடைத்த இளைஞர்

வலி.வடக்கு, செப்.10

ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த இளவயது ஓட்டோச் சாரதி ஒருவர், தனது சொந்த ஓட்டோவை கற்களால் அடித்து உடைத்த சம்பவம் அண்மையில் நடைபெற்றுள்ளது.

ஓட்டோவை உடைத்துச் சேதப்படுத்தியதுடன், அவர் தனது உயிரையும் மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார். அந்த இளைஞர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (ஓ-86)

---

**90ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



தோற்றம்
08★07★1978

மறைவு
12★06★2013

அமரர்
**இரத்தினவேல் செந்தூரன்**

அன்புச் செல்வமே!
நீங்கள் இருந்தபோது எம்மிடம்
இல்லாதது ஒன்றுமில்லை
இப்போது இல்லாத போது எம்மிடம்
இருப்பது ஒன்றுமில்லை.
உங்கள் பிரிவைத் தாங்க முடியாது
மாளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் உங்கள்
அன்புத் தங்கை செவ்வந்தியும் அம்மாவும்

எங்கள் செல்வம் எம்மைப் பிரிந்து சென்ற நேரம் எமக்கு உடன் உதவியோர், அஞ்சலி செலுத்தியோர், கடிதம், தொலைபேசி, தொலைநகல், மூலம் துயரம் பகிர்ந்தோர், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் அனைவருக்கும் எம் இதயம் நெகிழ்ந்த நன்றிகள்.

132/9, GPS றோட்,
கல்வியங்காடு.

(31848)(5.6.3)

குடும்பத்தினர்.

---

**4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அன்னை மடியில்
31.10.1978

ஆண்டவன் அடியில்
23.09.2009
திதி:பஞ்சமி

அமரர்
**கந்தசாமி பிரபாகரன்**

அன்பின் ஒளி விளக்காய் பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் நித்திய புன்னகை நிலவே
நினை இழந்து.....ஆண்டு நான்கு ஆனதுவோ
ஆறவில்லை எம்துயர் பிரபாவே! வெய்துயிர் புலம்புகின்றோம்-எம்
வேதனை நீக்கிட பிரபா நீ விண்ணைத் தாண்டி வருவாயா?

குடமியன்,
வரணி.


(சி/11956)(3.4.6)

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்
தகவல்: யசிகரன் (தம்பி)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

**வீட்டுக் கிருத்திய அழைப்பு**



திருமதி இராசம்மா
இராசையா

மண்ணில்
07✻08✻1922

விண்ணில்
21✻08✻2013

கடந்த 21.08.2013 அன்று இறைபதமெய்திய எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (11.09.2013) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
தட்டாதெரு, சங்கத்தானை,
சாவகச்சேரி.

(சி/2749)(7.6.3)

குடும்பத்தினர்.

---

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



திருமதி
**கௌரிநாயகி நேசராசா**

மலர்வு
18.06.1946

உதிர்வு
23.08.2012

ஆண்டு ஒன்று ஓடிப் போனது
ஆறாத துயர் மட்டும் இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும்
அலை கொண்டு போனாலும்
அம்மையே எங்களோடுதான்
என்றும் வாழ்ந்திடுவீர்கள்
வருடங்கள் பலவானாலும்

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

(சி/11451)(45.6.3)

---

**36ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



திருமதி **நாகரத்தினம் தர்மலிங்கம்**

தோற்றம்
26.06.1924

மறைவு
21.08.1977

திதி
10
*
09
*
2013

தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை
என்னும் நல்வாக்கிற்கமைய
ஐயிரண்டு திங்கள் சுமந்து
எங்களை உருவாக்கி திருவாக்கிய
உத்தமதாயே!
எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டிய
எங்கள் உயிரிலும் மேலான தெய்வத்தாயே!
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
உங்களை இழந்த துயரம்
என்றும் எம்மை விட்டு நீங்காது
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

கணவர், மகன்மார்கள், மருமகள்மார்கள்,
பேரப்பிள்ளைகள்.

த. சிவானந்தகுமார் (மகன்)
இல.01, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை விடுதி,
மின்சார நிலைய வீதி, திருகோணமலை.
தொ.பே. 026 222 4217, 077 900 7118

(c/11436)(5.6.3)

# இரத்த மாற்றீடு இன்றி குடல் மாற்று சத்திர சிகிச்சை

**சம்மாந்துறை வைத்தியசாலையில் சாதனை**



சம்மாந்துறை.செப்.10
இரத்த மாற்றீடின்றி குடல்மாற்று சத்திர சிகிச்சையை மேற்கொண்டு சம்மாந்துறை வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் ஏ.டபிள்யு.எம்.சமீம் சாதனை படைத்துள்ளார் என்று கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையின் அதிகாரி ஏ.எல்.எம்.நஸீர் தெரிவித்தார்.

இது குறித்து நஸீர் தெரிவித்ததாவது:-

வைத்தியத்துறையில் இவ்வாறான சத்திரசிகிச்சை மேற்கொள்வது இதுவே முதற்தடவையாகும். இவ்வாறான சத்திரசிகிச்சை நடைபெற்றபோது இறப்புக்கள் இடம்பெற்ற சம்பவங்களே அதிகம் உண்டு.

ஆனால் இந்தத் தடவை சத்திரசிகிச்சை நடைபெற்ற நோயாளி சுகதேகியாகவுள்ளார்.- என்றார்.

சத்திரசிகிச்சை நிபுணர் சமீம் இதற்கு முன்னரும் சில வைத்திய சாதனைகளை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-10)

# கல்வித்துறைச் சிக்கல்களை ஆராய்வதற்கு விசேட குழு

கொழும்பு, செப். 10
கல்வித்துறையில் நிலவும் தொழில் சார் சிக்கல்களை ஆராய்ந்து அறிந்து 30 நாள்களுக்குள் அவற்றுக்கான தீர்வு, யோசனைகளை முன்வைப்பதற்கு ஜனாதிபதியின் உத்தரவு மூலம் விசேட குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர்களுக்கான அலுவலகச் செயலரான மஹிந்த மடிஹேவா தலைமையிலான இந்தக் குழுவில் கல்விச் செயலர் அநுர திஸாநாயக்கா, முன்னாள் கல்விச் செயலர் ஆரியரத்ன ஹேவகே, சம்பளங்கள் மற்றும் புள்ளிவிவர ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், முகாமைத்துவ சேவைகள் திணைக்கள மற்றும் நிர்வாக சேவைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளும் உள்ளடங்கியுள்ளனர்.

நியமிக்கப்பட்டுள்ள இந்த விசேட குழு முதற்தடவையாக வெள்ளிக்கிழமை கூடியுள்ளதோடு அதன் போது ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடியுள்ளது. (ச-22)

# அமைச்சரவையில் இருந்துகொண்டு அனைத்தையும் பேசமுடியாது

**ஹக்கீம்**

> பேசித் தீர்ப்பதை விட சந்தர்ப்ப சூழ்நிலைகளை அனுசரித்து அதற்கேற்ப பேசுவது தான் புத்திசாலித்தனம்.



கொழும்பு,செப்.10
நான் எதிர்க்கட்சியிலும் இருந்துள்ளேன்; அரசின் அங்கத்தவனாகவும் இருந்துள்ளேன்; சுயாதீன முடிவெடுக்கக் கூடிய நான் அரசின் பங்காளியாகவும் இருந்துள்ளேன்.

அவை அனைத்திலும் ஒரே விதமாக என்னால் பேச அல்லது நடந்து கொள்ள முடியாது. எதிர்க்கட்சியில் இருந்தபோது பேசிய பேச்சுக்களை அமைச்சரவையில் அங்கத்தவனாக இருந்து கொண்டு பேச முடியாது. எனவே சந்தர்ப்ப சூழ்நிலைகளை அதிகரித்து செய்ய வேண்டியவற்றை நான் செய்துதான் இருக்கிறேன்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

'கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உணர்ச்சி ததும்பும் வசனங்களை விட எந்த நேரத்தில் எது செய்ய வேண்டுமோ அதனை மேற்கொள்ளும் பக்குவம் எம்மில் வளர வேண்டும். இலங்கையிலுள்ள சக்திமிக்க ஒரு அமைப்பான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதனைச் செய்து வருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று 8 நாடாளுமன்ற அங்கத்தவர்களையும் 40 இற்கு மேற்பட்ட உள்ளூராட்சி சபை அங்கத்தவர்களையும் ஐந்து உள்ளூராட்சி அமைப்புக்களின் தலைவர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

எமது கட்சி பல லட்சம் மக்களின் வாக்கு வங்கியைக் கொண்ட ஒரு அமைப்பாகும். எனவே எமது அமைப்பை எவரும் வெறும் கிள்ளுக் கீரை யாக எடைபோட முடியாது.

உணர்ச்சிவசப்பட்டு கடும் வார்த்தைகளைப் பேசி மக்களை மகிழ்விக்க முடியும். அப்படி பேசித் தீர்ப்பதை விட சந்தர்ப்ப சூழ்நிலைகளை அனுசரித்து அதற்கேற்ப பேசுவது தான் புத்திசாலித்தனம்.

இன்று சில அரசியல் சக்திகள் எதை எடுத்துக் கொண்டாலும் அதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசை விமர்சித்து வருகின்றன. அப்படி நாம் எதிர்மறையாக எதனையும்செய்தவர்கள்அல்ல. ஆனால் அண்மித்த காலப் பகுதியில் அரசு சில நெருக்கடிகளை சந்தித்தது. அப்படியான நேரங்களில் அதற்கு உதவு வது ஒரு புறம் கூட்டுப் பொறுப்புடன் மறுபுறம் நாம் நடந்து கொள்ளவேண்டி உள்ளதே தவிர விமர்சிக்கும் கோணம் தவறானது.-என்றார். (ச)

## எரிகாயம்

யாழ்ப்பாணம்.செப்.10
கட்டுவன்- மல்லாகம் வீதியில் அமைந்துள்ள வைரவர் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆலயச் சூழல் துப்புரவுப் பணியின் போது பற்றைகளை எரியூட்ட மண்ணெண்ணெய் எனரின்னரை ஊற்றியவர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுபின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ந-86-36)

# மரண அறிவித்தல்

## ஆசீர்வாதம் ஜோர்ச் குலேந்திரன்



யாழ். கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோர்ஜ் குலேந்திரன் நேற்று முன்தினம் (2013.09.08) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் மற்றும் ஞானம்மா தம்பதியினரின் அன்பு மகனும், மரிய இம்மாக்குலேற் சுசிலாவின் (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், அருளானந்தம், திரேஸ்கமலா, அன்ரன், நித்தியானந்தம், யேசுதாசன் ஆகியோரின் சகோதரனும், அற்புதலீலா, கமலம், விமலா ஆகியோரின் மைத்துனரும் சனோஜனின் தொட்டப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (10.09.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித கதிரையன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஜோ.கு.ம.இ.சுசிலா
(மனைவி)

சில்லாலை. (31582) (7.6.3)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மழலையாய் மண்ணில்
18.05.1981

தெய்வமாய் விண்ணில்
10.09.2010

அமரர் **இராசரத்தினம் செந்தில்பிரகாஸ்**

ஆண்டுகள் மூன்று சென்றதடா
ஆறவில்லை எங்கள் மனம்
அன்று நிஜமாய் நின்றாய் இன்று
நிழலாய்த் தோன்றி மறைந்ததேன்
என்றும் உம் நாமவரிகளுடனே
எங்கள் வாழ்க்கைப் பயணம் தொடரும்!
என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (F/11554)(4.4.1)
குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
12.08.1961

உதிர்வு
13.09.2010

அமரர்
**கந்தையா டவுலேஸ்வரன்**
(உழவு இயந்திர சாரதி)

திதி - ரிஷி பஞ்சமி
10.09.2013

எங்கள் கண்கண்ட தெய்வமே! அப்பா என்று அழைக்க
அன்புடனே எம்மை அரவணைத்தீர்
அன்புமொழி பேசி ஆதரவாய் எமக்கிருந்தீர்
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து வருடங்கள்
மூன்று சென்றதப்பா
ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
மீண்டும் இப்பூவுலகில் பிறப்பீர்கள் எம் அப்பாவாய்
கண்ணீரால் உங்கள் திருப்பாதத்தைக் கழுவுகின்றோம்
விழிகளில் நீர் ததும்ப கைகளினால் பூவெடுத்து
மலர்ப்பாதத்தில் மலர்தூவி உங்கள் நினைவோடு
இந்நாளில் நினைவு கூருகின்றோம்
மீளாத் துயிலில் நீங்களும்
மீளாத்துயரில் நாங்களும்.

கைதடி கிழக்கு,
கைதடி. (F 2748) (7.6.3)

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மராணி தில்லைநாதன்

*(முன்னாள் எழுதுவினைஞர், மீன்பிடிக் கூட்டுத்தாபனம், பேசாலை)*



கோலாலம்பூர் மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இளவாலை பத்தாவத்தையை வதிவிடமாகவும் தற்போது உடையார் வளவு, புன்னாலைக்கட்டுவன் தெற்கினை வாழ்விடமாகவும் கொண்ட பத்மராணி தில்லைநாதன் கடந்த 07.09.2013 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா (மலாயன் ஓய்வூதியர்)- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூதாத்தைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சுப்பிரமணியம் தில்லைநாதனின் (முன்னாள் உரிமையாளர் ஸ்ரீமுருகன் நகைமாடம், சுன்னாகம் ) அன்பு மனைவியும், புவனேஸ்வரி குருகுலசிங்கம், கெங்காதேவி கந்தசாமி, அருந்தவராசா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தங்கம்மா பத்மநாதன் மற்றும் அம்பலவாணர், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் செல்லப்பா, சின்னப்பா ஆகியோரின் மைத்துனியும், வைத்திய கலாநிதி மதுரா சுந்தரவடிவேல் (ஆஸ்திரேலியா), திருமதி சஞ்ஜிதா சடகோபன் (நன்னடத்தை உத்தியோகத்தர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வ.மா), திருமதி துஷிதா பகிதரன் (ஆசிரியர், யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாநிதி.கு.சுந்தரவடிவேல் (பொறியியற் பீட விரிவுரையாளர், ஆஸ்திரேலியா), க. சடகோபன்( அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண திட்டமிடல் செயலகம்,வ.மா), ஏ.பகிதரன் (ஆசிரியர், கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி) ஆகியோரின் மாமியும், அபிநயா (ஆஸ்திரேலியா) வின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2013) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் ந.ப 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடையார் வளவு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
தொ.பே-021-224 0943 (31640)(4.6)

தகவல்:
சு.தில்லைநாதன்
(கணவர்)

# After A/Level's

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு IT டிப்ளோமா



DiTEC INTERNATIONAL **Diploma in Information Technology**

Duration : 4 months — Free Text Books

*With an International Certification (Edexcel - UK)*

FREE DVD *with Role-play Videos* — **Diploma in English** (DiE)

Duration : 4 months — Free Text Books

## கற்கைநெறியின் சிறப்பம்சங்கள்

- 10 பாட டிப்ளோமாக்கள் உள்ளடங்கியது
- பாடப்புத்தகங்கள் இலவசம்
- அனுபவமிக்க விரிவுரையாளர்கள்
- 2012ம் வருடம் 20,000 மாணவர்கள் பெற்றுக்கொண்ட தகமை
- ESOFT இன் 10 பாட டிப்ளோமாக்கள் சான்றிதழுடன் Edexcel UK, BCS-UK போன்ற பிரித்தானிய சான்றிதழ்களையும் பெறமுடியும்.

**FREE Pendrive**

சர்வதேச தரம்வாய்ந்த மேலும் 03 டிப்ளோமாக்கள் மற்றிலும் இலவசம்

பாடநெறிகள் தொடர்பாகமேலதிக தகவல்களை தெரிந்துகொள்வதற்கு உங்கள் பெயர் மற்றும் பாடநெறியினை கீழுள்ள இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**077 990 56 11**

**புதிய பிரிவுகள்**

**2013.09.11 காலை 9 : 00 மணி**

Accelerated Skills Acquistion Program

Diploma in Computerized Accounting

Banking in Financial Accounting

ESOFT — *Shaping Lives, Creating Futures.* — ESOFT METRO CAMPUS — Sri Lanka's Largest IT Education Network

**ESOFT METRO CAMPUS - JAFFNA**
No.137, K.K.S Road, Jaffna | Tel: 021 222 4142 | 077 309 9 308

| KLINOCHCHI BRANCH | NELLIADY BRANCH |
| --- | --- |
| 01, Kanagapuram Rd, Kili \| 021 228 5444 | 151, Jaffna Rd, Nelliady \| 021 222 4940 |

# பாராட்டி வாழ்த்துகின்றோம்






செல்வி

## அருள்நேசன் பிரஷ்ணவி

(B.Sc. (SURVEYING)

**இளமானி அளவையியல் விஞ்ஞானம்**
**இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம்**

அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பிரமந்தனாறு கிளிநொச்சியை ஆரம்ப பாடசாலையாகவும் வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் உயர்தரம் கணிதப்பிரிவில் கற்று இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் 06.09. 2013 பட்டத்தை பெறும் இவர் அருள்நேசன் (பொ.மு.உதவியாளர், நில அளவைத் திணைக்களம், வவுனியா)– சசிகலா தம்பதியரின் புதல்வியும் அனோஜனின் சகோதரியும் தென்புலோலி நேசவாசா வேலுப்பிளை – பார்வதிப்பிள்ளை தம்பதியரினதும் நெடுந்தீவு 5ஆம் வட்டாரம் பசுபதி – சின்னமணி தம்பதியரின் பேர்த்தியும் ஆவார். இவர் கல்வியில் மேன்மேலும் உயர்ந்து பல சிறப்புகள் அனைத்தும் பெற்று வாழ வவுனியா முதிரந்தோட்டம் தேடிவந்த பிள்ளையார் அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்*

*செபநேசன் (தபால் அதிபர், வவுனியா), சூரியகலா, ரங்கநாதன். நேசமாலினி (சுவீடன்), பத்மசீலன் (C.E.B.நெல்லியடி), நேசகாந்தி (புலோலி), ச.சிவரத் தினம் (ஒய்வுபெற்ற பொது முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம், புலோலி), கந்தசாமி. பரமேஸ்வரி (பிரமந்தனாறு), இரவீந்திரன். மகேஸ்வரி (ஆசிரியர், பிரமந்தனாறு), புவீந்திரன். சைவசிறி (பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (ஆய்வுகூட உதவியாளர், தர்மபுரம் மகா வித்தியாலயம்), சந்திரகலா (பிரமந்தனாறு), புவனேந்திரன். தமிழ்ச்செல்வி (லண்டன்), குணச்சந்திரன், புஸ்பகலா (சுவிஸ்), காந்திமதி சண்முகம் (ERPO, கரைச்சி பிரதேச செயலகம், கிளிநொச்சி), அற்புதநாயகி (பாலர்பாடசாலை ஆசிரியர், பிரமந்தனாறு)*


**நிலஅளவைத் திணைக்கள விடுதி வவுனியா.**

# ஐக்கிய தேசியக் கட்சியின் மாபெரும் பிரசாரக் கூட்டம்



**இடம்** :- நல்லூர் மைதானம்
[சங்கிலியன் பூங்கா [சங்கிலியன் சிலை அருகில்]

**காலம்** :-10.09.2013
செவ்வாய்க்கிழமை **மாலை** 5 மணிக்கு






சொற்பெருக்காற்றுகிறார்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்
**கௌரவ ரணில் விக்கிரமசிங்க**

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு.ரவி கருணாநாயக்கா**

நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு.டி.எம்.சுவாமிநாதன்**

ஐக்கியதேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளர்
**தியாகராஜா துவாரகேஸ்வரன்**



காரைநகர் பிரதேசசபை உறுப்பினரும் வேட்பாளருமான
**கணேசபிள்ளை பாலச்சந்திரன்**

பிரபல **சிம்பொனி** இசைக்குழுவின்
**இன்னிசை கானங்கள்**

பிரபல பாடகர்கள் சுகுமாரன், இசையமுதன் இன்னும் பலர் அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றோம்.

(சி/11961)

# இராணுவத்தினரே உஷாரடையுங்கள் மீண்டுமொரு போருக்கு அறைகூவல்

## தமிழ்க் கூட்டமைப்பு விடுக்கிறது என்கிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, செப்.10

"மீண்டுமொரு போருக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது. நாம் அதை விரும்ப வில்லை. எனினும் கூட்டமைப்பின் முதல்வர் வேட்பாளர் விக்னேஸ்வரன் இவ்வாறான சவாலை விடுத்திருந் தால் அதை நாம் நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறோம். கூட்டமைப்பு மறுபடியும் நந்திக் கடலுக்கு தமிழர்களை அழைத்துச் செல்லப்பார்க்கிறது. எனவே, பிரிவினை வாதத்திற்கு எதிரான சிங்கள மக்களும், போர் காலத்தில் தீவிரவாதத்தை எதிர்த்த அமைப்புகளும், இராணுவத்தினரும் உடனே உஷார் அடைய வேண்டும்."

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்றுத் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதன் போது இவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் அவர்கள் இன்னமும் திருந்தவேயில்லை என்று தெரிகிறது. யுத்தத்தின் போது ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பொது மக்கள் நிராயுதபாணிகளாக இறந்தார்கள் என்றும் 70 ஆயிரத்துக்கும் அதிகமான பொது மக்கள் இறுதி யுத்தத்தின்போது இறந்தனர் என்றும் கூட்டமைப்பினர் சர்வதேசத்தினரிடம் கூறியுள்ளனர். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான கருத்துகள். பாதுகாப்புஅமைச்சும், அரசும் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் இறுதிப்போரின் போது 2007 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆண்டு வரையிலும் 7 ஆயிரம் மக்களே இறந்துள்ளனர். அதுவும் புலிகள் அடங்கலாகத்தான் இந்தக் கருத்துக் கணிப்பு. அப்படியானால் 2 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே இறந்திருக்கக் கூடும்.

அதுவும் இருதய வலி, நோய், பயம் போன்றவற்றாலும் இறந்திருக்கலாம். அப்படியிருக்கையில் 7 ஆயிரத்திற்குப் பின்னால் அப்படியே ஒரு பூச்சியத்தை சேர்த்து கூட்டமைப்பினர் சர்வதேசத்தினரை ஏமாற்றியுள்ளனர்.

இந்த முப்பது வருட காலங்களில் புலிகள் செய்த ஏதாவது ஒரு அசம்பாவிதத்தையேனும் கூட்டமைப்பினர் கூறியிருப்பார்களா? இல்லை.

அதை விடுத்து இராணுவத்திற்கு தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.



புலிகள் ஒரு விடுதலை அமைப்பு, வடக்கை தனி நாடாக மாற்ற வேண்டும் போன்ற ஐந்து கோரிக்கைகளை சர்வதேசத்திடம் தமிழ் கூட்டமைப்பினர் விடுத்துள்ளனர்.

இதுபோன்ற செயற்பாடுகள் அனைத்தும் துவேசம் மிக்கனவாகும். இவர்கள் வெளியிட்டுள்ள விஞ்ஞாபனத்தின் மூலம் மீண்டும் ஒரு பெரும் போருக்கு, மீண்டும் ஒரு நந்திக்கடலிற்கு தமிழ் மக்களை அழைத்துச் செல்வதே விக்னேஸ்வரனின் நோக்கமாகும்.

எம்மைப் பொறுத்தவரை நாம் இந்தச் செயற்பாட்டுக்கு ஒரு போதும் ஆதரவளிக்க மாட்டோம். நாம் அதை விரும்பவுமில்லை. ஆனால், விக்னேஸ்வரன் எமக்கு இவ்வாறான சவாலை விடுத்திருந்தால் அதை ஏற்கவும் நாமும் தயாராகவே உள்ளோம்.

இதற்காக யுத்த காலத்தில் தீவிரவாதத்தை எதிர்த்த அமைப்புகளும், பிரிவினை வாதத்தை விரும்பாத சிங்களவர்களும், இராணுவத்தினரும் உடனடியாக உஷார் அடைய வேண்டும். கூட்டமைப்பினர் இன்னமும் திருந்தவே இல்லை.

இவர்களால் நாட்டின் சமாதானத்திற்கும், அபிவிருத்திக்கும் பாரிய அச்சுறுத்தல் உள்ளது.

இப்படியெல்லாம் நடைபெறும் என்று ஊகித்துத்தான் நாம் மாகாண சபை முறைமையை எதிர்த்தோம். அப்படியல்லாவிடின் 13 ஆவது திருத்தத்திலுள்ள முக்கிய 5 அதிகாரங்களை நீக்க அரசிடம் கோரிக்கை விடுத்தோம். ஆனால் அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காததால் தெரிவுக் குழுவிலிருந்து விலகுகிறோம்" என்றார். (த)

# பஸிலின் முன்னிலையிலேயே முள்ளிவாய்க்கால் அவலங்கள்

## அவிழ்த்து விட்டார் குமார் சர்வானந்தா

முள்ளிவாய்க்காலில் குடும்பம் குடும்பமாக மக்கள் கொல்லப்பட்டனர். இந்த அவலங்களை யாராலும் மறக்கமுடியாது. தாய்க்கு முன் ஐந்து பிள்ளைகள் குண்டு வீச்சில் சிதறிப் போயினர். பிள்ளைகளுக்கு முன்னால் தாய் இறந்து போனாள். இப்படி எத்தனை அவலங்கள் நிகழ்ந்தேறின.

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்குமார் சர்வானந்தா.

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் நேற்று திறந்து வைப்பட்டது. இதன் பின்னர் அங்கு இன்னிசை நிகழ்வு நடைபெறும என அறிவிக்கப்பட்ருந்தது.

இசை நிகழ்வுக்கு கூடிய மக்கள் மத்தியில் ஆளும் தரப்பினர் தேர்தல் பரப்புரை செய்தனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, டக்ளஸ்தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இவர்கள் மத்தியில் உரையாற்றிய சர்வானந்தா மேலும் தெரிவித்ததாவது:

இன்று நாம் அமைதிச் சூழலில் இருக்கின்றோம். இப்போது உணர்ச்சி அரசியல் சாத்தியமற்றது. உண்மையான அபிவிருத்தி மற்றும் ஒற்றுமை தன்மையே எதிர்கால வாழ்வைத் தீர்மானிக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு எதையுமே செய்யவில்லை. நான் மக்களோடு மக்களாக நின்று அவர்களுக்கு சேவை செய்தேன்.

> "முள்ளிவாய்க்காலில் எம் மக்கள் குடும்பம் குடும்பமாகக்கொல்லப்பட்டனர். தாய்க்கு முன்னே குழந்தைகள், குழந்தைகள் முன்னே தாய், என்று எத்தனை சாவுகள் நிகழ்ந்தன?

முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்த போது இவர்கள் எங்கு போனார்கள். முள்ளி வாய்க்காலில் எம்மக்கள் குடும்பம் குடும்பமாகக் கொல்லப்பட்டனர். தாய்க்கு முன்னே குழந்தைகள், குழந்தைகள் முன்னே தாய், என்று எத்தனை சாவுகள் நிகழ்ந்தன? இவை எல்லாவற்றையும் கூட்டமைப்பு ஏன் தடுக்கவில்லை?

முள்ளிவாய்க்கால் அழிவின் தொடர்ச்சியாக எமது மக்கள் முகாம்களில் பட்ட துன்பம் சொல்லில் அடங்காதவை. அப்போது நான் மக்களை நேரில் சென்று பார்வையிட்டு உதவினேன். கூட்டமைப்பினர் எதுவுமே செய்யவில்லை என்று முள்ளிவாய்க்கால் பேரவலத்தையே பேச்சு முடியும் வரை பாடினார் குமார் சர்வானந்தா.

அதைப் பார்த்து கொண்டிருந்தார் பஸில் ராஜபக்ஷ. (ஐ-288)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கூட்டமைப்பினர்

மேற்கொண்டனர். வேலணைப் பகுதி ஈ.பி.டி.பியின் கோட்டை. அதற்குள் யாரும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கமுடியாது. அவ்வாறு பிரசாரம் மேற்கொண்டால் கொலை செய்வோம் என்று அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர்.

"கந்தையா மயூரன், கார்த்திகேசு சின்னத்தம்பி ஆகியோரே எனது ஆதரவாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும், அவர்கள் ஈ.பி.டி.பியின் தீவிர ஆதரவாளர்கள் எனவும் அப்பகுதி மக்கள் என்னிடம் கூறியதை அடுத்து நான் அது தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறையிட்டுள்ளேன். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை நடத்தினர் என்று மேலும் கூறினார் விந்தன்.

இச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பியின் முதன்மை வேட்பாளர் எஸ்.தவராசாவைத் தொடர்பு கொடு கேட்டபோது:

வேலணையில் அத்தகைய சம்பவங்கள் எவையும் நடைபெறவில்லை. விந்தன் எம்மீது தேவையற்ற வகையில் வீண் பழி சுமத்துகின்றார். தனக்கு மக்கள் மத்தியில் அனுதாபத்தை ஏற்படுத்திப் பிரபலம் தேடும் வகையிலேயே இவ்வாறு உண்மைக்குப் புறம்பான தகவல்களை அவர் வெளியிடுகின்றார்.

வேலணையில் எவர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை வேலணைப் பிரதேச சபை தவிசாளர் மூலமாக உறுதிப்படுத்தியுள்ளேன். அதுமட்டுமல்லாமது அத்தகைய சம்பவம் இடம் பெற்றிருந்தால் ஊர்காவற்றுறை பொலிஸார் எமக்குத் தகவல் வழங்கியிருப்பர். ஆனால் இது வரை எமக்கு அறியத்தரவில்லை என்றார். (த-400)

### தபால்

இதன் போது அந்தப் பகுதிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஈ.பி.டி.பி சார்பில் போட்டியிடம் வேட்பாளர் ஒருவர் அங்கு பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள் ளார். இது குறித்து உடனடியாகவே கடமையிலிருந்த தேர்தல் திணைக்கள அதிகாரிகளால், உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு தெரியப்படுத்தப் பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற அவர் வேட்பாளரை அங்கிருந்து வெளியேற்றினார்.

அதன் பின்னர் தபால் மூல வாக்களிப்பு சுமுகமாக இடம் பெற்றது. (த-5)

### பொறுப்புக்

கள் சபையின் தலைவர் தலைமையில் நடைபெறும் 24 ஆவது கூட்டத்தொடரின் ஆரம்ப உரையை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நிகழ்த்தினார். நவநீதம்பிள்ளை ஆரம்ப உரையில் ஒருநிமிடம் மட்டுமே இலங்கை தொடர்பாக உரையாற்றினார்.

"இலங்கைக்கு பயணம் செய்த போது இலங்கை அரசு எனக்கு வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவிக்கிறேன். போரின் பின்னர் அங்கு புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மனித உரிமை செயற்பாட்டாளர் கள், ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றனர். மனித உரிமை ஆர்வலர்களைப் பாதுகாப்பதற்கு இலங்கை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

"மனித உரிமைகள் விடயம் குறித்து ஐ.நா. சபையுடன் இணைந்து மனித உரிமைகள் சபை பணியாற்றும். ஐ.நா. செயலர் பான் கீ மூன் தனது அறிக்கை மூலம் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார். அதன்படி 2012 ஜுன் 16 தொடக்கம் 2013 ஜுன் 15 வரை மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல் சம்பவங்கள் குறித்து ஆராயப்பட்டது. மத சகிப்புத் தன்மை இன்மை, நிர்வாக மற்றும் சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமை குறித்து இலங்கையில் ஆராய்ந்தேன். எனது அவதானிப்புகளின் முழுமையான அறிக்கை அடுத்த கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படும்" என்று மேலும் கூறினார் நவநீதம்பிள்ளை. (த-ப)

### தேர்தல்

குற்றம் சாட்டியுள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

"பூநகரியிலுள்ள நல்லூர் மகா வித்தியாலயத்தில் பூநகரி கோட்டக்கல்வி அதிகாரி தர்மரத்தினம் கடமையில் இருந்தார். தபால் மூல வாக்களிப்பு இடம் பெற்றபோது அரச உத்தியோகத்தர்கள் தமக்குரிய தபால் மூலமான இரகசிய வாக்கைப் பதிவு செய்யச் சென்றனர். இதன்போது அவர்களின் வாக்குச் சீட்டுக்களை குறித்த அதிகாரி பார்வையிட்ட பின்னரே வாக்களிக்க அனுமதித்துள்ளார். இதனால் அரச உத்தியோகத்தர்கள் பயம் மற்றும் அசௌகரியங்களுக்கு மத்தியில் வாக்களித்ததாக என்னிடம் தெரிவித்தனர்"

"வாக்கினைப் பதிவு செய்து அதனை தனக்கு காண்பிக்குமாறு கேட்பது தேர்தல் விதி முறை மீறல். முழுங்காவில் மகாவித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை தபால்மூல வாக்களிப்புக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்றைய தினமே வாக்களிக்குமாறு அந்த அதிகாரி வற்புறுத்தியுள்ளார் என்றும் ஸ்ரான்லின் குறிப்பிட்டார்.

இதுதவிர, அரச உத்தியோகத்தர்களுக்குப் தபால் மூல வாக்களிப்புக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டபோதும் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பெயர்கள் பதிவாகாததால் அவர்கள் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. இவை தொடர்பில் தாம் நடவடிக்கை எடுப்பதாகத் தேர்தல்கள் திணைக்களத்தினர் தன்னிடம் தெரிவித்தனர் என்றும் ஸ்ராலின் மேலும் தெரிவித்தார். (ஐ-4-422)

### நவிக்கு

பந்தப்பட்ட விவகாரங்களை சுமுக மாகக் கையாள்வதற்கு ஐ.நா. அளிக்கும் தொழில்நுட்ப உதவிகளை தக்க வகையில் பயன்படுத்துமாறு இலங்கை அரசுக்கு அமெரிக்கா இதில் அழுத்தம் கொடுத்தது.

நேற்று நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 24ஆவது தொடர் அமர்வில் ஜெனிவாவிலுள்ள ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் எலீன் சம்பர்லேய்ன் டொனாஹோ பேசுகையில், "நவநீதம்பிள்ளையின் சமீபத்திய இலங்கைப் பயணத்தை அமெரிக்காவும் பெரிதும் வரவேற்கின்றது" எனத் தெரிவித்துக் கொண்டார்.

தீர்வு காணப்படாமல் விடப்பட்டுள்ள மனித உரிமைகள், நீதி, ஜன நாயக ரீதியிலான நிர்வாகம் ஆகியவற்றை துலாம்பரமான ஆய்வதில் வல்லவர் நவநீதம்பிள்ளை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நவநீதம் பிள்ளையின் சமீபத்திய இலங்கை விஜயத்தை ஐரோப்பிய ஒன்றியமும் பெரிதும் வரவேற்றுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்களுக்கும், நல்லிணக்கப்பாட்டுக்குமான ஆவணக்குழுவின் பரிந்துரைகளையும் கால தாமதமின்றி நடைமுறைப் படுத்துமாறும் இலங்கை அரசுக்கு அது கோரிக்கை விடுத்துள்ளது.

பிள்ளையை சந்தித்த மக்கள் மிரட்டல்களுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர் என வெளியாகியுள்ள தகவல்கள் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் கேள்விகள் எழுப்பியுள்ளது.

இலங்கையில் நவநீதம் பிள்ளையைச் சந்தித்த மக்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள் என வெளியான தகவல்கள் குறித்து ஜேர்மன் கருத்து வெளியிடுகையில், "அதிர்ச்சியூட்டக்கூடியவை" எனக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாவலர்களும், பத்திரிகையாளர்களும் எந்தளவான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதை இந்த மிரட்டல் சம்பவங்கள் துல்லியமாகக் காட்டுகின்றன என ஜேர்மன் தூதுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மிரட்டல் குற்றச்சாட்டுகள், உள்ளூர் மனித உரிமை காவலர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் மீதான தாக்குதல்கள் ஆகியவை குறித்து பதிலளிக்கவேண்டுமென இலங்கை அரசுக்கு ஆஸ்திரேலிய தூதுக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. (த)

### தெளிவான

தூதுக் குழுவின் தலை வருமான ரவிநாத் ஆரியசிங்கவே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இலங்கை மனித உரிமைகளை முழுமையாகப் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை ஆரம்பமான, ஐ.நா மனித உரிமைகள் சபையின் 24 ஆவது பருவகால அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தனது இலங்கை பயணத்தின்போது தன்னைச் சந்தித்த மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும்சமூக ஆர்வலர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படவேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தார். இதற்குப் பதிலளித்தே ரவிநாத் ஆரியசிங்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (த)

### கூட்டமைப்பு

செய்யப்பட்டு ஒரு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் விடுவிக்கப்பட் டுள்ளார்.

கூட்டமைப்பின் சார்பில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடும் மருத்துவர் எஸ். சத்தியலிங்கம் என்பவரே கனகராயன்குளம் பகுதியில் பரப்புரை செய்து கொண்டிருந்தபோது கனகராயன்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்த அவரை பொலிஸார் ஒரு மணிநேரம் தடுத்து வைத்திருந்த பின்னர் விடுவித்தனர்.

இவர் வீடு வீடாகச் சென்று பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-400-422)

### தபால் மூல

தம் வரையிலானோர் நேற்றையதினமே வாக்களித் துள்ளனர் என ஒவ்வொரு மாவட்டத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, சகல தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்ற திணைக் களங்களிடம் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கடமையிலிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-5-7-9 86)

## நேசராஜா ஞாபகார்த்த உதைபந்துத் தொடர்

# வாகை சூடியது ஊரெழு றோயல்

யாழ்ப்பாணம், செப்.10
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் வாகை சூடி வெற்றிக் கிண்ணத்தைத் தன் வசப்படுத்தியது ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும், சென்.மைக்கல் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சையில் இறங்கின.

ஆட்டம் ஆரம்பமானது முதல் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன. ஆட்டநேரம் முடியும் வரை இரு அணிகளினதும் கோல்பெறும்முயற்சிகள்அனைத்தும் தோல்வியடைய, கோல் எதுவும் பெறாதநிலையில் சமனிலையில் முடிந்தது ஆட்டம். அதையடுத்து வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தை தன் வசப்படுத்தியது ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம்.

சிறந்த ஆட்ட நாயகன் விருதை சென்.மைக்கல் விளையாட்டுக் கழக வீரர் சுகிர்தனும், சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை சென்.மைக்கல் விளையாட்டுக் கழக வீரர் ஷெல்ரனும், தொடர் ஆட்டநாயகனுக்கான விருதை ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக வீரர் காந்தகோபனும் பெற்றுக் கொண்டனர்.(ற-23)

### இன்றைய ஆட்டம்

மாங்குளம், செப்.10
நவசக்தி விளையாட்டுக்-கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் பொமர்ஸ் மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:
பி.ப. 4 மணி
கலைமதி 'ஏ' அணி எதிர் தொண்டமானாறு ஒற்றுமை அணி.
பி.ப. 4.45 மணி
ரெட்றேஞ்சர்ஸ் வி.க. எதிர் றேஞ்சர்ஸ் 'பி' அணி.(ற-422)

## புரட்சி வி.க. சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.10
வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் புளியங்குளம் புரட்சி விளையாட்டுக் கழகம், பிரதேச செயலகம், அரச திணைக்கள அணிகளுக்கு இடையே நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் புளியங்குளம் புரட்சி விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவாகியது.

கடந்த சனிக்கிழமை புளியங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புளியங்குளம் புரட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சின்னடம்பன் பாரதி விளையாட்டுக் கழகம் அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புளியங்குளம் புரட்சி விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-23)

### உபகரணம் வழங்கல் இன்று

யாழ்ப்பாணம், செப்.10
அனைத்து கிரிக்கெட் கழகங்களுக்கு யூனியர் கிரிக்கெட் உபகரணம்வழங்கும்நிகழ்வுஇன்று பி.ப. 2 மணியளவில் சிறிலங்கா கிரிக்கெட் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவர் சந்திரநாதன், செயலாளர் விமலதாசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ற-23)

## அல் இக்பால் ம.வி. அணி கரம் தொடரில் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், செப்.10
அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையிலான தேசிய மட்ட கரம் போட்டியில் 15 வயதுப் பெண்கள் பிரிவில் வவுனியா அல் இக்பால் வித்தியால அணி வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது.

இரத்தினபுரி பர்கியூஷன் உயர் தரப் பெண்கள் பாடசாலை அணியை எதிர்த்து விளையாடிய வவுனியா அல் இக்பால் வித்தியாலய அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று பதக்கத்தை தன் வசப்படுத்தியது. (ற-23)

## 15 வயது பெண்கள் பிரிவு கபடியில் நிவசங்க மத்திய கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.10
அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையிலான தேசிய மட்டக் கபடிப் போட்டியில் 15 வயதுப் பெண்கள் பிரிவில் நிவசங்க மத்திய கல்லூரி அணிசம்பியனாகத்தெரிவாகியது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணிக்கும் நிவசங்க மத்திய கல்லூரி அணிக்கும் இடையே இடம்பெற்ற 15 வயது பெண்கள் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் இரு அணிகளும் சமபலத்துடன் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பான இவ் ஆட்டத்தின் முடிவில் நிவசங்க மத்திய கல்லூரி அணி 34:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

19 வயது பெண்கள் பிரிவுக்கான மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெய்யத்த கண்டிய தேசிய பாடசாலை அணி மோதியது.

அதில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 23:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ற-23)

## மாகாணசபைத் தேர்தல் - 2013.09.21
### மத்திய, வடக்கு மற்றும் வடமேல்மாகாண சபைகள்

**வலிமையிழப்பொன்றுக்கு இலக்காகிய வாக்காளர் ஒரு வருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டை அடையாள மிட்டுக்கொள்வதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்கு தேவையான சட்ட விதிகளை ஏற்பாடு செய்தல்**

01. 2011ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட முதன்மைச்சட்டவாக்கத்தின் 38(2) ஆம் பிரிவிற்கமைய எதிர்வரும் தேர்தல்களின் போது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பார்வைப் பாதிப்பொன்றிற்கு அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பொன்றிற்கு இலக்கான வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்வதற்காக உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்லத்தக்க வாறான புதிய சட்ட விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
02. ஆயினும் அவ்வாறு உடனழைத்துச்செல்லும் அவ் உதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்க வேண்டும் என்பதோடு அத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அதே போன்று அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவர் ஒருவராகவோ செயற்படுகின்றவரல்லாதவராகவும் இருத்தல் வேண்டும் மேலும் ஏதேனும் வலிமையிழப் பொன்றிற்கு உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
03. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காக உரிய சட்டத்தின் நான்காம் அட்டவணையூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழொன்றை உரிய வாக்களிப்பு நிலையத்தின் அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. இத் தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களை தேர்தல்கள் நடாத்தப்படவுள்ள மாகாண சபைகளின் அதிகார எல்லைகளுக்குற்பட்ட கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள் முடியும். உரிய தகுதிச் சான்றிதழின் படிவத்தைத் தேர்தல்கள் திணைக்களத்தின் வெப் தளத்திலிருந்தும் (www.selections.gov.lk) பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பார்வைக்குறைபாடுள்ள அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பிற்குள்ளாகிய ஆள், கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப் படிவமொன்றைப் பெற்று அதனை நிரப்பிக்கொடுத்து கிராம அலுவலரின் அத்தாட்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதோடு அதன் பின்னர் அச்சான்றிதழை அரசாங்க வைத்திய அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் வைத்திய அலுவலரினால் வாக்காளர் பரீட்சிக்கப்பட்டு அப்படிவத்தில் வாக்காளரின் தகைமை குறிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும்.
05. வலிமையிழப்பிற்கு ஆளாகிய வாக்காளர் தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனும் ஒரு அடையாள அட்டை மற்றும் இத் தகுதிச் சான்றிதழ் என்பவற்றை எடுத்துக் கொண்டு உதவியாளரையும் உடன் அழைத்துக்கொண்டு வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லுதல் வேண்டும். வாக்களிப்பு நிலைய பணியாற்குழுவினால் வாக்காளரின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வாக்களிப்பு நிலையத்தில் வழமையான நடைமுறையைப் பின்பற்றி வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்படும் என்பதோடு அவ் வாக்குச் சீட்டை அடையாள மிடுவதற்காக உதவியாளரோடு வாக்காளர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத் தப்படுவர். உதவியாளரும் தம்மோடு தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டை ஒன்றை எடுத்துச் செல்லல் இன்றியமையாததாகும்.
06. வாக்களிப்பு நிலையத்தில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்காளரின் தகுதிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படும் என்பதோடு அழைத்து வருகின்ற ஆளிடம் இருந்து தகுதிச் சான்றிதழ் II ஆம் பகுதியில் காட்டப்பட்ட உரிய வெளிப்படுத்துகை பெறப்படும். அதைத் தொடர்ந்து வாக்களிப்பு பணியாற்குழுவினர் ஒருவரோடு வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணியாற்குழுவின் மற்றோர் அங்கத்தினர் ஆகியோர் முன்நிலையில் வாக்குச் சீட்டு அடையாளமிடப்பட்டு வாக்குப்பெட்டிக்குள் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.
07. மேற்குறித்த தகுதிச்சான்றிதழ் ஒன்று இல்லாமல் வாக்களிப்பு நிலையத்துக்கு உதவியாளர் ஒருவரை உடன் அழைத்துச் செல்ல முடியாது என்பது கவனத்தில் கொள்ளப்படுகிறது. வாக்கு அடையாளமிட்டதன் பின்னர் உரிய தகுதிச் சான்றிதழ் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.
08. எவ்வாறாயினும் உதவியாளர் ஒருவரோடு வருவதற்கு ,இயலாத வாக்காளர் ஒருவருக்கு தேவைப்படின் அதற்கு முந்திய வாக்கெடுப்புகளில் போன்றே வாக்கெடுப்பு நிலைய அலுவலர் ஒருவரின் முன்னிலையில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரூடாக தனது வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்ள அவகாசமுள்ளதென்பது அறிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய.
2013 செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி.
(14,15,17,சி,11965)
மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

**மத்திய, வடக்கு, மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தல் - 21.09.2013**
வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய
சுருக்கமான விளக்கம்
வாக்குச் சீட்டின் மாதிரிப் படிவம்

அடியிதழ் இலக்கம்

| | |
|---|---|
| "அ" கட்சி * | |
| "ஆ" கட்சி * | |
| "இ" கட்சி * | |
| "ஈ" கட்சி * | |
| "உ" கட்சி * | |
| சுயேச்சைக் குழு 1 * | |
| சுயேச்சைக் குழு 2 * | |
| சுயேச்சைக் குழு 3 * | |
| சுயேச்சைக் குழு 4 * | |
| சுயேச்சைக் குழு 5 * | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | | | | | | |

★ ஒவ்வொரு கட்சியின் அல்லது குழுவின் சின்னம்.
1. இது வாக்குச்சீட்டின் மாதிரியொன்று மட்டுமே
2. அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள், அவைகளின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்துக்கும் எதிரே வெற்றுக் கூடொன்று உள்ளது. இதில் ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாளமிடலாம். வாக்களிக்கும்போது நீங்கள் விரும்பும் சின்னத்துக்கு எதிரேயுள்ள வெற்றுக்கூட்டில் ''புள்ளடி (X) யிடல்'' வேண்டும்.
3. ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கம். ஒரு வரிசையில் 10 என்றவாறு வாக்குச்சீட்டின் கீழ்ப்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. விருப்பு வாக்கொன்றை அடையாளமிடும் போது, நீங்கள் விரும்பும் வேட்பாளரின் இலக்கத்துக்கு மேலே ''புள்ளடி (X)'' இடலாம். மூன்று வேட்பாளர்களுக்கு மேற்படாதவாறு அதாவது அவ்விலக்கங்கள் மூன்றுக்கு மேற்படாதவாறு உங்கள் விருப்புக்களை அடையாளமிடலாம்.
4. வாக்கொன்று அடையாளமிடப்படாத வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியுமற்றதோடு அல்லாமல் நிராகரிக்கவும் படும். ஆகையினால் முதலில் வாக்கை அடையாளமிட்டு, அதன் பின் விருப்பமாயின் விருப்புக்களை அடையாளமிடுவதும் பொருத்தமாகும் என்பதை தயவுகூர்ந்து நினைவிற்கொள்ளவும்.


தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய,
03.09.2013
(C/11966)(10,16,14)
மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

# ஆஸி. இலகு வெற்றி வீழ்ந்தது இங்கிலாந்து

இங்கிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடரின் 2ஆவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி இலகு வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

ஓல்ட் ட்ரபோர்ட் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது பந்துப்பரிமாற்றத்தின் 4ஆவது பந்திலேயே ஓட்டமெதனையும் பெறாத நிலையில் முதல் இலக்காக ஷோன் மார்ஷை இழந்த ஆஸ்திரேலிய அணி, 21.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 116 ஓட்டங்களுடன் காணப்பட்டது. ஆனால் 4ஆவது இலக்குக்காக மைக்கல்கிளார்க், ஜோர்ஜ் பெய்லி இருவரும் சிறப்பான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தி ஆஸ்திரேலிய அணிக்கு சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெறுவதற்கு உதவினர்.




துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மைக்கல் கிளார்க் 102 பந்துகளில் 105 ஓட்டங்களையும், ஜோர்ஜ் பெய்லி 67 பந்துகளில் 82 ஓட்டங்களையும், ஆரொன் பின்ச் 45 பந்துகளில் 45 ஓட்டங்களையும், ஷேன் வொட்சன் 51 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்டீவன் பின், போய்ட் ராங்கின், ரவி போப்பாரா மூவரும் தலா 2 இலக்குகளையும், ஜேம்ஸ் ட்ரெட்வெல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

316 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 44.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 227 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 88 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

2 இலக்குகளை இழந்து 9 ஓட்டங்களுடனும், 3 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களுடனும் தடுமாறிய அவ்வணி சார்பாக 4ஆவது இலக்குக்காக 59 ஓட்டங்கள் பகிரப்பட்டபோதும், அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொஸ் பட்லர் 65 பந்துகளில் 75 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 66 பந்துகளில் 60 ஓட்டங்களையும், ஒய்ன் மோர்கன் 69 பந்துகளில் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக கிளின்ட் மக்காய் 3 இலக்குகளையும், மிற்சல் ஜோன்சன் 2 இலக்குகளையும், ஜேம்ஸ் போள்க்னர், அடம் வோகஸ், பவாத் அஹமட், ஷேன் வொற்சன் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவானார்.

இந்தத் தொடரின் முதலாவது ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டிருந்த நிலையில், தற்போது ஆஸ்திரேலிய அணி இந்தத் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (ற)

# மகனுக்கு நெருக்கடி கொடுக்காதீர்கள்

## ஊடகங்களைக் கோருகின்றார் சச்சின்

எனது மகனுக்கு யாரும் நெருக்கடி கொடுக்க வேண்டாம் என்று ஊடகங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் சச்சின் டெண்டுல்கர்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன். அவர் கடந்தாண்டு 14 வயதுக்குட்பட்டோருக்கான ஆட்டத்தில் சதம் அடித்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

ஆனால் இந்த ஆண்டு இதுவரை முத்திரை பதிக்கும் வகையில் ஆடவில்லை. இந்நிலையிலேயே எனது மகனுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டாம் என சச்சின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"எனது மகன் கிரிக்கெட்டை நேசித்து விளையாடுகிறான். என்னைப் போன்று அவனையும் ஒப்பிட்டு பார்க்காதீர்கள். சாதாரண சிறுவனைப் போன்று பாருங்கள். பொறுப்புள்ள தந்தை என்ற முறையில் எனது மகனுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டாம் என்று ஊடகங்களை கேட்டுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

மும்பை விளையாட்டு பத்திரிகையாளர் சங்கம் சார்பில் சச்சினுக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழாவின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)




# சம்பியன்சிப் கிரிக்கெட் தொடர் அயர்லாந்து சம்பியன்



சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக கிரிக்கெட் லீக் சம்பியன்சிப் தொடரின் சம்பியனாக அயர்லாந்து அணி தெரிவாகியுள்ளது. ஸ்கொட்லாந்திற்கெதிரான இறுதியாட்டத்தில் இலகுவான வெற்றியைப் பெற்றே அயர்லாந்து அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

அயர்லாந்தின் பெல்பெஸ்றில் இடம்பெற்ற இந்த ஆட் டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 49.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

13 ஓட்டங்களுக்கே முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து தடுமாறியது. இலக்குகளை தொடர்ச்சியாக இழந்ததன் காரணமாக அவ்வணியால் வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை.

> "ஸ்கொட்லாந்திற்கெதிரான இறுதியாட்டத்தில் இலகுவான வெற்றியைப் பெற்றே அயர்லாந்து அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் ஸ்கொட்லாந்து அணி சார்பாக கலம் மக்லியொட் 81 பந்துகளில் 39 ஓட்டங்களையும், றிச்சி பெரிங்டன் 59 பந்துகளில் 35 ஓட்டங்களையும், மற் மச்சான் 46 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அய்ர்லாந்து அணி சார்பாக கெவின் ஓபிரையன், மக்ஸ் சொரென்சன் இருவரும் தலா 3 இலக்குகளையும், ஸ்ருவேர்ட் தொம்ஸன், எடி றிச்சர்ட்ஸன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

166 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 33 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

6 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கை இழந்த அவ்வணி, 2 இலக்குகளை இழந்து 22 ஓட்டங்களுடன் தடுமாறியபோதும், 3ஆவது இலக்குக்காக 69 ஓட்டங்களும், 4ஆவது இலக்குக்காக பிரிக்கப்படாத 75 ஓட்டங்களும் பகிரப்பட்டன.

துடுப்பாட்டத்தில் அயர்லாந்து அணி சார்பாக நயல் ஓபிரைன் 70 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும், எட் ஜொய்ஸ் 49 பந்துகளில் 39 ஓட்டங்களையும், கரி வில்ஸன் 53 பந்துகளில் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்கொட்லாந்து அணி சார்பாக இயன் வோர்ட்லோ 2 இலக்குகளையும், மஜித் ஹக் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தத் தொடர் உப அங்கத்துவ நாடுகளுக்கிடையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# அசத்தினார் செரீனா அடங்கினார் அசரென்கா

அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அசரென்காவை வீழ்த்தி மீண்டும் சம்பியன் பட்டம் வென்றார் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ்.

நியூயோர்க்கில் கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. அதில் மகளிர் ஒன்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் உலகின் முதற்தர வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸும், இரண்டாம் நிலை வீரரான பெலாரசின் அசரென்காவும் மோதினர்.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் முதல் செற்றை 58 நிமிட கடும் போராட்டத்தின் பின்னர் 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் செரீனா வில்லியம்ஸ்.

அடுத்த செற்றில் 4:1 என்ற நிலையில் செரீனா முன்னிலை பெற்றிருந்தபோது, கடும் போராட்டத்தை வெளிப்படுத்திய அசரென்கா 6:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆட்டத்தைச் சமநிலைப்படுத்தினார். மீண்டும் ஆட்டம் டைபிரேக்கருக்குச் சென்றது. அதில் 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று செரீனாவுக்குப் பதிலடி கொடுத்தார் அசரென்கா.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் இறுதி செற்றில் சொதப்பினார் அசரென்கா. அபாரமாக ஆடிய செரீனா வில்லியம்ஸ் 7:5, 7:6, 6:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மீண்டும் சம்பியனாகத் தெரிவானார்.

இது அவரது ஐந்தாவது அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் பட்டம் என்பதும், 17 ஆவது கிராண்ட்ஸ்லாம் கிண்ணம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ற)



# ஆஷஷ் தொடரில் ஸ்ரார்க் இல்லை



ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிற்சல் ஸ்ரார்க் உபாதைக்குள்ளாகியுள்ளார். அதன் காரணமாக ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள ஆஷஷ் தொடரில் அவர் பங்குபற்றுவது சந்தேகத்திற்குரியதாக மாறியுள்ளது.

23 வயதான மிற்சல் ஸ்ரார்க், இங்கிலாந்தில் இடம்பெற்ற 5 ஆட்டங்கள் கொண்ட ஆஷஷ் தொடரில் 3 ஆட்டங்களில் பங்குபற்றியிருந்தார். டெஸ்ட் தொடரின் முடிவில் உபாதை காரணமாக அவர் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பியிருந்தார். இந்நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது அவருக்கு கீழ் முதுகு என்பு முறிவு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அவருக்கு அதற்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மிற்சல் ஸ்ரார்க்கிற்கு ஏற்பட்டுள்ள உபாதை சற்று பாரதூரமானது என்பதால் அவர் நீண்ட காலத்திற்கு கிரிக்கெட் ஆட்டங்களில் பங்குபற்ற முடியாது போகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. உபாதையின் காரணமாக அவர் ஆஷஷ் தொடரில் பங்குபற்ற முடியாது போகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள ஆஷஷ் தொடர் எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இறுதியாட்டத்துக்கு ஆப்கான் தகுதி



தெற்காசிய உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்துக்கு ஆப்கான் அணி தகுதி பெற்றுள்ளது. அரையிறுதி ஆட்டத்தில் நேபாள அணியைத் தோற்கடித்தே ஆப்கான் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

தஸ்றித் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்தன.

ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் ஆப்கான் அணியின் சஞ்சய அஹமடி கோலொன்றைப் பெற்றுக் கொடுத்தார். அதன் பின்னர் இரு அணிகளும் போராடிய போதிலும், இரு அணிகளாலும் கோல்களைப் பெற்றுக் கொடுக்க முடிந்திருக்கவில்லை.

இந்த வெற்றியின் காரணமாக ஆப்கான் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ந)

# தென்னாபிரிக்கா செல்லும் சகீர்

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் தென்னாபிரிக்காவில் பயிற்சிகள் மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளராக சகீர்கான் உடற்தகுதி இல்லாத காரணத்தால் அண்மைக் காலங்களில் இந்திய அணியில் இடம்பெறவில்லை. அதையடுத்து தனது உடற்தகுதியை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக பிரான்ஸ் சென்று 6 வாரப் பயிற்சிகளை மேற் கொண்டிருந்தார்.

இந்நிலையில் தற்போது தனது பந்துவீச்சு திறனை மீண்டும் மேம்படுத்துவதற்காக தென்னாபிரிக்காவுக்குச் சென்று பயிற்சி பெற உள்ளார். கடந்த 6ஆம் திகதியே தென்னாபிரிக்கா செல்ல அவர் திட்டமிட்டபோதும் விசா கிடைக்காத காரணத்தால் முடியாமல் போனது. விரைவில் பயணம் மேற்கொள்ளவுள்ள சகீர்கான், அங்கு 3 வாரங்கள் தங்கியிருந்து இந்தியஅணியின் முன்னாள் பயிற்சியாளர் கேரி கிறிஸ்டனிடம் பயிற்சி மேற்கொள்ளவிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. (ந)

விண்ணப்பம் கோரல்
இலங்கை பட்டயக்கணக்காளர் பரீட்சை
Institute of Chartered Accountants – Sri Lanka

இலங்கை பட்டயக்கணக்காளர் சபை பரீட்சையானது அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர்களை உருவாக்குவதுடன் அதி திறமை வாய்ந்த கணக்காளர்களையும் உருவாக்குகின்றது. இக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

K-AIMS நிறுவனமானது 2009ம் ஆண்டு முதற்தரமான கற்கை நெறியை மாணவர்களிற்கு பெற்றுத்தரும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும்.

நாங்கள் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மூலவளங்களுடனும் அனுபவமும், திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்களுடனும் அதிவிசேடமான கற்பித்தல் முறையை வழங்கி வருகின்றோம்.

உங்கள் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்துடன் கூடிய விண்ணப்ப படிவத்தை 21st September 2013 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

- Foundation Level / CAB I- September 25th முதல்
- Intermediate Level/CAB II- October 14th முதல்

K-AIMS JAFFNA
3-1/2, Sirambiyadi Lane [Stanley Road]
Jaffna
T: 0773 722 104 / 021 221 9422
W: www.k-aims.com
K-AIMS

A/L நிறுத் பின்னர்
HND கல்வியினை
அனுபவமிக்க விரிவுரையாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்



BTEC edexcel HND
in Computing & System Development
in Business Management
ஒவ்வொரு பிரிவிலும் இரு பட்டத் தகைமைகள்
36+ ஆண்டுகள் ஒருங்கிணைந்த விரிவுரை அனுபவம்
நன்மைகள்
- பகுதி நேர அல்லது முழு நேரக்கல்வி
- மறைமுக செலவீனங்கள் இல்லை
- வேலைவாய்ப்புகளுக்கு பரந்த வாய்ப்புக்கள்
- Diploma in English கற்கை நெறி இலவசம்

Edexcel -UK பதிவுகளுக்கான கட்டணம் ரூபா 40,000 இலவசம்
Your Career Pathway
HND 18 Months | Top-up Degree 1 Year | Masters 1 Year
புதிய பிரிவுகள் 14.09.2013 9:00am
Start with pending A/L Results
ESOFT Shaping Lives. Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Tel: 021 222 4142 | 077 309 9 308

JCB இயக்குபவர் தேவை (சாரதி)
மன்னார் மாவட்டத்தில் வேலை செய்யக்கூடிய அனுபவ மிக்க JCB வாகனத்தை இயக்குபவர் தேவை.
தொடர்பு:- 077 4741753

தேவை
உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
20-40 வயதுக்கு உட்பட்ட வர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் தங்களின் சுயவிவரக் கோவையுடன் இன்றும் நாளையும் மு.ப. 10 மணிமுதல் மாலை 4 மணி வரையும் கீழுள்ள முகவரிக்கு சமூகம் தரவும்.



(சி/11960-23-16)
“உதயன் பணிமனை”, 361, கஸ்தூரியார் வீதி,

மாதாந்தம் 250000/- வருமானம்,
உணவு, இருப்பிடம், ரிக்கெற் இலவசம்
முற்றிலும் புதிய வரவு...
6 மாதத்திற்கு ஒரு தடவை இலவசமாக ஊர்வந்து போகலாம்.
2 வருட வீசா, நீடிக்கப்படக் கூடிய உத்தரவாதம்.
வாரத்தில் 4 பேர் மட்டுமே இணைக்கப்படுவர்
டென்மார்க்கில் படிக்க, உழைக்க அரிய வாய்ப்பு.
(காலை 08.30 - மாலை 06.30 வரை)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
adv@uthayan.com
021 567 1111

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.